தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண், 389.

|| श्रीः ||

श्रीमयूरकविप्रणीतं

|| सूर्यशतकम् ||

ஸ்ரீ மயூரகவி இயற்றிய

சூர்யசதகம்

(ஸம்ஸ்கிருதம் — தமிழ் உரையுடன்)

பதிப்பாசிரியர் :

வேதாந்த சிரோமணி, தமிழ் வித்வான்

என். ஸ்ரீநிவாஸன்,

ஸம்ஸ்க்ருத பண்டிதர்,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

விலை : ரூ. 50-0

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	சூர்ய சதகம்
பதிப்பாசிரியர்	:	என். ஸ்ரீநிவாசன்
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்.
வெளியீட்டு எண்	:	389
மொழி	:	சம்ஸ்கிருதம், தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	அக்டோபர், 1998.
தாள்	:	13.7 கிலோ-சேஷசாயி
நூல் அளவு	:	21 X 14 செ.மீ.
பக்கங்கள்	:	224
படிகள்	:	500
எழுத்து	:	16, 12 புள்ளி
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் நூலக அச்சகம்
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	காவியம்
விலை	:	ரூ. 50—00

வெளியீட்டாளர் முன்னுரை

ஆற்றல் மிக்கதொரு கோளாக விளங்குவது சூரியன். ...வின்றி உலகில் எந்தச் செயலையும் செய்யமுடியாது. ... உயிரினங்களே வாழமுடியாது. இதனால்தான் ... மக்கள் சூரியனை தெய்வமாகவே வழிபட்டு ...ன்றனர்.

இத்தகைய ஆற்றல் மிக்க சூரியனையே 'பாடு...ளாக'க் கொண்டு பாடப்பட்டதே "சூரிய சதகம்". ...வடமொழிச் சிற்றிலக்கியமாகவும், தோத்திர ...களம் விளங்குகிறது. இந்த நூலை 7ஆம் நூற்றாண்...ழந்த மயூரகவி என்னும் புலவர் இயற்றியுள்ளார். ...ல்' அச்சில் வெளிவந்திருந்த போதிலும், இதற்குரிய ...நூலான 'ப்ரபாவளீ' என்னும் உரை நூல் இதுவரை ...ப்பெறவில்லை. சரஸ்வதி மஹால் நூலகத்தில் ...ப்படும் ஒரே சுவடியான இந்த உரைநூல் முதன் ...ாக தற்போது அச்சில் வெளிவருவது மகிழ்ச்சிக்குரிய ... இதைப்போலவே 'தமிழில் உரையுடன்' முதன் ...ல் வெளிவருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

...பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் ...பெயர்த்தல் வேண்டும்"

மகாகவி பாரதியார் வாக்கிற்கிணங்க தமிழாக்கம் ...ப்பட்டுள்ளது இந்த சூரிய சதகம்.

இந்த நூலின் 'நூன்முக'த்தில் நவீன விஞ்ஞானக் ...துக்களுடன் 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மயூர ...வின் கருத்தையும் ஒப்பாய்வு செய்து வெளியிட்டுள்ளார் ...ாலின் பதிப்பாசிரியர். இதனால் நமது முன்னோர்கள் ...யல் துறையில்' சிறந்த அறிவுபெற்றவர்கள் என்பதும் ... வாயிலாகப் புலப்படும்: இது ஆய்வாளர்களுக்குப் ...தும் உ...பெரியும் என்று நம்புகிறேன்.

இந்நூலை வெளியிட விரும்பி, பதிப்புப் பணியை இந் நூலக வடமொழிப் பண்டிதர் திரு. என். சீனிவாசன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர் தனது பணியை சிறப்பாக நிறைவேற்றியுள்ளார். பண்டிதர் திரு. என். சீனிவாசன் அவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறந்த முறையில் இந்தநூலை நுண்ணாய்வு செய்த வடமொழி அறிஞர் திரு. சுவாமிநாத ஆத்ரேயர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவர ஏனைய பணிகளை நிறைவேற்றிய நூலக நிருவாக அலுவலர் திரு. என். தியாகராஜன், எம். ஏ., பி. எல்., அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்., அவர் களுக்கும், நூலக அச்சகப் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

இந்த நூலகத்தை செவ்வனே பராமரித்துவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும், கல்வித்துறைச் செயலாளர் திரு. எம். ஏ. கௌரிசங்கர், இ. ஆ. ப. அவர் களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நூல் வெளிவரப் பொருளுதவி புரிந்த "மைய அரசுக்கு" எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நூலக வெளியீடுகளை வாங்கிப் படித்துப் பயன் படும் வாசகர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு இந்த 'சூரிய சதகம்' பெரிதும் துணைபுரியும் என்று கருதுகிறேன்.

து. நா. இராமநாதன், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மஹால் நூலகம்

தஞ்சாவூர்,
17—10—1998

முன்னுரை

இவ்வுலகில் தோன்றிய அனைத்து உயிரினங்களும் நலமுடன் வாழவும், ஆரோக்யமாக வாழவும் உதவி செய்வது சூரியனே. சூரியனின்றி உலகில் எதுவும் நடைபெறாது என்று இன்றைய விஞ்ஞானிகளும் கூறுகின்றனர். இதன் காரணமாகவே உலகில் பல நாடுகளிலும் சூரியனை தெய்வமாகவே கொண்டாடி வருகின்றனர். இத்தகைய சூரியனை வழிபடும் தோத்திர நூலாகவும், காவியமாகவும் அமைந்ததே 'சூர்ய சதகம்' எனப்படும் இந்த நூலாகும்.

இந்த அழகிய நூலுக்குத் 'தமிழில் உரை' எழுதினால் பலருக்கும் பயனளிக்கும் என்று கருதினேன். இதன் காரணமாக இந்நூலகத்தில் காணப்படும் ஸம்ஸ்கிருத உரை சுவடியை ஆராய்ந்தபோது, இவ்வுரை இதுவரை அச்சாக வில்லை என்பதை அறிந்து ஸம்ஸ்கிருத உரையுடன் தமிழ் உரையும் அமைவது பொருத்தமாக இருக்கும் என்று கருதி எனது விருப்பத்தை இந்நூலக நிர்வாகத்திடம் தெரிவித்த போது; எனது விருப்பத்தை நிறைவேற்ற அனுமதி யளித்தனர்.

இந்த நூலைப் பதிப்பிக்கும் பணியை எனக்கு நல்கிய நூலக நிர்வாக இயக்குநரும் மாவட்ட ஆட்சியருமான உயர்திரு. து. நா. இராமநாதன், இ. ஆ. ப., அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் விரைவில் அச்சிடுவதற்கு உதவிபுரிந்த இந்த நூலக நிருவாக அலுவலர் திரு. N. தியாகராஜன், M. A., B. L., அவர்களுக்கும். பதிப்புத்துறை மேலாளர் திரு. அ. பஞ்சநாதன், M. A., M. L. I. S., அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நூலைப் பதிப்பிக்க எடுத்துக்கொண்டபோது உரைச்சுவடியில் காணப்பெறும் பல ஐயங்களையும் நீக்கி, எனக்குத் தெளிவுகொடுத்தவர் திரு. பு. ம. பத்மநாப சர்மா அவர்கள். இவருடைய பழுத்த அனுபவம் எனக்கு மிகவும் பயனளித்தது. அன்னார் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த "சூரிய சதகத்திற்கு" நுண்ணாய்வு செய்தவர் திரு. ஸ்வாமிநாத ஆத்ரேயர் அவர்கள். இவர் தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களின் முன்னோடியாவார். இவர் ஸம்ஸ்க்ருதத்தில் எழுதிய நாடகங்கள், காவியங்கள், மொழிபெயர்ப்புக்கள், சிறு கதைகள், கட்டுரைகள் பல மதிப்புமிக்க பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. இந்த நூலகத்தின் சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியருமாவார். இந்நூலை தக்கபடி நுண்ணாய்வைச் சிறப்பாகச் செய்து கொடுத்த திரு. ஸ்வாமிநாத ஆத்ரேயர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலுக்கு பாடபேதம் பார்க்கும்போது என்னுடன் சுவடியைப் படித்து உதவி புரிந்த இந்நூலக ஸம்ஸ்கிருத பண்டிதர் சிரஞ்ஜீவி அ. வீரராகவன் அவர்கள். அன்னாருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

॥ फलश्रुतिः ॥

प्राचीमुखैकतिलकं
पूर्वाचलशेखरैकमाणिक्यम् ।
त्रिभुवनगृहैकदीपं
वन्दे लोकैकलोचनं देवम् ॥

श्लोकानां लोकभूत्यै शतमिति रचितं श्रीमयूरेण भक्त्या-
युक्तश्चेदं पठेद्यत्सकृदपि पुरुषः सर्वपापैर्विमुक्तः ।
आरोग्यं सत्कवित्वं मतिमतुलबलं कान्तिमायुः प्रकर्षं
[1]भुक्तिं मुक्तिं च शक्तिं सुखमभिलभते सोऽत्र सूर्यप्रसादात् ॥

பலசுருதி:

ப்ராசீ முகைகதிலகம்
பூர்வாசலசேகரைக மாணிக்யம் ।
த்ரிபுவந க்ருஹைகதீபம்
வந்தே லோகைக லோசநம் தேவம் ॥

ச்லோகாநாம் லோகபூத்யை
சதமிதிரசிதம் ஸ்ரீ மயூரேண பக்த்யா-
யுக்தச்சேதம் படேத்யத் ஸக்ருதபி புருஷ:
ஸர்வ பாபைர் விமுக்த: ।
ஆரோக்யம் ஸத்கவித்வம் மதிம் அதுலபலம்
காந்திமாயு: ப்ரகர்ஷம்
புக்திம் முக்திம் ச சக்திம்
ஸுகமபிலபதே ஸோ(அ)த்ர ஸூர்யப்ரஸாதாத் ॥

---

1. विद्यामैश्वर्यमर्थं सुतमपि लभते सोऽत्र सूर्यप्रसादात् ॥

நூற்பயன்

உலக நன்மைக்காக மயூர கவியினால் இயற்றப்பெற்ற இந்த 'சூரிய சதகம்' என்னும் ஸ்தோத்திரத்தை ஒருமுறை யாவது பக்தியுடன் பாராயணம் செய்பவன் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான். மேலும், ஆரோக்யம், கவிதாசக்தி, நல்லறிவு, ஒப்பற்ற வலிமை, ஒளி பொருந்திய உடல், நீண்ட ஆயுள், சகல வித்தைகள், ஆளுமை, செல்வம், புத்திரப்பேறு போன்ற சகல நன்மைகளையும், சூரியனுடைய அருளால் அடைவான்.

॥ श्रीभवानीशङ्करार्पणमस्तु ॥

॥ श्रीवेङ्कटेशप्रसन्नः ॥

சிறப்பாக இந்த நூல் வெளிவர என்னுடன் உழைத்த இந்நூலக அச்சகப்பிரிவு நண்பர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாசகர்களும், ஆய்வாளர்களும் இந்த நூலைப் படித்து இறையருளை பெற விரும்புகிறேன். இதில் காணும் குறைகளைப் பற்றி எனக்கு எழுதினால் அடுத்த பதிப்பு வெளிவரும்போது திருந்திய பதிப்பாக வெளிவர அது உதவியாக இருக்கும்.

N. ஸ்ரீநிவாஸன்,
ஸம்ஸ்க்ருத பண்டிதர்.
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
18—9—98

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
23-10-98

மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

நூன்முகம்

தெய்வங்கள் பற்றி சம்ஸ்கிருத மொழியில் வந்துள்ள இலக்கியங்கள் ஏராளம். வேறு எந்த நாட்டிலும் இத்தனைத் துதிப்பாடல்களை நாம் காணவியலாது.

அங்ஙனம் தோன்றியுள்ள 'தோத்திர இலக்கியங்களில்' "கடவுளே உன்னைப் போற்றுகின்றேன். என்னைக் காப்பாற்று" என்ற முறையில் புனையப்பட்டவைதாம் பெரும்பாலும் உள்ளன. கவிநயமும், கருத்தாழமும் கொண்ட நூல்கள் சில நூறு நூல்கள்தாம் கிடைக்கின்றன. அவற்றிலெல்லாம் பொதுவாக ஆதார சுருதியாக அமைந்த கருத்து ஒன்றுண்டு.

'பரம்பொருள் என்ற ஒன்று, என்றுமே உள்ளது. அது இல்லாத நேரமோ, இடமோ கிடையாது அதற்கு உருவமே கிடையாது. அது சர்வ வல்லமை பெற்றது. எல்லாம் அறிந்தது. அறிவே அதன் வடிவம். அது தானாக இயங்கி உலகமாக விரிந்தது. எங்கும் ஊடுருவி நிற்கிறது. ஆயினும் உலகில் ஒட்டாதது. அதன் சக்தி உலக இயக்கத்தை ஒரு நெறியோடு (Rhythm) ஆட்டிப் படைக்கிறது. அருவமான (அரூபமான) அந்த சக்தி பல சக்திகளாக விரிகிறது' என்று.

உதாரணமாக, 'மின்சாரம்' என்பது பொதுவானதொரு 'சக்தி'. அது பல்பில் (Bulb) ஒளியாக விளங்குகிறது. மின் விசிறியின் வாயிலாகக் காற்றை வீசுகிறது. இயந்திரத்தின் அமைப்புக்கு ஏற்றவாறு விசையாகிப் பற்பல வேலைகளைச் செய்கிறது. சில இயந்திரங்களில்—மிகப் பெரியவைகளில்—அதன் சக்தி அதிகம் உண்டு. சில நுண்ணிய அமைப்புக்களில் கூட அதிக சக்தியும் உண்டு. சில பெரிய அமைப்புக்களில் சக்தி குறைந்தும் செயல்படுகிறது. 'மின்சாரம்' என்ற ஒரே 'சக்தி' இவ்விதம் பலவாறு

செயல்படுவதைப் போல பரம்பொருள் பல நிலைகளில், பல சக்திகளாக மலர்ந்து, பல சாதனைகளைப் புரிந்து, ப்ரபஞ்ச ஓட்டத்தைச் செவ்வனே நடத்திச் செல்கிறது. இந்த சக்தியைத்தான் தெய்வம் என்கிறோம், இப்படி நம் முன்னோர்கள், பரம்பொருளின் சக்தியை பல்வேறு வகைப் பட்ட தெய்வ வடிவங்களாக, தமது யோக பலத்தினாலும், தபோ பலத்தினாலும், ஆத்ம பலத்தினாலும், அருவத்தை (அரூபத்தை) உருவகப் படுத்தினார்கள். இக்கருத்தையே மாணிக்கவாசக ஸ்வாமிகள் திருவாசகத்தில் "ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரந்திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ" என்று தமிழில் பாடி யுள்ளது சிந்திக்கத்தக்கது

நமது புலன்களுக்கு அகப்படுகின்ற (ஐம்பூதங்களின் சேர்க்கையான) பல வடிவங்களிலுள்ள அதே தெய்வசக்தி இயங்கி அருள் பாலிக்கிறது. பௌதிகமாக நமது புலன் களுக்கு அகப்படுகின்ற வடிவங்களிலும் பரம்பொருள் பரவி நிற்கிறது.

இப்படிப்பட்ட பௌதிக வடிவங்களிலேயொன்று தான் சூரியன். சூரியன் என்றபோது ஒன்பது கோள்களில் ஒன்றாக அன்றாடம் காலையில் உதித்து மாலையில் மறைகின்ற ஒளிக்கோளத்தைத்தான் நாம் பார்க்கிறோம். ஆனால் அந்த ஒளிக்கோளத்திற்கு அளவற்ற சக்தியை அருளுகின்ற அதே சமயம் அதற்கும் அப்பாற்பட்ட பரம்பொருள்தான் 'சூரியன் என்ற தெய்வம்' (அரூபமான) உருவமற்ற பரம்பொருளை உருவமான சூரியனுடைய கோளில் (பிம்பத்தில்) தெய்வமாக பாவித்து வழிபடு கிறோம் என்பதுதான் உண்மை.

இதைப் பற்றி விரிவாகப் பேசுகின்ற வேதங்கள்; ஜ்யோதிர் மண்டலம் என்னும், ப்ரமாண்டமாக, ஐம்பூதத் தொகுப்பாக, நாம் காணுகின்ற பிரபஞ்சத்தை மஹாமேரு பர்வதம் நிலைகுலையாமல் தாங்குகிறது என்றும், அதைச்

சுற்றி சூரிய மண்டலம் வலம் வருகிறது என்றும், நமது சிற்றறிவுக்குப் புலப்படும்படியான வகையில் விளக்கு கின்றன. இந்த விளக்கங்களைப் பௌதிகமாக நாம் காண்கின்ற உலகியலுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இவை பொருந்தாதுதான்.

பௌதிக, ரசாயன ஆராய்ச்சிகளில் நமக்குக் காட்டப் படுகின்ற வரிவடிவங்கள் (Diagrams) நமக்குப் புரிய வைப்பதற்காக வரையப்பட்ட கற்பனைகளே தவிர, அப்படித்தான் அவற்றின் அமைப்பு என்று யாரும் கருதுவ தில்லையே!

ஆனால் ஒன்று — பௌதிகமாக நமக்குத் தெரிகின்ற சூரிய மண்டலத்தை ஆட்சி செய்கின்ற–உருவமற்ற–தெய்வ சக்தியை–ஒரு வடிவத்திற்கு உட்படுத்தி, அதற்குரிய அலங்காரங்கள், ஆயுதங்கள், வாஹனங்கள், அது பவனி வருகின்ற மாட்சிமை, இவற்றை வர்ணிக்கின்ற பாங்கிலே, அந்தத் தெய்வ வடிவம் நமது உள்ளங்களில் பதிந்து, பௌதிக உருவிலேயே காணப்படும் கோளத்திலே அந்த தெய்வ வடிவைத் தியானிப்பதன்மூலம் நமது உள்ளம் பரம்பொருளுடன் தொடர்புகொள்கிறது; பரம்பொருளின் அருளைப் பெறுகிறது என்பதே இந்த பாரத நாட்டின் பண்டைய இலக்கியங்கள் காட்டுகின்ற தத்துவ இயல்.

இந்த முறையிலே சூரிய வழிபாடு, வேதங்கள் காட்டிய வழியிலேயே நமது முன்னோர்களால் கடைபிடிக்கப்பட்டு வந்திருக்கிறது.

பௌதிகமான சூரிய மண்டலத்தின் ஒளிக்கதிர்கள் உலகியல் ரீதியாக நீரை ஈர்த்து, மேகங்களில் சேமித்து, மழை பொழியவைக்கின்றன. பயிர் பச்சைகளுக்கு உயிரூட்டி, வலுவூட்டி வளர்க்கின்றன. "அதன் தெய்வீக சக்தி, மனிதனின் பிர்ம்மரந்திரத்தின் வழியாக இதயநாடி களை உயிர்த்துடிப்புடன் வாழச் செய்கின்றன. யோகப்

பயிற்சியில் முனைந்தவன் ஸுஷும்னா நாடியில் நுழைந்த கதிர்களின் வழியே தன் ஆத்மாவைச் செலுத்தி பிர்மத்துடன் ஒன்றிவிடுகிறான்'' என்று உபநிடதங்கள் கூறுகின்றன. இப்படி பௌதிகமான சூரியனே, தெய்வீகமான சூர்யநாராயணனாக, ப்ரத்யட்ச தெய்வமாக, பாரத மக்களின் உள்ளுணர்விலே ஊறிவிட்டான். எழுத்தறிவு இல்லாத நாட்டுப்புறத்துப் பாமர மக்கள்கூட, காலையில் எழுந்ததும், வாசலில் வந்து கிழக்கு நோக்கி நின்று, சூரியனைப் பார்த்துக் கைகூப்பி வணங்கும் காட்சியை இன்றும் நாம் பார்க்கமுடிகிறது.

ஒளியின் தெய்வம் சூரியன். கண் பார்வைக்கு ஒளி தேவை. ''கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் எதற்கு?'' என்று கேட்பார்கள் மக்கள். இதிலிருந்து அறிவது; கண்ணொளி மங்காமல் இருப்பதற்கு சூரியனை வழிபட வேண்டுமென்பதுவே. இது பாரத நாட்டுப் பண்பும்கூட.

ஆனால், முன்னால் குறிப்பிட்டதுபோல சூரியன் பரம்பொருளின் ஒருவகை விரிவுதான் — என்ற அடிப்படையில், ''சூரியனே பரம்பொருள்'' என்ற கருத்தை ஆதார சுருதியாக வைத்துப் புனையப்பட்டதே இந்த் "சூர்ய சதகம்". சூரியனின் தெய்வத் தன்மையைப் பல கோணங்களில் எடுத்துக்காட்டி, நம உள்ளங்களில் பதியவைக்கிறது இந்த ''சூர்ய சதகம்''. எத்தகைய அழகிய கற்பனைகள்! இயற்கையின் காட்சிகளில் தெய்வத் தன்மையைப் பதிய வைக்கின்றது ''சூர்ய சதகம்''.

சூரியனைப்பற்றிய மயூர கவியின் கற்பனைகள்

சூரிய உதயத்திற்குமுன், இருள் கொஞ்சம் கொஞ்சமாக அகலும்போது. இருளில் கண்களுக்கு மறைந்திருந்த பொருட்களை இனம் கண்டுகொள்கிறோம். வானத்திலே செவ்வொளி படர்கிறது. சற்று நேரத்தில் சூரிய பிம்பம் தெரிகிறது. நீர் நிலைகளில் தாமரைகள் மலர்கின்றன. ஆங்காங்கு மனிதர்களும், பிராணிகளும், செயலூக்கம்

பெறுகின்றனர். இதுதானே அன்றாட நிகழ்ச்சி நிரல்? இந்தச் சாதாரண நிகழ்ச்சிகளே ரசிப்புத்தன்மையற்றவனைக்கூட ரசிக்கவைத்துவிடுமே! இத்தகைய காட்சிகளை காணுகின்றவன், ரசிகனாகவும், கவிஞனாகவும் அமைந்துவிட்டால் கேட்கவாவேண்டும்? இத்தகைய ரசிகராகவும், கவிஞராகவும் அமைந்துவிட்டவரே மயூரகவி. இவர் எத்தனை எத்தனை மாட்சிமைகளை நம் உள்ளங்களிலே பாய்ச்சுகின்றார். "எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா" — என்ற 'பாரதியின் பாடல் வரி' அவ்வளவும் உண்மை என்றல்லவா நிரூபிக்கின்றார் மயூரகவி. இவருடைய கற்பனைக் கவிதைகளிலிருந்து ஒருசில துளிகள்:

சூரியனின் கதிர்கள் நம் கண்களிலே பாயவில்லை. அதோ...அந்தக் குளத்திலே மொட்டுக்களாகத் தலைதூக்கி நிற்கின்ற தாமரைகள் மெல்ல மெல்ல இதழ்களை விரிக்கின்றன. இதோ பார், எங்கள் லக்ஷ்மியை! "தாயே வெளியே வா அம்மா! எல்லோரும் உன்னைக் கண்களால் காணட்டும்" ஏதோ இருட்டுக் குகையில் ஒளிந்திருந்துத் தடுமாறிக்கொண்டிருந்த பிரபஞ்சத்தை, வெளிக்கொணர்கின்றன. இந்தத் தளிர்போன்ற மெல்லிய கதிர்கள் என்று காட்டுகிறார் கவி (சுலோகம் — 2).

கதிர் ஒருபுறம் ஆங்கே ஓடையில் உள்ள தாமரையில். மறுபுறம் வெகுதூரத்திற்கப்பால் பெரிய மலையின் உச்சி முகட்டில் அவை முக்கோப்பு (M) கட்டுகள்போல ஊன்றி நிற்கின்றன. பாவம், சூரியன் அலைந்து அலைந்து கால்கள் (கடுக்கும்போது) வலிக்கும்போது கால்களை (கதிர்களை) அகட்டி நிற்கிறான்போலும் (சுலோகம் — 3). இருட்டுப் போர்வை மூடியதால், பிரபஞ்சம் மறைந்திருக்கிறது. சூரிய ஒளி பரவி அந்த மூட்டத்தைக் கிழித்தெரிகிறது. அதுமட்டுமல்ல, ஊடும் பாவுமாகப் பாய்ந்த சூரிய ஒளிக் கதிர்கள் ஒரு பொன்னாடையைப் புனைந்து பிரபஞ்சத்தின் மீது விசிறி பிரபஞ்சத்திற்கு அழகூட்டுகிறதாம். (சுலோ. 4)

அதோ சூரியனுடைய ரதம் தெரிகிறது. அது கீழ்த் திசையென்ற மங்கையின் நெற்றித் திலகம்போலத் திகழ்கின்றது. அந்த மங்கைக்கு ஆரத்தி எடுத்து மஞ்சள் நீரை வாரி இறைத்தாற்போல பளபளவென்று நீர்த்துளிகள் கதிர்களின் ஊடே தெரிகின்றது. சக்கரவாகப் பறவை தனது பிரிவுத்துயரத்தை நீக்கியதால், சூரியனுக்குத் தனது இமைக்காத கண்களால் நன்றியுடன் அர்ச்சிக்கின்றனவோ? (சுலோகம் 12)

அதோ சூரியனின் இளங்கதிர்கள் வெளிப்படுகின்றன. கைலாயத்தில் பரமேச்வரன் தன் முடியில் அணியாக விளங்கும் சந்திரகலை "பவுஷு" இழக்குமோ என்று கவலைப்படுகிறான். படைத்துக் களைத்துப்போன பிர்ம தேவன் இரவில் தனது இருக்கையான தாமரையிலேயே தூங்கிவிடுகிறான்போலும். தாமரையும் கூம்பிக்கொண்டு (மூடிக்கொண்டு)விட்டது. பிர்மதேவன் அதற்குள் ஒடுங்கிக் கிடக்கவேண்டியதாகிவிட்டது. பாவம்; எப்போது தாமரை மலரும்? என்று ஏங்கிக்கிடக்கிறான். அதோ சூரியனும் உதிக்கிறான். தாமரையும் மலர்கிறது. பிர்மதேவனோ அப்பாடா என்று தன் கால்களை அகட்டிப் போட்டுக் கொண்டு அமர்கிறான். இறைவன் ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஒரு பயம். அது என்ன தெரியுமா? ...... இருளுக்கு நிறம் கருப்பு. இந்தக் கருமையைப் போக்குகிறவன் சூரியன். தனது சியாமளமேனியின் கருமையையும் வெளிரச்செய்து விடுவானோ! என்ற பயம். கண்ணனுக்குத் தன் கருமையில் அவ்வளவு கர்வம். "சூரிய பகவானே! என் கருமையை அவமானப்படுத்திவிடாதே" என்று வேண்டுகிறானோ! (சுலோகம்—16)

சூரிய கிரணங்கள் முன்னே வெளிப்படுகின்றன. இன்னும் சூரிய(பிம்பம்)ன் வெளிப்படவில்லை. அதற்குள் இருள்போன இடம் தெரியவில்லை. (சூடு) சூரிய வெப்பம் இன்னும் பரவவில்லை. ஆங்காங்கே மரங்களும், மலைகளும் மங்கலாகத் தெரிகின்றன. ஆனால் அதற்குள்

மனிதன் அன்றைய கார்யங்களுக்குரிய திட்டம் போட்டு விட்டான். காரணம், சூரியனுடைய முன்னொளியினால் ஊக்கம் பெற்று அவையெல்லாம் நிறைவேறும் என்ற உற்சாகமும் பெறுவதே. (சுலோகம்—28)

ரத்தினங்கள் மக்களின் அலைகளிலே இடம்பெற்று அங்கு மட்டும் ஒளிர்கின்றன. நெருப்பு எரிகிறதே தவிர ஒளிதரவில்லை. சில்லென்று சந்திரன் குளிர்ச்சியை அளித்து மகிழ்வைத் தருகிறானே தவிர ஒளிதரவில்லை. ஆனால் சூரிய கிரணங்களோ ஒளியும் தந்து, உற்சாகமும் தந்து, உற்பத்திப் பெருக்கத்திற்கும் அதிக அளவில் உதவி புரிகின்றது. (சுலோகம்—30)

சூரிய உதயத்திற்குமுன், வானிலே செவ்வொளி படர்கிறது. இதுதான் நாம் பௌதிகமாகக் காணும் காட்சி. இதை தெய்வீகமாகக் காட்டுகிறார் கவி. சூரியனுக்கு, ஏழு குதிரைகள் பூட்டிய ரதம். அதற்கு ஒரு சாரதி. அவனுக்கு அருணன் என்று பெயர். (அருணம் — சிவப்பு; சிவப்பு நிறத்தைப் பெற்றமையால் அருணன் எனப்படுகிறான்).

கச்யபர் என்றொரு முனிவர். அவர் தனது யோக சக்தியினால் சூரியனிடம் வியாபித்துள்ள பரம்பொருளின் தன்மை; சக்தி; அது உலகியலிலே கோள்களின் தலைவனாகச் சாதிக்கும் சாதனைகள் ஆகிய அனைத்தை யும் கண்டறிந்து விளக்கம் கொடுத்தார் கச்யப முனிவர். அதை வேதம் கூறும்போது, "**कश्यप: पश्यको भवति । यत्सर्वं परिपश्यतीति सौक्ष्म्यात् ।** (கச்யப: பச்யகோ பவதி । யத்ஸர்வம் பரிபச்யதீதி ஸௌக்ஷ்ம்யாத் ।)

இம்முனிவருக்கு அதிதி என்ற பெயருடன் மனைவி ஒருத்தி. தெய்வீகமான-சூரியனான பரம்பொருள்-பௌதீக மான சூரியனாக அவர்களுக்குப் பிள்ளையாகப் பிறந்தான். சில குழந்தைகள் தன் தந்தையின் தோற்றத்துடன்

பிறக்கும். சில குழந்தைகள் தாயின் தோற்றத்தையே அச்சாகக் கொண்டு பிறக்கும். இப்படி தனது தாய் அதிதியின் தோற்றப் பொலிவைக்கொண்டு பிறந்த பிள்ளையாதலால் அவனுக்கு ஆதித்தியன் என்றே பெயர். (அதிதிக்கு இன்னும் பல பிள்ளைகளுண்டு. அவர்களுக்கு ஆதித்தியர் என்ற பெயர் கிடையாது. இதையும் கவி பின்னால் 90ஆம் சுலோகத்தில் கூறுகிறார்.)

இந்த கச்யப முனிவருக்கு "விநதை" என்ற மற்றொரு மனைவி. இவளுக்கு இரண்டு பிள்ளைகள், மூத்தவன் அருணன், இளையவன் கருடன். அருணனுக்கு இடுப்புக்குக் கீழே உடல் ஊனம். அத்தனைக்கத்தனை அருணனுக்கு உடலின் மேல்பகுதியில் வீர்யம் — தேஜஸ் — அதிகம், சூரியனுக்கு ஒரு தேரோட்டி தேவை. எவனும் சூரியனை அணுகமுடியவில்லை. அருணனின் தேஜஸ், சூரியனின் தேஜஸுக்கு ஈடுகொடுக்கும் என்று கண்டு, கச்யபர் சூரியனுக்குத் தேரோட்டியாக அருணனை அமர்த்தினார்.

மின் கதிர்களைப் பாய்ச்சி இரும்பில் துளை போடுவார்கள். அந்தத் துளைபோடும் தொழிலாளி (Welder) தனது கண்களைத் தாக்காதவாறு கேடயம் போன்றதொரு சாதனத்தைத் (Cooling glass) தம் கண்களுக்கு முன்னே பிடித்துக்கொண்டே இப்பணியைச் செய்வான். சில சமயங்களில் அந்தக் கேடயம் போன்ற சாதனமும் மின்சார வெப்பத்தில் சிவந்துவிடும், அதுபோல உதயசூரியனை நமது இயற்கைக் கண்களால் அதிகாலையில் காணும் போது—நமது கண்கள் கூசாவண்ணம்—ஒரு செவ்வொளி வட்டம் மறைந்து நிற்கிறதே, அதுதான் அருணனான, சூரிய ரதத்தின் தேரோட்டி. அந்த அருணனை நமக்கு அறிமுகம் செய்துவைக்கிறார் கவி.

"உதயகிரி" என்ற நாடக மேடை—அது இருள் என்ற திரையால் மூடப்பட்டிருக்கிறது. நாடகம் தொடங்கும் போது அத்திரை விலக்கப்படுகிறது. திரைக்குப் பின்னால்

இருந்து புஷ்பாஞ்சலி. மேடை மீது மலர்கள் தூவப்படு கின்றன. மறையப் போகும் நட்சத்திரங்களே அந்த மலர்கள். அந்த நாடக மேடையில் சூரியன் உதிப்பது; ஆகாயத்தில் பரவுவது; மேற்திசையில் சாய்வது; அஸ்தமனம் ஆவது; என்ற நான்கு காட்சிகள் கொண்ட நாடகத்தை நடிக்கப் போகிறான். அவனுக்குக் கட்டியம் கூறிக்கொண்டு இதோ நாடகத்தின் சூத்ரதாரனான அருணன் வருகிறான் என்கிறார் கவி. (சுலோ - 50)

இந்த அருணன் இப்போதுதான் சந்திரனுடைய சில்லென்ற அமுத கிரணங்களை, கொஞ்சம் அதிகமாகவே குடித்துவிட்டான். இதனால் அருணனின் உடலே சில்லிட்டு விட்டது. இதன் காரணமாக அவன் ஒரு 'கணப்பு' (குளிர் காய) மூட்டிக் கொள்கிறான் குளிர் காய்வதற்காக. அந்தக் கணப்புத்தான் சூரிய கதிர்கள். அவன் மார்புக்கு (முன் புறம்) சுரணை பெற்றுவிட்டது. ஆனால் முதுகு இன்னமும் சில்லென்றுள்ளது. இத்துடன் ரதத்திலும் ஏறிவிட்டான். பின்புறம் *சூரியன் உதிக்கும்போதே அருணனுடைய முதுகின் சில்லிப்பைப் போக்கிவிடுகிறான். (சுலோ - 52) என்பதை உலகியல் நிகழ்ச்சிகளுடன் ஒப்பிட்டுக் காட்டு கிறார் கவி.

உதய காலத்தில் சூரியனை வழிபடுவதற்காக இந்திராதி தேவர்கள் காத்திருக்கின்றனர். காத்திருக்கும் தேவர்களை அருணன் விசாரிக்கின்றான். ஓ இந்திரனா ? உமக்கு ஆயிரம் தாமரைக் கண்களா ? அத்தனையும் மலர்ந்து விட்டனவே ! ஹே அக்நி தேவரே ! என்ன, பளீரென்று கண்களில் படமாட்டீரோ ? ஓஹோ ! சூரிய பகவானின் ஒளிக் கதிர்களின் முன்னே உம்முடைய ஒளி மங்கிவிட்டதோ ! யமதர்மராஜனா ! என்ன அய்யா எருமை வாகனத்தில் ஏறிக்கொண்டு வழி நடுவே நிற்கிறீர் ! உமது தந்தை சூரிய தேவன் பவனி வருகிறார். நடுவீதியில் வழி மறைத்திருக்கிறீரே ! உமது வாகனத்தை அப்புறப் படுத்துங்கள். என்ன ! தென்மேற்கு மூலையில் ஒதுங்கி

நிற்கிறீர்கள்? நீங்கள் ராக்ஷஸர்கள் தானே! சூரிய பகவான் உங்களைப் பார்த்துவிட்டார். வருணதேவனா! வாருமையா! இந்தக் குதிரைகள் ஓடிக்கொண்டிருக்கும் போதே சற்று குளிப்பாட்டுமையா; ஓஹோ! வாயுதேவனா? எங்கே! இந்தக் குதிரை வேகத்திற்கு ஈடாக ஓடிவாரும் பார்க்கலாம். குபேரனா? உங்களுடைய செல்வக் கஜானா நல்ல காவலில் உள்ளதா? தெரிவித்துவிடுகிறேன். அடடே! ஈசான தேவனா? தாங்களுமா காத்திருக்கவேண்டும்? அடியேனின் வணக்கத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்'' என்று எண்திசை அதிபர்களையும் விசாரிக்கிறானாம் அருணன். (சுலோகம்—59)

சூரியனுடைய ரதத்தில் ஏழு குதிரைகள் VIBGYOR என்ற ஏழு நிறங்களே அவை. இவ்வண்ணங்களே ஏழு குதிரைகளாக உருவகப்படுத்தப்பட்டுள்ளன என்று கூறுவதுண்டு. ஆனால் அவையெல்லாம் பச்சை நிறமுடையவை என்கிறார் மயூரகவி, (சுலோ. — 46, 47, 60)

மேரு பர்வதத்தின் தாழ்வரையில் இருபுறமும் சுவர்களாகப் படிகப் பாறைகள் நிற்கின்றன. அந்தப் பாதையில் குதிரைகள் செல்கின்றன. அவற்றின் பிரதி பிம்பங்கள் இருபுறமும் சுவற்றில் தெரிகின்றன. 'அவை வேறு குதிரைகள், அவற்றை நாம் விஞ்சவேண்டும்' என்ற வேகத்துடன் குதிரைகள் பாய்கின்றன. மறுபுறத்தில் 'பதுமராகப் பாறைகள்' சுவர்களாக நிற்கின்றன, அவற்றிலே சூரிய ஒளிபரவி வழியெல்லாம் செக்கச்செவேலென்று ஒளிர்கிறது. அதனை மாலை வெய்யில் என நினைத்து, 'எல்லையை அடைந்துவிட்டோம்' என்ற பிரமையில் குதிரைகள் மெல்ல மெல்ல நடைபோடுகின்றன. அதற்குமப்பால் 'மரகதப் பாறைகள்' பச்சைப் பசேலென்று சுவர் வைத்திருக்கின்றன. சுவற்றின் நிறத்தோடு ஒன்றிவிட்ட குதிரைகள் கண்களுக்குப் புலப்படவே இல்லை. ஆனாலும், அவை வழிச் சுவடு மாறுவதில்லை. அன்றாடம் போகின்ற வழிதானே. (சுலோகம்—46)

குதிரைகள் போகின்ற வழியில் தேவர்கள் நின்று வணங்குகிறார்கள். அப்பால் சில குகைகளில் வசிக்கின்ற கின்னரீகள் (குதிரை முகத்தவர்) ஓடிவந்து சூரியனின் குதிரைகளைப் பார்க்கின்றனர். அந்த கின்னரீகளின் முக அழகில் சொக்கிப்போன ரதக்குதிரைகள், வேகம் குறைந்து சற்றுப் பின்னால் திரும்பிப் பார்க்கின்றன. அருணசாரதி சாட்டையைச் சொடுக்குகிறார். ஆயினும் குதிரைகள் தலை தளர்ந்து சற்றுத் திரும்பி கின்னரீகளைப் பார்த்துக் கனைக்கின்றனவாம். (சுலோ. — 48)

சூரிய ரதம் ஆகாய வீதியில் ஒரே நாளில் பூமண்டலத்தைச் சுற்றவேண்டுமே! அதன் வேகத்தில் ரதம் சில சமயம் தரை தட்டுகிறது. அப்போது வழியில் கிடக்கும் மிகப் பெரிய ரத்தினங்களைத் தேர்ச் சக்கரங்கள் பொடிசெய்து விடுகின்றன. அதனால் அந்த ரதம் மிகவும் பளுவுள்ளதாகத்தான் இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. சில சமயம் தரை தட்டாமலேயே பறக்கின்றது. அப்போது மேருவின் உச்சிக்கு மேலேகூட ரதம் பறக்கும். அல்லது அஸ்தமன பர்வதத்தின் அடிவரையில்கூடப் பறக்கும். சூரிய ரதம் அவ்வளவு லேசானதா? ஒன்றும் புரியவில்லையே. (சு. 65)

பரம்பொருளான ப்ரம்ஹம் பிரபஞ்சமாக விரிந்தபோது பிர்ம்மதேவனை பிரபஞ்சத்தைத் தொடர்ந்து படைத்துக்கொண்டே இருக்கவேண்டுமென்றும்; மஹாவிஷ்ணுவை உலகைத் தொடர்ந்து காத்துக்கொண்டே இருக்கவேண்டுமென்றும்; பரமேச்வரனைத் தொடர்ந்து பிரபஞ்சத்திற்கு உபயோகமற்றவைகளை, தனக்குள்ளே அடக்கிக்கொள்ளவேண்டுமென்றும் நியமித்தது. ஆனால் சூரியன் மும்மூர்த்திகளுடைய கடமைகளைத், தானே ஒருவராக நிறைவேற்ற முனைந்துவிட்டார். அவ்வளவு தான், தேவியைவிட்டுக் கணநேரமும் பிரிந்து இருக்கக் கூடாது என்று தன் உடலில் பாதியாகவே ஆக்கிக்கொண்டு கைலாசத்தில் ரமிக்கிறார் சிவபெருமான். கொஞ்சம்கூடத் தயக்கமில்லாமல் மஹாவிஷ்ணு பாற்கடலில் களைத்துப்

போய் சேஷசயனத்தில் ஒய்யாரமாகப் படுத்துகொண்டு விட்டார். பிர்ம்மதேவனோ தாமரைமலரில் அமர்த்து ஜீவனையும், உடலையும் சேர்க்கின்ற யோகமாகிய படைப்பை யோகாப்யாசமாகவே ஆக்கிக்கொண்டு நாள் முழுதும் நிம்மதியாக இருக்கிறார். (சுலோ. — 88)

ஒரு கணம்கூட நிலைகொள்ளாது அலைந்துகொண்டே இருக்கும் நமது உள்ளங்களாகிய மான்களை, சூரியதேவன் என்ற முளையில் கட்டி, அவற்றின் சிந்தனை ஓட்டங்களை சூரியனையே சுற்றிச் சுற்றி வருமாறு பலவித காட்சிகளை எடுத்துக்காட்டி சூரியதேவனுடன் நமது உள்ளங்களைப் பிணைத்துவிடுகிறார் மயூரகவி.

சூரியசதகத்தில் காணப்படும் விஞ்ஞானக் கருத்துக்கள் :

1. சூரியனைச் சுற்றி வாயுமண்டலம்

விஞ்ஞானிகளின் கருத்து ;— சூரியனின் ஒளிக்கதிர், **"நிறமண்டலத்தை"** (Chormosphere)க் கடந்தே நமக்கு வருகிறது. இந்த நிறமண்டலம் 'ஹைட்ரஜன்', 'ஹீலியம்' போன்ற வாயுக்களால் ஆன பகுதியாகும். இவ்வாயுக்கள் சூரிய ஒளிமண்டலத்தைச் சுற்றிப் பல ஆயிரக்கணக்கான மைல்கள் பரவியுள்ளன. மேலும், சூரிய "ஒளிமண்டலம்" என்றதொரு பகுதி சூரியனைச் சுற்றியுள்ளது. இது சூரியனைச் சுற்றியுள்ள ஒளிர்வுமிக்க வட்டம் போலத் தெரியும் பகுதியே இதனை Photosphere என்று விஞ்ஞானிகள் அழைக்கின்றனர். இப்பகுதியே சூரியனின் அபரிமிதமான ஒளிக்கும், வெப்பத்திற்கும் காரணமாகும். இந்த ஒளிமண்டலத்தையடுத்து சூரியனின் வாயு மண்டலம் (Atmosphere) உள்ளது. இதுவும் கிட்டத்தட்ட ஒளிபுக விடும் வாயுக்களாலான ஒளிரும் பாகம்தான். இந்த வாயு மண்டலத்தை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒளி மண்டலத்தையடுத்த பகுதி, மற்றும் புவியிலுள்ள பல தனிமங்களின் ஆவியாலானது. இப்பகுதி சில நூறு

மைல்கள் வரையில் பரவியுள்ளது- இங்ஙனம் புவிக்கும் சூரியனுக்குமிடையில் பல்வேறு வகையான காற்று மண்டலங்கள் உள்ளன என்று நவீன விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இத்தகைய கருத்தையே மயூரகவியும் இந்நூலின் 63 ஆம் சுலோகத்தில் வெளிப்படுத்துகிறார்.

மயூரகவி கூறுவதாவது:— சூரியனுடைய தேர் மிக கனமானது. இது ஆகாயத்தில் செல்வதற்கான சுவடு கிடையாது—"வாயு மண்டலம்தான் உள்ளது. இந்த வாயு மண்டலம் ஏழு வகைப்படும். அவை முறையே ஆவஹ:, ப்ரவஹ:, விவஹ:, பராவஹ:, ஸம்வஹ:. உத்வஹ:. பரிவஹ: என்று அழைக்கப்படுகின்றன. இந்த வாயுக்களே ஒன்றன்பின் ஒன்றாக சூரிய ரதத்தை தங்கள் தோள்களில் சுமந்துகொண்டு செல்கின்றன" என்று குறிப்பிடுகிறார்.

இக்குறிப்பிலிருந்து சூரியனைச் சுற்றி பல்வேறு வகைப்பட்ட காற்று மண்டலங்கள் உள்ளன என்பதை மயூரகவி குறிப்பிட்டுள்ளது சிந்திக்கத்தக்கது,

2. சூரிய ஒளிக்கிரணங்கள் :

சூரிய ஒளிக்கிரணங்களைப்பற்றி மயூரகவி 3. 14, 30, 56. 98 ஆகிய சுலோகங்களில் குறிப்பிடும் செய்திகள் விஞ்ஞானிகளின் முடிவுகளுக்கு ஒத்ததாகக் காணப்படுகின்றன.

விஞ்ஞானிகளின் கருத்து: சூரியனின் ஒளிக்கதிர்கள் 'நிறமண்டலத்தை'க் கடந்தே புவிக்கு வருகின்றன. இதன் காரணமாக சூரிய ஒளியின் கிரணங்கள் 23,000க்கும் அதிகமான வரிகள் (lines) இருப்பதாகவும், இவை பூமியிலுள்ள தனிமங்களுடன் சேரும்போது, அக்கிரணங்கள் சூரிய நிறமாலையில் ஒன்றுக்கு 70 வரிகள் உண்டாகின்றன

என்றும் கண்டுபிடித்துள்ளனர். இவ்வரிகள் ஃபிரான்ஸ் ஹோப்பர் வரிகள் (Franshofer lines) எனப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் சூரியனின் வெளிமண்டலத்தில் காணப்படும் தனிமங்களைக் குறிப்பன. அந்தந்தத் தனிமத்தின் வெப்பநிலைக்கும், அடர்த்திக்கும் ஏற்ப அவ்வரிகள் அழுத்தம் (intensity), அகலம் (width) மாறுபடும் என்றும் கூறுகின்றனர்.

மேலும், சூரிய ஒளிக்கதிர்கள் நிறமாலையின் வழியாக வெளிப்படும்போது ஒவ்வொரு நிறத்திற்கும் வெவ்வேறு வகைப்பட்ட வெப்பங்களை அளிக்கின்றனவென்றும், இதில் சிவப்பு நிறமே அதிக வெப்பம் தரவல்லது என்றும், இதுவே அகச் சிவப்பு (Infra Red) க்கதிர்கள் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

மயூரகவி : எந்த ஒளியின் வீச்சும் அகல அகல ஒளி குன்றும். ஆனால் சூரியனின் ஒளிக்கிரணங்கள் மட்டும் ஒளி குன்றுவதில்லை. சூரியன் உதிக்கும்போது சிறு சிறு வரிகளாக (கதிர்களாக) வெளிப்பட்டு, பின்னர் வானம் எங்கும் ஊடுருவிப் பாய்கின்றன. (சு - 7) சில கிரணங்கள் கடுமையானவை. சில கிரணங்கள் கடுமையற்றவை (சு. 29) சில கிரணங்கள் சுக்ரன் சந்திரன் போன்ற பிற கிரஹங் களின் ஒளியையும் குன்றச் செய்துவிடும் தன்மை பொருந்தியவை. சில கிரணங்கள் முழுமையானவை. சில கிரணங்களின் முன் முனையில் மட்டும் அதிக ஒளி உடையவை. சில கிரணங்கள் அதிகத் திறன் பெற்றவை. சில கிரணங்கள் சற்றே கடுமையானவை (சு. 98) என்று, ஒவ்வொரு கிரணத்தின் தன்மைகளைப் பற்றியும் கவி குறிப்பிட்டுள்ளது ஒப்பு நோக்கத் தக்கது.

3. சூரியன் உதிப்பதுமில்லை மறைவதுமில்லை :

'சூரியன் உதிப்பதுமில்லை-மறைவதுமில்லை. பூமியின் சுழற்சியின் காரணமாகச் சூரியன் உதிப்பதுபோலவும்; மறைவதுபோலவும் காணப்படுகிறது' என்று இன்றைய

நவீன அறிவியலார்கள் கூறுகின்ற கருத்தை 1700 ஆண்டுகளுக்கு முன்னரேயே மயூரகவி, தனது மயூரசதகம் 18, 97 ஆகிய சுலோகங்களில் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறும் செய்தியாவது :

உதயமோ, அஸ்தமனமோ இல்லாதவன் சூரியன். ஓரிடத்தில் இருந்துகொண்டே தன்னொளி பாயும் இடங்களிலெல்லாம் இருளைப்போக்கி அண்டப்பெருவெளி (Universe) எங்கும் பிரகாசித்து இருளையோட்டுகிறான். சூரிய ஒளியை விட்டு மறைந்த திசை இருளாகவும், சூரிய ஒளியுள்ள திசை பகலாகவும் காணப்படுகிறது (சு. 18). சூரியன் இந்த த்வீபத்தில் ஒளிவீசும்போது, மற்றொரு த்வீபத்தில் இருளாக இருக்கிறது. நக்ஷத்திரங்களுடன் குளிர்ந்த நிலவு சுடர்விட்டுப் பிரகாசிக்கும்போது மற்றொரு த்வீபத்தில் கடும் வெப்பம் பொருந்திய பகல் பொழுதாக இருக்கும் (சு. 97) என்பதையும் கவி சுட்டிக் காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

4. விஞ்ஞானிகள் குறிப்பிடும் சூரிய மண்டலம்

வான வீதியில், சூரியன் தன்னைத்தானே சுற்றிவரும் பாதைக்கு 'சூரிய வீதி' என்று அழைக்கப்படுகிறது. இவ் வீதியில் சூரியன் ஒருமுறை தன்னைத்தானே சுற்றிக் கொள்வதற்குச் சுமார் 4 வாரங்கள் அதாவது 1 மாதமாகிறது. சூரியனையே மையமாக வைத்து புதன் (Mercury), சுக்ரன் (Venus) பூமி (Earth) செவ்வாய் (Mars), குரு (Jupiter), சனி (Saturn), யுரேனஸ் (Uranus), நெப்டியூன் (Neptune), புளூட்டோ (Pluto) ஆகிய கிரகங்களும், இந்த கிரகங்களின் உப கிரகங்களாக 28 கிரகங்களும்; தத்தமது பாதைகளில் சூரியனைச் சுற்றி வருகின்றன. (சந்திரன் பூமியின் உபக்ரஹம்) இவற்றில் பல சிறு கிரஹங்களும் (Asteroids), வால் நக்ஷத்திரங்களும் (Comets), எரி நக்ஷத்திரங்களும் (Meteors) அடங்கியதே சூரிய மண்டலம் என்பது விஞ்ஞானம்.

சூரியனுக்கு மிக மிக அருகில் உள்ள கிரஹம் புதன், இதைப்போல மிக மிகத் தொலைவில் உள்ள கிரஹம் புளூட்டோ. ஒவ்வொரு கிரஹங்களுக்குமிடையேயுள்ள தொலைவை விஞ்ஞான ரீதியாகவே நம் முன்னோர்களும் கண்டுபிடித்துள்ளனர். மேலே கூறப்படும் கிரஹங்களில் பூமி, சந்திரன், செவ்வாய், வெள்ளி, வியாழன், சனி ஆகிய ஆறு கிரஹங்களைச் சாதாரணமாகவே கண்களால் காண முடியும். பிற கிரஹங்களைத் தொலைநோக்கி சாதனங்கள் வாயிலாகவே அறியலாகும்.

சூரியனைத் தவிர, மற்ற கிரகங்கள் யாவும் தாமாகவே ஒளிராப் பொருட்களாகும் என்றும் சூரியனிடமிருந்தே பிற கிரஹங்களும். உபகிரஹங்களும், நக்ஷத்திரங்களும். ஒளி பெற்றுப் பிரகாசிக்கின்றன என்பதும் விஞ்ஞானிகளின் கருத்தாகும். இக்கருத்தையே, மயூரகவியும் 96ஆம் சுலோகத்தில் குறிப்பிட்டுள்ளார். "சூரியனே உதிக்காவிட்டால் இந்த பிரபஞ்சமே இருள்மயமாக இருக்கும். இதனால் 'இன்னது' என்று புரியாமலும், தெளிவு பெறாமலும் இருக்கும். காரணம் அனைத்துக் கோள்களுக்கும் சூரியனே ஒளி கொடுப்பவன். சூரியனே ஒளி இழந்து விட்டால் எங்குமே இருள்தானே!" என்பதைக் குறிப்பிடுகிறார்.

5. காலை – மாலைகளில் சூரியனின் வண்ணமும் உருவமும்

மயூரகவியின் "சூரிய சதகத்தின்" தொடக்க சுலோகங்களில் கீழ்வானமும், சூரியனும் சிவந்திருப்பதைப் பற்றிய வர்ணனைகளைப் பல்வேறு கற்பனைச் சித்திரங்களாக வர்ணித்துள்ளார். இதற்குரிய விஞ்ஞானக் கருத்துக்கள் நூலில் காணப்படவில்லை. எனினும், சிவப்பு நிறத் தன்மை ஏற்படுவதை விஞ்ஞான ரீதியான காரணத்தை அறிவது பயனளிக்கும் என்பதால் அதனை கீழே குறிக்கப் பட்டுள்ளது.

சூரியனை, நாம் சாதாரணக் கண்களால் காண முடியாது. ஆனாலும், சூரியோதயத்தின் போதும், அஸ்தமனத்தின் போதும் பெரிதாகவும், செம்மை வண்ணமாகவும் காணமுடிகிறது. இதற்குரிய காரணத்தை விஞ்ஞானிகள் விளக்கியுள்ளனர்.

சூரியனுடைய ஒளி பூமியைச் சுற்றியுள்ள வாயு மண்டலத்தால் கிரகிக்கப்பட்டு, குறைந்த அளவாகவே சூரிய ஒளி நம்மை அடைகிறது. இதனால்தான் நாம் சூரியனை நேரிடையாகக் காணமுடிகிறது. மேலும்; வானம் நீல நிறமாகவும்; காலை-மாலைகளில் சூரியன் சிவப்பு நிறமாகவும் இருப்பதற்கான காரணத்தை ரேலி பிரபு (Lord Rayleigh) விளக்கியுள்ளார். மூலக்கூற்றளவுள்ள சிறுசிறு துகளின் மீது ஒளி படும்போது அந்த ஒளி சிதறிப்போகிறது. மஞ்சள், சிவப்பு நிறங்களைவிட நீல நிறம் மிகுதியாகச் சிதறுண்டு வானத்தை நீல நிறமாக்குகிறது. மஞ்சளும், சிவப்பும் அதிகமாகச் சிதறாமல் நம் கண்களையடைவதால் காலையிலும், மாலையிலும் சூரிய ஒளி சிவப்பாகக் காணப்படுகிறது. மேலும், காலை-மாலை வேளைகளில் சூரிய பிம்பம் பெரியதாகவும், உச்சி வேளைகளில் சிறியதாகவும் நம் கண்களுக்குத் தோன்றினாலும், அது சிறியதாக இல்லை. இதற்குக் காரணம் 'அடிவானத்திலுள்ள காற்று மேலேயுள்ள காற்றைவிட அதிக அழுத்தமும், அடர்த்தியும் உடையது. உதாரணமாக மூடுபனி (Fog), மறைபனி (Mist) ஊடாகக் காணப்படும் பொருள் பெரிதாகத் தோன்றுவதைப்போல் அடர்த்தியான காற்றினூடே காணப்படும் சூரிய பிம்பம் பெரிதாகத் தோன்றுகிறது' என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

6. சூரியனின் தேர்க்குதிரைகள் :

சூரியனுடைய தேர் ஒரு சக்கரத்தில்தான் இயங்குகின்றது என்றும், அத்தேருக்கு ஏழு குதிரைகள் உண்டு என்றும் (சு. 45) சூரிய சதகத்தில் காணப்படுகிறது. இந்தக் கருத்து புராணங்களிலும் காணப்படுவதுதான். அந்நாட்களில் தேர்களில் 8 குதிரைகளே பூட்டப்பட்டுவந்துள்ளன. இருப்பினும் 'சூரியனுக்கு ஏழு குதிரைகள்' என்று எண்ணிக்கையை ஏன் கொடுக்கவேண்டும்? எனில், 'ஒளியின்' ஏழு வண்ணங்களான ஊதா (Violet), கருநீலம் (Indigo), நீலம் (Blue), பச்சை (Green), மஞ்சள் (Yellow), ஆரஞ்சு (Orange), சிவப்பு (Red) ஆகியவையே குதிரைகளாக உருவப்படுத்தப்பட்டுள்ளன.

சூரியனுடைய வெண்மையான ஒளி இந்த ஏழு நிறங்களின் மொத்தக் கலவையே. இதில் நீலம், மஞ்சள், சிவப்பு ஆகிய மூன்று வண்ணங்களே. ஏனைய நான்கு வண்ணங்களை உருவாக்குகிறது ஆயினும் சிவப்பு, பச்சை, நீலம் ஆகியவையே பிரதானமானவை என்று அறிஞர்கள் கூறுகின்றனர். மயூர கவி 'சூரியனுடைய குதிரைகள் பச்சை வண்ணமுடையவை' என்று (சு. 46, 47, 60) குறிப்பிட்டுள்ளார்.

7. சூரியன் அளிக்கும் பயன்கள்

சூரியனுடைய வெப்பத்தால் உலகில் பல நன்மைகள் ஏற்படுகின்றன என்பது அனைவரும் அறிந்தவையே. பூமியிலிருக்கும் நமக்கு சூரியனே தேவையான வெப்பத்தையும், வெளிச்சத்தையும் தருகின்றது. நமக்குக் கிடைக்கும் சக்திக்கும் மூலகாரணம் சூரியனே. சூரிய வெப்பமில்லாவிட்டால் நமது உடல் நமக்கே பாரமாகி

விடும். படுத்துப் புரள வேண்டியதுதான். ஓட்டாஞ்சில்லி போல காற்றிலே பறக்க நேரிடும், சோகமும், துன்பமும் தான் மிஞ்சும். சூரியனின்றி உயிர்வாழ முடியாது. (சு. 85) உலகில் விலங்கினங்களும், தாவர இனங்களும் உயிர் வாழ்வதே சூரியனால்தான். சூரியன் இல்லையாகில் உலகில் தண்ணீரே இராது. எல்லாம் பனிக்கட்டியாகவே இருக்கும். மழை பொழியாது. பனி பெய்யாது. கோடை மாரிக்காலங்கள் ஏற்படாது. கடல் நீர் ஆவியாகி மழை பொழிந்து அருவிகளிலிருந்து நீர் மின் சக்தி உண்டாகாது. நிலக்கரி, பெட்ரோல் போன்றவற்றின் வெப்ப சக்தியும் சூரியனிடமிருந்தே கிடைக்கின்றன என்பது விஞ்ஞானம். இதன் காரணமாகவே பல சமய நூல்களில் சூரியனைக் கடவுளாகவும், தேவனாகவும் வழிபாடு புரிகின்றனர் மக்கள்.

8. யுக முடிவில் சூரியன் :

இவ்வளவு நன்மை தரும் சூரியன் இவ்வுலகை அழிக்கவும், ஆற்றல் படைத்தது. இக்கருத்தை இந் நூலின் 78 ஆம் சுலோகத்தில் கூறியுள்ளார் மயூரகவி. இந்தக் கருத்தையே நவீன விஞ்ஞானிகளும் கூறியுள்ளது ஒப்பு நோக்கத்தக்கது.

விஞ்ஞானிகளின் கருத்து ; சூரியன் "ஹைட்ரஜன்" என்ற வளிமத்தால் ஆனது. இதனுள் இடையறாது நிகழ்ந்து கொண்டிருக்கும் அணுக்கரு மோதலினால் தொடர்ந்து சூரிய ஆற்றல் உற்பத்தியாகிக்கொண்டே இருக்கிறது. ஒரு நொடிக்குள் அணுக்கரு வினைபுரியும் ஹைட்ரஜனின் நிறை 45 கோடி டன்கள். இதே ரீதியில் போனால் இன்னும் 500 கோடி ஆண்டுகளுக்குள் சூரியன்

தன் ஹைட்ரஜன் முழுவதும் தீர்ந்து செம்பூதமாக (Red Giant) மாறக்கூடும். அந்த நிலையில்தான் அந்த செந்நிறம் இப்போதிருப்பதை விடவும் ஆயிரம் மடங்கு பொலிவுடன் விளங்கும். சூரியனுடைய வெப்பம் பல மடங்கு உயர்ந்து பக்கத்திலுள்ள புதன், வெள்ளி போன்ற கிரஹங்கள் உருகிப்போகும். புவியில் கடல்கள் வற்றி ஆவியாய் மறையும் உலகில் வெறும் பாறைகளே மிஞ்சும். அதுவும் காரீயத்தையும் (Lead) உருக்கிவிடும் அளவிற்கு அந்த மலைகள் பழுத்திருக்கும். உயிரினங்கள் பூமியில் வாழுமா என்ற கேள்விக்கே இடமில்லை. அந்வான மயானமே என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

மயூர கவியின் கருத்து: யுகத்தின் முடிவில் சூரியன் தனது முழுமையான வெப்பத்தால் மிகப் பெரிய நீர்நிலை யான சமுத்திரத்தையே வற்றச் செய்து பாலைவனமாக்கி விடுவான். மிகவும் உயர்ந்ததும், சிறப்புற்றதுமான மலை களைத் தனது வெப்பத்தால் 'தட தட' வென்று வெடிக்கச் செய்து எள்ளுப் பொடி போலத் தூள் தூளாக்கிவிடுவான் (சு. 78). இந்நிலையில் உயிரினங்கள் வாழ முடியுமா ? என்பதை சிந்திக்க வைத்து விடுகிறார் கவி.

ஆகவே, கி. பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மயூர கவியின் இக் காப்பியத்தில் காணப்படும் விஞ்ஞானத்தின் கூறுபாடுகளின் வாயிலாக, நமது நாட்டில் வாழ்ந்த அறிஞர்கள் யோக மகிமையினால் விஞ்ஞானக் கருத்துக் களை நன்றாகவே அறிந்திருந்தனர். என்று அறியலாகும். ஆனால், இடைக்காலத்தில் நமது நாட்டில் மன்னர் களுக்குள் ஏற்பட்டிருந்த அரசியல் குழப்பங்களினால் இத்தகைய 'விஞ்ஞான அறிவு மறைந்துவிட்டது' என்று அறிஞர்கள் கூறுவது உறுதிப்படுகிறது.

எனினும் நமது தொன்மை நூல்களான வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், இலக்கியங்கள் ஆகியவற்றில் சூரியனைப் பற்றிய பல செய்திகளையும் இந்நூலில் ஆங்காங்கே சுட்டிச் செல்கிறார் மயூர கவி.

நூலாசிரியர் வரலாறு:

மயூரகவி — காதம்பரி என்னும் நூலை இயற்றிய பாணபட்டரின் உறவினர் என்று சரித்திர ஆய்வாளர்கள் கூறுவர். எத்தகைய உறவினர் என்பதைத் தீர்மானித்துச் சொல்ல இயலவில்லை; மயூரகவிக்கு பாணபட்டர் மைத்துனன் என்று கொள்வார் சிலர்; சகோதரியின் கணவர் என்பார்கள் சிலர். 'இந்த உறவு ஒரு அருமையான சுலோகத்திற்குக் காரணமாகிறது' என்று மட்டும் நாம் ரஸிக்கலாம்.

மயூரகவிக்கும் அவர் மனைவிக்கும் ஏதோ பிணக்கு. இரவு முழுதும் மன்றாடி அவளைச் சமாதானப்படுத்த முனைகிறான் மயூரன். அவள் மனம் கனியவில்லை. "என் இனியாளே! இரவு போயேவிட்டது. அதோ பார்! சந்திரனும் (என்னைப்போல்) ஒளிமங்கி மறைகிறான். இதோ இந்த விளக்கும் இரவு முழுதும் எரிந்து-சோர்ந்து-திரி கருகி (என்னைப்போல்) உருக்குலைந்து அணைந்து விடும்போல இருக்கிறது. உன் மெல்லிய பாதங்களிலும், தலை சாய்த்துவிட்டேனே! உன் கோபம் தணியாதா? உன் ரோஷத்தை விடமாட்டாயா? என்று முனகி மேலே பேசமுடியாமல் நாத்தழுதழுக்கிறான்.

"गतप्राया रात्रिः कृशतनु शशी शीर्यत इव
प्रदीपोऽयं निद्रावशमुपगतो घूर्णत इव ।
प्रणामान्ते मानं त्यजसि न यथा त्वं क्रुधमहो"

கத ப்ராயா ராத்ரி: க்ருசதநு சசி சீர்யத இவ

ப்ரதீபோ(அ)யம் நித்ராவசமுபகதோ கூர்ணத இவ।

ப்ரணாமாந்தே மானஸ் த்யஜதி ந யதா த்வம் க்ருதமஹோ

இந்த மூன்றடிகளுக்கு அடுத்த நான்காம் அடி அறையின் வெளியிலிருந்து அவர்கள் காதுகளில் விழுகிறது. "அப்பப்பா! உன் மார்பகம்தான் கடினமானது என்று நினைத்தேன். அதற்குள்ளே இருக்கும் உன் இதயமும் அவ்வளவு கடினமா?" என்னும் பொருள்பட —

"कुचप्रत्यासत्त्या हृदयमपि ते चण्डि कठिनम् ॥"

"குசப்ரத்யாஸத்யா ஹ்ருதயமபி தே சண்டி கடினம் ॥"

என்று நான்காம் அடி காதில் விழுகிறது.

இந்த நான்காம் அடியைச் சொன்னவன் பாணபட்டன். பிணக்குத் தீர்ந்து சிரித்துக்கொண்டே தம்பதிகள் அறையிலிருந்து வெளிப்பட்டனர், என்று கதை முடிகிறது. இதைக் கூறியவன் மயூர கவி என்றும் கூறப்படுகிறது. மயூர கவியைப் பற்றிய பிற செய்திகள் தெரியவில்லை.

மயூர கவியின் காலம்

மயூர கவியின் கவிதைகளை மேற்கோள் காட்டி 'த்வந்யாலோகம்' எழுதிய ஆநந்தவர்தனாசாரியார் தன் இலக்கிய விமர்சனத்தில் பேசுகிறார். ஆநந்தவர்த்தனர் கி பி. 850க்கு முன் - பின்னாக வாழ்ந்தவர் என்பதாக சரித்திர ஆசிரியர்கள் தீர்மானித்துள்ளனர். ஆகவே, மயூரகவி இவருக்கு முன்னரேயே வாழ்ந்திருக்கவேண்டும். இதுபோலவே பாணபட்டரும் தான் எழுதிய 'ஹர்ஷ சரித்திரத்'தில் மயூரகவியைக் குறிப்பிடுகிறார். ஹர்ஷரின் காலம் கி. பி. 606 - 646 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இம் மன்னனுடைய ஆஸ்தானப் புலவர்களில் மயூர கவியும் - பாணபட்டரும் இருந்திருக்கிறார்கள். ஆகவே, கி. பி. 7 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மயூர கவி வாழ்ந்தவர் என்று சொன்னால் தவறில்லை.

சூரிய சதகத்தின் தோற்றம்

மயூர கவி ஹர்ஷ சக்ரவர்த்தியின் அவைப் புலவராக இருந்தார். அப்போது அவருக்கு 'குஷ்டரோகம்' வந்தது என்றும், அதனால் அவர் அவையிலிருந்து வெளியேற்றப் பட்டார் என்றும், சூரிய சதகத்தை இயற்றி சூரியனை உபாஸித்து குஷ்டரோகம் நீங்கினார் என்றும், கர்ண பரம்பரைச் செய்தி ஒன்றுண்டு. ஆயினும், தனக்கு வந்துள்ள நோயைத் தீர்த்துத் தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று சூரிய சதகத்தில் ஒருவரியில் கூட அவர் சூரியனை வேண்டவில்லை.

மயூரகவி வாழ்ந்த காலத்தில் சூரிய வழிபாடு பரவலாக நாடு முழுவதும் இருந்துள்ளது. குறிப்பாக வட நாட்டில் அதிகமாகப் பரவி இருந்தது. இதன் காரணமாகவே ஒரிசாவிலுள்ள 'கோநார்க்'கில் சூரியனுக்குக் கலைவளம் நிறைந்த பெருங்கோயில் எழுந்துள்ளது என்றும் இதனை கலிங்கநாட்டு அரசன் நரசிம்மவர்மன் (கி. பி. 1238 - 64) எடுப்பித்துள்ளான் என்றும் வரலாறு கூறுகிறது. இதனால் சூரிய வழிபாடு புரிகின்றவர்களுக்கு சூரியனின் அருள் கிடைக்கட்டும் என்று வேண்டுகிறார் கவி. இதுவே சூரிய சதகத்தை மயூர கவி இயற்றக் காரணம் என்பதுவே பெரும்பாலும் பொருந்தும். மேலும், இந்நூலில் சில சுலோகங்களின் ஓசையை வெளிப்படுத்த ஒரே அக்ஷரத்தைப் பல முறை உபயோகப்படுத்தியுள்ளார். இதனால் அதன் சுவைகூடி ரஸிக்க முடிகிறது. இதைக் குறித்து இந்நூலின் உரையாசிரியர்களில் ஒருவர், "சில சுலோகங்களில் ஒரே எழுத்தை (அக்ஷரத்தை)ப் பயன் படுத்துவதன் மூலம் அதன் மந்திர சக்தியை வலுப்படுத்திப் பாராயணம் செய்வோருக்கு நற்பயன்கள் பெருக அருளு கிறார்" என்று குறிப்பிட்டுள்ளாறென அறிய முடிகிறது. உதாரணமாக 36 ம் சுலோகத்தில் द्य(த்ய) என்ற எழுத்தும்; 70ல் न्द(ந்த) என்ற எழுத்தும், 94ல் श(ச) என்ற எழுத்தும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவற்றை

யெல்லாம் கருத்தில் கொண்டால் சூரியனின் அருள் பெற்றுய்ய இந்த நூல் பயனளிக்கவல்லது என்பதையும் அறியலாகும்.

மயூரகவியின் பிற நூல்கள்

சூர்ய சதகத்தைத் தவிர மயூரகவி இயற்றிய நூல்கள் 1. மயூராஷ்டகம், 2. ஸுபாஷித சங்க்ரஹம் ஆகியன,

1. **மயூராஷ்டகம்** என்னும் இந்த நூலை மயூரகவி இயற்றியுள்ளதாக இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள்.

2. **ஸுபாஷித சங்க்ரஹம்:** சிறந்த இலக்கியக் கோவைகளில் இப்புலவர் பெருமான் இயற்றியதாகப் பதினாறு சுலோகங்கள் காணப்படுகின்றன. இவற்றில் தேனூறும் இனிய சிருங்கார ரஸம் ததும்புகிறது.

அவையாவன :

ஒன்று முதல் ஏழு சுலோகங்கள் வரை பார்வதியும் பரமேச்வரனும் சொக்கட்டான் ஆடியது பற்றிய வர்ணனை.

எட்டாவது சுலோகம்: சாம்ராட் ஹர்ஷவர்த்தனரைப் புகழ்ந்து எழுதியது.

ஒன்பதாவது சுலோகம்: ஒரு பசுவும் அதன் கன்றும் தமக்குள் அன்பொழுகப் பரிவு காட்டிக் கொள்வதைச் சித்தரிக்கின்றது.

பத்தாவது சுலோகம்: இரு கழுதைகள் காதல் ஜோடிகளாக நையாண்டி செய்யப்படுகின்றன.

பதினொன்றாவது சுலோகம்: ஒரு பரதேசியின் மேல் துண்டு பற்றிய அழகிய வர்ணனை.

12 ஆவது சுலோகம் : காதலர்களின் பிரிவாற்றாமை.

13 ஆவது சுலோகம் : பரமேச்வரன் முப்புரமெரித்த லீலை.

14 ஆவது சுலோகம் : உமையம்மையின் பிணக்கு.

15 ஆவது சுலோகம் : நரசிங்கமாக அவதரித்த மஹாவிஷ்ணுவின் நகங்கள் மிக அழகாக வர்ணிக்கப்படுகிறது.

16 ஆவது சுலோகம் : குழந்தை கண்ணனின் கனவு, அதில் பிரம்மதேவனையும், பரமேச்வரனையும், பிற தேவதைகளையும் அருகே அமரும்படி கண்ணன் வேண்டுகிறான். யசோதை, குழந்தையின் மழலைப் பிதற்றலைக் கேட்டுத் திகைக்கிறாள்.

தமிழகத்தில் சூரிய சதகத்தின் பயன்பாடு :

குறிப்பாக, தமிழகத்தில் தொன்மைக் காலந்தொடங்கியே சூரிய வழிபாடு இருந்துவருகிறது. மாமல்லபுரத்தின் குகைச் சிற்பங்களில் சூரியன் உள்ளான். சோழ மன்னர்கள் தங்களை சூரிய குலத்தினராகக் கூறிக்கொண்டனர். தமிழகத்திலுள்ள சிவாலயங்களில் சூரியன் பரிவார தேவதையாகவும், கீழ்த்திசைக் கடவுளாகவும் வழிபட்டனர். பிற்காலத்தில் நவக்கிரகங்களில் ஒருவராக சிலாமூர்த்தியாக அமைத்து வழிபடலாயினர். 'மயூர சதகமாகிய இந்தப் பநுவலை பண்டிதர் முதல் சாதாரண மக்கள்வரை ஸம்ஸ்கிருத மொழி தெரிந்தவர்களால் பாராயணம் செய்யப்பெற்றுவந்துள்ளது என்று அறியமுடிகிறது.

மயிலை ஸம்ஸ்கிருதக் கல்லூரி முதல்வர் திரு. P V. சிவராம தீக்ஷிதர் அவர்கள் பதிப்பித்துள்ள நூலின் முகவுரையில் 'காஞ்சீ ஸ்ரீகாமகோடிபீடம் மஹாஸ்வாமிகள் ஒருசமயம் காஞ்சியில் தங்கியிருந்த காலத்தில் காஞ்சீபுரத்திலுள்ள கச்சபேச்வரர் ஆலயத்திலுள்ள பாநு தீர்த்தத்தில் நீராடி அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு திரும்பும் சமயத்தில் படிகளில் காணப்பட்ட கல்வெட்டுக்களைக்

கண்டு படித்து மகிழ்ந்தார்கள். பின்னர் அவரை தரிசிக்க வந்திருந்த கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு. T. N. ராமச்சந்திரன் அவர்களிடம் அக்கல்வெட்டைப் படித்துவரச் சொல்லி இது 'சூரிய சதகம்'தான் என்பதை உறுதிபடுத்திக் கொண்டார் சுவாமிகள்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனால், சூரிய சதகம்' தமிழ் நாட்டில் கல்வெட்டில் பொறிக்கப்படும் அளவுக்குப் பரவி பலரும் படித்தறியும் வாய்ப்பும் தமிழக மன்னர்களால் செய்து கொடுக்கப் பட்டுள்ளதை அறிந்து மகிழலாம். மேலும், இந்த நூலகத்திற்குப் பலர் அன்பளிப்பாக அளித்துள்ள ஓலைச் சுவடிகளிலும், காகிதச் சுவடிகளிலும் சூரிய சதகத்தின் மூல நூல் மற்றுமுள்ள பல பிரதிகள் கிடைத்துள்ளன. இவற்றின் வாயிலாகவும் பலர் இந்த நூலைப் பாராயணம் செய்துள்ளனர் என்றும் அறிய முடிகிறது.

சூரிய சதகத்தின் உரை நூல்கள்

சூரிய சதகத்திற்கு 14 உரை நூல்கள் உண்டு. அவற்றை எழுதியுள்ள ஆசிரியர்கள்;

1. மதுசூதனர் இயற்றிய பாவபோதினி என்னும் உரை நூல்.
2. ஜகன்நாதர் இயற்றிய உரை
3. வல்லபதேவர் இயற்றிய ஸூர்யானுவாதினீ என்னும் உரை நூல்
4. யக்ஞேச்வர சாஸ்திரி இயற்றிய உரை
5. திரிபுவநபாலர் இயற்றிய உரை
6. ஜயமங்களர் ,, ,,
7. ரங்கதேவர் ,, ,,
8. கங்காதரர் ,, ,,
9. பாலமபட்டர் ,, ,,
10. ஹரிவம்சர் ,, ,,
11. கோபீநாதசூரி ,, ப்ரபாவளீ என்னும் உரை
12. ராமபட்டர் ,, உரை

13. அன்வயமுகர் இயற்றிய உரை
14. ராமச்சந்திரர் ,, ,,
15. லிங்கையர் ,, ,,

இவற்றில் சில உரை நூல் மட்டுமே அச்சாகியுள்ளதாக அறியமுடிகிறது. பல உரைகள் இன்னும் அச்சில் வெளிவரவில்லை என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து.

தற்போது, இப்பதிப்பில் முதன்முதலாக கோபிநாத ஸூரி என்னும் ஆசிரியரால் இயற்றப்பட்ட "ப்ரபாவளீ" என்னும் உரை நூல் அச்சாகி வெளிவருகிறது. இந்த நூலில் ஆசிரியரைப் பற்றிய செய்திகள் ஏதும் கிடைக்கவில்லை.

"ப்ரபாவளீ" என்னும் இந்த உரைச் சுவடியின் மற்றொரு பிரதி சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் (11320 Taylor II 212) ஒரு சுவடி இருப்பதாக N. C. C. Vol. II-ன் மூலம் அறியமுடிகிறது.

சுவடியின் வரலாறு

தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்தின் ஸம்ஸ்கிருதப் பிரிவில் B. 4966/D. 3944 ஆம் எண்ணில் ஒரு காகிதச் சுவடி உள்ளது. இது முழுமையான சுவடி. இதில் எழுத்துப் பிழைகளும், சிற்சில பதங்கள் குறைந்தும் நிறைந்தும் காணப்படுகிறது. மற்றொரு சுவடி B. 10324/ D. 3945 ஆம் எண்ணில் வைத்துப் பாதுகாக்கப்படும் ஓலைச் சுவடி. இது குறையான பிரதி. மிகவும் மோசமாகவும் படிக்க அரியதாகவும் உள்ளது. இதில் காணும் உரை முற்றிலும் வேறுபட்டதாகவும் இருக்கிறது. இதன் உரையாசிரியர் யார் என்று கண்டுபிடிக்க இயலவில்லை.

ஆகவே, இந்நூலகத்தில் கிடைத்துள்ள காகிதச் சுவடி (B. 4966/D. 3944)யை மட்டுமே வைத்துக் கொண்டு இந் நூல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இதன் மூல சுலோகங்

கருத்துரிய பாடபேதங்களுக்காக கீழே காணும் சுவடிகள் பயன்படுத்தப்பட்டன

1. A. B. No 4954/D. No 3939
2. B. B. No. 4953/D. No. 3942
3. C. B. No. 4955/D. No. 3943
4. D. B. No 4952/D. No 3958

இத்துடன் சௌகாம்பா வித்யாபவன் — வாரணாசி பதிப்பகத்தாரால் வெளியிடப்பெற்ற "ஸ்ரீ ராமகாந்த த்ரிபாடி" அவர்களின் பதிப்புப் புத்தகமும், சென்னை, மயிலாப்பூர் ஸம்ஸ்கிருதக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் ஸ்ரீ P. V. சிவராம தீக்ஷிதர் அவர்களால் வெளியிடப்பட்ட நூலும் பரிசீலனைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

நூலாசிரியர் மயூரகவி வேதங்கள், உபநிஷத்துக்கள், சாஸ்திரங்கள், மஹாபாரதம், காவியாதிகள் ஆகியவற்றில் கூறப்பட்ட கருத்துக்களை இக்காவியத்தில் கூறியுள்ளார். இருப்பினும் மஹாபாரதத்தில் காணப்படும் செய்திகள் இதில் பரவலாகக் காணமுடிகிறது. மேலும் மஹாபாரதம் வனபர்வாவில் காணப்படும் "ஸௌர்ய ஸ்தோத்திரமே" இந்த நூல் எழுத அடிப்படை நூலாக இருக்கும் என்று கருதமுடிகிறது. அதில் காணும் சூரியனின் பெயர்களையும் பிற செய்திகளையும் இந்த சூரிய சதகத்தில் காணலாகும். இதன் காரணமாக இந்த நூலின் அநுபந்தமாக யுதிஷ்டிரர் அருளிய ஸௌர்ய ஸ்தோத்திரமும் வெளியிடப்பட்டுள்ளது.

॥ श्रीः ॥

श्रीमयूरकविप्रणीतं

॥ सूर्यशतकम् ॥

ஸ்ரீ மயூரகவி இயற்றிய

ஸூர்யசதகம்

जम्भारातीभकुम्भोद्भवमिव दधतः सान्द्रसिन्दूररेणुं
रक्ताःसिक्ता इवौघैरुदयगिरितटीधातुधाराद्रवस्य ।
आयान्त्या तुल्यकालं कमलवनरुचेवारुणा वो विभूत्यै
भूयासुर्भासयन्तो भुवनमभिनवा भानवो भानवीयाः ॥ १

जम्भेति । जम्भो नाम कश्चिदसुरः । तस्य आरातिः शत्रुः, इन्द्रः । तस्य इभः ऐरावतः । तस्य कुम्भौ तयोः उद्भवः आविर्भावः यस्य तं जम्भारातीभकुम्भोद्भवम् । अनेन किमभिधीयते ? सान्निध्यात्पूर्वदिगिभकुम्भोद्भवमित्यभिधीयते । सिन्दूरं नाम कश्चिद्रक्तद्रव्यविशेषः । सिन्दूराणां रेणुः सान्द्रश्चासौसिन्दूररेणुश्च तं सान्द्रसिन्दूररेणुं । "रेणुर्द्वयोः स्त्रियांधूली"त्यमरः । दधतः धारयन्त इव । रक्ताः लोहिताः । उदयत्यस्मादस्मिन्वा उदयः । उदयश्चासौ गिरिश्च उदयगिरिः उदयपर्वतः । तस्य तट्यः वप्राः तासु धातवः गैरिकाणि धाराः तासां द्रवस्य । ओघैः प्रवाहैः सिक्ता इव क्षालिता इव । अत्रापि रक्ता इव सम्बध्यते । तुल्यः समानः कालो यस्मिन् कर्मणि तत् तुल्यकालम् । आयान्त्या आविर्भवन्त्या । कमलानि पद्मानि तेषां वनं तस्य रुक् दीप्तिस्तया कमलवनरुचेव अरुणाः

ताम्राः । भुवनं लोकं । भासयन्तः । एकवचनमुपलक्षणम् । भुवनानि भासयन्तीत्यर्थः । अभिनवाः प्रत्यग्राः । भानोरिमे भानवीयाः । सूर्यसम्बन्धिनः । भानुशब्दस्य भानवो रश्मयः । वः युष्माकं । भूत्यै श्रियै भूयासुः ॥ १

ஜம்பாராதீபகும்போத்பவமிவ ததத:
ஸாந்த்ர ஸிந்தூரரேணும்
ரக்தா: ஸிக்தா இவௌகை:ருதயகிரிதடீ-
தாதுதாராத்ரவஸ்ய ।
ஆயாந்த்யா துல்யகாலம் கமலவனருசே-
வாருணா வோ விபூத்யை
பூயாஸுர்பாஸயந்தோ புவனமபிநவா
பாநவோ பாநவீயா: ॥

சூரியன் கிழக்குத் திசையில் தன் செங்கதிர்களைப் பரப்பிக்கொண்டு உதயமாகிறான். அவன் கிரணங்கள் ஏன் சிவந்தன? கவியின் கற்பனைகளும் உதயமாகின்றன.

கிழக்குத் திசையிலிருந்து சூரியன் கிளம்புவதால், அத்திசையின் அதிபதியான இந்திரன், தன் வெள்ளை யானையின் மஸ்தகங்களில் சிந்தூரப் பொடிகளால் அலங்கரித்திருப்பான் அப்பொடிகளின் மேல் பட்டு வருவதால் இவனது கிரணங்களும் சிவந்து விட்டனவோ? அல்லது கீழ்த்திசையில் உதய பர்வதம் தென்படுகிறது. அங்கு, ஆங்காங்கு மலைகள் உருகி வந்து வழிகின்றன. பொடிகள் சிதறியுள்ளன. அவைகளின் மீது பட்டதால் இவன் கிரணங்களும் செந்நிறமாயினவோ? அல்லது சூரியன் உதித்ததும் செந்தாமரைகள் மலர்ந்துவிட்டன அல்லவா? அவற்றின் மீது கிரணங்கள் பட்டதால் அக்கிரணங்களும் சிவந்துவிட்டனவோ? என்று வியக்கும் வண்ணம் உதயமாகும் சூரியனின் கிரணங்கள் உங்களைக் காக்கட்டும்.

भक्तिप्रह्वाय दातुं मुकुलपुटकुटीकोटरक्रोडलीनां
लक्ष्मीमाक्रष्टुकामा इव कमलवनोद्घाटनं कुर्वते ये ।
कालाकारान्धकारानन‌पतितजगत्साध्वसध्वंसकल्पाः
कल्याणं वः क्रियासुः किसलयरुचयस्ते करा भास्करस्य ॥

भक्तिप्रह्वायेति । भासं करोतीति भास्करः सूर्यः । तस्य भास्करस्य । ये कराः किरणाः । भक्त्या प्रह्वः प्रणतः तस्मै । भक्तिप्रह्वाय यजमानायेति शेषः । दातुम् । मुकुलानि कुड्मलानि । "कुड्मलो मुकुलोऽस्त्रियामि"त्यमरः । तेषां पुटानि तान्येव कोटरं मध्यविवरम् । तस्य क्रोडः अपवरकम् । तस्मिन् लीनां लक्ष्मीं श्रियम् । आक्रष्टुमाहर्तुं कामः येषां ते आक्रष्टुकामाः । इव । "तुं काममनसोरपि" इति मकारलोपः । कमलवनानामुद्घाटनं विकासः तत्कमलवनोद्घाटनम् । कुर्वते आकर्षणसामर्थ्यात्करा इत्युक्तम् । कालो यमः तस्य आकार इव आकारो यस्य सः कालाकारश्चासावन्धकारश्च तस्य आननं मुखम् । तस्मिन् पतितं यस्य तत् । जगत् तस्य साध्वसं भयं । तस्य ध्वंसो नाशः । तस्मिन् कल्पाः समर्थाः । किसलयानां पल्लवानां रुचिः छाया येषां ते किसलयरुचयः । भास्करस्य ते कराः । वः कल्याणं मङ्गलं क्रियासुः ॥ २

பக்திப்ரஹ்வாய தாதும் முகுலபுடகுடீ-
கோடரக்ரோடலீனாம்
லக்ஷ்மீமாக்ரஷ்டுகாமா இவ கமலவனோ-
த்காடனம் குர்வதே யே ।
காலாகாராந்தகாரானனபதிதஜகத்-
ஸாத்வஸத்வம்ஸகல்பா:
கல்யாணம் வ: க்ரியாஸு:
கிஸலயருசயஸ்தே கரா பாஸ்கரஸ்ய ॥ 2

சூரியன் தன் செங்கதிர்களால் தாமரை மலர்களை மலரச் செய்கின்றானல்லவா! அதன் காரணத்தைக் கவி வெளியிடுகின்றார்:

தாமரை மலர் மஹாலக்ஷ்மியின் இருப்பிடமென்பது அனைவருக்கும் தெரியும். அவள், மலரப்போகும் தாமரையின் 'மொக்கு' என்ற குடிலில் ஒளிந்து கொண்டவள் போல அமர்ந்திருக்கிறாள். இந்நிலையில், தன்னை வணங்கும் பக்தர்களுக்கு லக்ஷ்மியின் கடைக்கண் நோக்கும், அதனால் செல்வமும் உண்டாகவேண்டும் என்ற எண்ணத்தால் 'கிரணங்கள் என்ற தனது கைகளால்' தாமரை மொட்டுக்களைத் திறந்துவிடுகிறான் சூரியன். உள்ளே அமர்ந்திருக்கும் லக்ஷ்மி தென்படுகிறாள். அவள் பார்வை பக்தர்களின் மேல் விழுகிறது. அவர்களும் செல்வந்தர்கள் ஆகின்றனர். அதற்காகத்தான் சூரியன் தாமரையை மலரச் செய்தானோ ?

சூரியன் உதயமானால், எங்கும் பரவியுள்ள இருள் நீங்கும் என்பது யாவரும் அறிந்ததே. ஆயினும் கவியின் கற்பனை. இருள் கருமை நிறமுள்ள யமனைப் போன்றது. யமன், மக்களின் உயிரை வாங்கி கீழே வீழ்த்திவிடுகிறான். இருள், மக்களின் உணர்வை (வாங்கி படுக்கையில்) வீழ்த்தி விடுகிறது. ஆகவே, சூரியன் தன் ஆயிரக்கணக்கான கிரணங்களாகிற கைகளால் யமனையொத்த இருளை வீழ்த்தி மக்களின் சங்கடங்களை போக்கி தங்களது செயல்களில் ஈடுபடச்செய்கிறான்.

இவ்வாறு, மக்களின் வாழ்க்கையை உயர்த்தும் சூரியனின் மாந்துளிர்போலச் சிவந்த இளம் கதிர்கள் உங்களைக் காக்கட்டும்,

गर्भेष्वम्भोरुहाणां शिखरिषु च शिताग्रेषु तुल्यं पतन्तः
प्रारम्भे वासरस्य व्युपरतिसमये चैकरूपास्तथैव ।
निष्पर्यायं प्रवृत्तास्त्रिभुवनभवनप्राङ्गणे पान्तु युष्मा-
नूष्माणं सन्तताध्वश्रमजमिव भृशं बिभ्रतो ब्रध्नपादाः ॥ ३

गर्भेष्विति । अम्भोरुहाणां पद्मानां गर्भेषु उदरेषु, शिताग्रेषु तीक्ष्णशृङ्गेषु । शिखराणि एषां सन्तीति शिखरिणः पर्वताः तेषु शिखरिषु च । तुल्यं मानं क्रियाविशेषणम् । एकरूपमिति यावत् । पतन्तः । वासरस्य दिनस्य । प्रारम्भे प्रातःकालेऽप्युपरतिसमये समाप्तिकाले च अस्तमयसमय इत्यर्थः । चकारः समुच्चये । तथैव पूर्ववत् । एकरूपाः समानदीप्तयः (रक्तवर्णा) इत्यर्थः । निर्गतः पर्यायो यस्मिन् कर्मणि तत् निष्पर्यायं, युगपदित्यर्थः । त्रीणि भुवनानि त्रिभुवनं, त्रिभुवनमेव भवनं गृहं, "भवनागारमन्दिर"मित्यमरः । तस्य प्राङ्गणं तस्मिन् त्रिभुवनभवनप्राङ्गणे प्रवृत्ताः । अध्वनि श्रमः सन्ततश्चासावध्वश्रमश्च । तस्माज्जातं सन्तताध्वश्रमजनितम् । ऊष्माणं उष्णत्वं भृशमित्यर्थः । बिभ्रतः धारयन्तः ब्रध्नस्य । "भास्कराहस्करब्रध्न" इत्यमरः । पादाः रश्मयः "पादा रश्म्यङ्घ्रितुर्यांशाः" इत्यमरः । युष्मान् पान्तु रक्षन्तु सन्तता-ध्वश्रमजमिति पदसामर्थ्यात्तादशब्दोऽत्रविवक्षितः ॥ ३

கர்பேஷ்வம்போருஹாணாம் சிகரிஷு ச
சிதாக்ரேஷு துல்யம் பதந்த:
ப்ராரம்பே வாஸரஸ்ய வ்யுபரதிஸமயே
சைகரூபாஸ்ததைவ ।
நிஷ்பர்யாயம் ப்ரவ்ருத்தா - ஸ்த்ரிபுவந-
பவந ப்ராங்கணே பாந்து யுஷ்மாந்
ஊஷ்மாணம் ஸந்ததாத்வ-
ச்ரம-மிவ ப்ருசம் பிப்ரதோ ப்ரத்ந பாதா; 3

முதலிரண்டு சுலோகங்களில் சூரியனின் கிரணங்களின் செந்நிறத்தைப் புகழ்ந்து பேசினார் கவி. இந்த சுலோகத்தில் கிரணங்களின் வீச்சைப் புகழ்ந்து பேசுகிறார்.

எந்த ஒளியும், அதன் வீச்சு அகல அகல ஒளி குன்றித்தான் போகும், ஆனால் சூரியனுடைய ஒளி மட்டும் குன்றாது, சூரிய ஒளி கிளம்பும் இடத்தில் எத் திறத்ததோ அது பாயும் இடத்திலும் அதே திறத்தி லுடையது. அது குளத்தில் மலரும் தாமரையாகட்டும், வானளாவி வளர்ந்த பர்வதத்தின் உச்சிமூளையாகட்டும் ஒரே திறத்தினுடையது. சில ஒளிகள் ஒளிரத் துவங்கும் போதும், அணையும் போதும் சற்றுக் குறைவாகத்தான் பிரகாசிக்கும். ஆனால் சூரியனின் ஒளி உதயமாகும் போதும், அஸ்தமிக்கும் போதும் அல்லது நடுப்பகலிலும் ஒரே திறத்தவை. ஆயின் உதயத்தின் போதும், அஸ்தமனத்தின் போதும் செந்நிறமாகவும், நண்பகலில் வெள்ளை நிறமாகவும், வண்ணத்தில் மட்டுமே வித்யாஸம் அவ்வளவே.

சூரியன் கிழக்கில் உதித்து மேற்கே மறைகிறான் என்பது உலக வழக்கு - கவிவழக்கு. உண்மையில் சூரியன் உதிப்பதுமில்லை. மறைவதுமில்லை. ஒருவன் நீண்ட தூரம் நடந்து சென்று களைத்துவிட்டால் அவன் சற்று ஓய்வு வேண்டி தனது கால்களை அகட்டிப் பரப்பி நின்று இளைப்பாறுவான். இதைப் போலவே, சூரியனும் தனது கிரணங்களாகிய பல கால்களை அகட்டி, குத்திட்டு நிற்கிறான் போலும், என்கிறார் கவி

சூரியனைச் சொல்லக்கூடிய சொற்கள் பலவுண்டு. அவற்றில் எங்குமே உபயோகப்படாத 'ப்ரத்ந' (ब्रध्न) என்ற சொல் இங்கு உபயோகப்படுத்துவது சாலச் சிறந்தது. (எல்லை) கட்டுகிறவன் என்று பொருள். 'ஆண்டவன் படைத்த பிரபஞ்சம் இவ்வளவுதான்' என்று எல்லை கட்டு கிறவன் சூரியன் மட்டுமே. ஆண்டவன் படைத்த உலகின் பரப்பெங்கிலும் ஒளியைப் பாய்ச்சுபவன் என்றும் பொருள் கொள்ளலாம்.

प्रभ्रश्यत्युत्तरीयत्विषि तमसि समुद्वीक्ष्य वीतावृतीन्प्राग्

जन्तूंस्तन्तून्यथा यानतनु वितनुते तिग्मरोचिर्मरीचीन् ।

ते सान्द्रीभूय सद्यः क्रमविशददशाशादशालीविशालं

शश्वत्संपादयन्तोऽम्बरममलमलं मङ्गलं वो दिशन्तु ॥ ४

अथ सूर्यस्य तन्तुवायेन साम्यमुच्यते प्रभ्रश्यतीति । तिग्मानि तीक्ष्णानि रोचींषि यस्य सः तिग्मरोचिः सूर्यः । उत्तरीयं प्रावरणं तस्य त्विडिव त्विट् यस्य तत् तस्मिन् उत्तरीयत्विषि । तमसि अन्धकारे प्रभ्रश्यति विनश्यति । वीता विगता । आवृतिः आवरणं येषां ते तान् वीतावृतीन् । जन्तून् प्राणिनः । समुद्वीक्ष्य दृष्ट्वा । प्राक् प्रभाते । मरीचीन् करान् । "भानुः करो मरीच्यस्त्रीत्यमरः" । यथा तन्तूनिव । अतनु महत् । वितनुते विस्तारयते । यथा तन्तुवायोऽप्युत्तरीये प्रभ्रश्यति सति, विगतावृतीन् विगतप्रावरणान् जन्तून्वीक्ष्य तन्तूनतनु वितनुते विस्तारयति तद्वदित्यर्थः । ते मरीचयस्तन्तवश्च सान्द्रीभूय सद्यः । क्रमेण परिपाट्या । विशदाः निर्मलाः । दश च ताः, आशाः दिशश्च । क्रमविशददशाश्च ताः दशाशाश्च ताः एव दशाः । तासां आली पङ्क्तिः । तया विशालं विस्तीर्णम् । अमलं निर्मलम् । अम्बरं आकाशं वस्त्रं च । सम्पादयन्तः । वः युष्मभ्यं चतुर्थीबहुवचनम् । अलं अत्यर्थम् । शश्वत् मङ्गलं दिशन्तु ॥ ४

ப்ரப்ரச்யத்யுத்தரீய த்விஷி தமஸி

ஸமுத்வீக்ஷ்ய வீதாவ்ருதீந் ப்ராக்

ஜந்தூந் தந்தூந் யதா யாநதநு

விதநுதே திக்மரோசிர் மரீசீந் ।

தே ஸாந்த்ரீபூய ஸத்ய: க்ரமவிசத-
தசாசா தசாலீவிசாலம்
சஸ்வத் ஸம்பாதயந்தோ ऽம்பர-
மமலமலம் மங்கலம் வோ திசந்து || 4

பொதுவாக, போர்வையோ அல்லது திரையோ 'ஒரு பொருளை மூடி மறைத்துவிடும்'. இதைப்போலவே, இருளும் பொருளின் தன்மை, நிறம், வனப்பு ஆகிய அனைத்தையுமே மூடி மறைத்து விடுகிறது. ஆனால் ஆடையோ அதை அணிகின்ற ஆடவனாகட்டும், பெண் மகளாகட்டும் அவர்களின் தன்மை, நிறம், வனப்பு, திறன் ஆகியவற்றை வெளிப்படுத்தி அழகூட்டுகிறது.

இதைப்போல, சூரியன் உதிக்கும்போதே 'இருள்' என்ற திரையை அகற்றி, குறுக்கும் நெடுக்குமாக (ஊடு நூல் - பாவுநூல் போல) பத்துத் திசைகளிலும், பாயும் 'கிரணங்கள்' என்ற நூலைச் செலுத்தி ஆடையாகப் புனைந்து, பொருட்களின் மேல் படிய வைத்து; அந்தப் பொருட்களின் தன்மை, நிறம், வனப்பு திறன் ஆகியவற்றை விளக்கிக் காண்பிக்கிறான். இத்தகைய ஒளியென்ற நிர்மலமான ஆடையாக, பத்துத் திசைகளிலும் பரவி ஆகாயத்தின் பரப்பளவு விரிந்த கிரணங்கள் — **क्रम विशद - दशाशा - दशाली - विशालम्** மங்களங்களை நல்கட்டும்.

न्यक्कुर्वन्नोषधीशे मुषितरुचि शुचेवौषधीः प्रोषिताभाः
भास्वद्ग्रावोद्गतेन प्रथममिवकृताभ्युद्गतिः पावकेन ।
पक्षच्छेदव्रणासृक्स्रुत इव दृषदो दर्शयन्प्रातरद्रे-
आताम्रस्तीव्रभानोरनभिमतनुदे स्ताद्गभस्त्युद्गमो वः ॥ ५

न्यक्कुर्वन्निति ॥ आसमन्तात्ताम्रः आताम्रः अतिलोहित इत्यर्थः । ओषधीनां तृणज्योतिषामीशश्चन्द्रः तस्मिन्नोषधीशे, मुषिता अपहृता रुक्

दीप्तिर्यस्य सः तस्मिन्मुषितरुचि सति, शुचा प्रोषिता नष्टा, आभा दीप्तिर्यासां ताः प्रोषिताभाः । ओषधीः न्यक्कुर्वन्, भाः अस्यास्तीति, भास्वान् सूर्यः, तस्य ग्रावाणः सूर्यकान्तमणयः तेभ्य उद्गतः । तेन भास्वद्ग्रावोद्गतेन पावकेन प्रथमं कृता अभ्युद्गतिरभ्युत्थानं यस्य सः । कृताभ्युद्गतिः --विवर्तमानः सूर्यरश्मिसङ्क्रमणात्सूर्यकान्तमणिभ्यः कृशानुरुत्पद्यत इति लोकप्रसिद्धम् । प्रातः प्रभाते अद्रेरुदयपर्वतस्य । पक्षयोरुच्छेदः खण्डनं तेन व्रण तस्य । असृक् रुधिरं तत्स्रवन्तीति पक्षच्छेदव्रणासृक् स्रुत इव । दृषदः शिलाः "पाषाणप्रस्तरग्रावोपलाश्मानः शिला दृषदि" त्यमरः दर्शयन् प्रकटयन् । तीव्रा भानवो यस्य सः तीव्रभानुः तस्य तीव्रभानोर्गभस्तीनां "गभस्तिघृणिघृष्टय" इत्यमरः । उद्गमः उदयः । युष्माकं अनभिमतं पापं नुदतीत्यनभिमतनुत् तस्मै अनभिमतनुदे तन्नाशायेत्यर्थः । स्तात् अस्तु । "तुह्योस्तातङ्ङाशिष्यन्यतरस्यामि"ति तोस्तातङ्ङादेशः ॥ ५

ந்யக்குர்வன் ஓஷதீசே முஷிதருசி
    சுசேவௌஷதீ: ப்ரோஷிதாபா:
பாஸ்வத்-க்ராவோத்-கதேந
    ப்ரதமமிவ க்ருதாப்யுத்கதி: பாவகேன ।
பக்ஷச்சேத-வ்ரணா-ஸ்ருக்ஸ்ருத இவ
    த்ருஷதோ தர்சயன்-ப்ராத-ரத்ரே:
ஆதாம்ர-ஸ்தீவ்ர-பாநோ; அநபிமதநுதே
    ஸ்தாத்-கபஸ்த்யுத்-கமோ வ: ॥ 5

கீழ்வானில சூரியன் உதயமாகிறான். அச்சமயத்தில் கீழ்த்திசையெங்கும் வானம் சிவந்து காணப்படுகிறது. இக்காட்சியைக் கண்ட கவி, 'வானம் சிவந்து காணப் படுவதன் காரணம்தான் என்ன ?' என்று சிந்திக்கிறார். அவருடைய கவியுள்ளத்தில் கற்பனைகள் பிறக்கின்றன.

சூரியன் உதிக்கின்ற காரணத்தால் சந்திரன் ஒளி இழந்துவிடுகிறான். சந்திரனின் மனைவிகளான ஓஷதிகள்[1] (மரம்-செடி-கொடிகள்), "சூரிய உதயத்தால் தனது கணவன் 'ஒளி இழந்துவிட்டானே' " என்று வருந்தி துன்பப்படுகின்றனர், அந்த துன்பத்தின் வெளிப்பாடுதான் கீழ்வானம் சிவந்து காணப்படுகிறதோ? அல்லது சூரியன் உதயமாவதால், உதயகிரியிலுள்ள சூரியகாந்தக் கற்பாறைகளிலிருந்து தீப்பிழம்புகள் கிளம்புகின்றன.[2] அத்தீப்பிழம்புகளின் ஜ்வாலைகள் சூரியனுக்கு நல்வரவு கூறி, கொழுந்துவிட்டு எரிகின்றன. இக்காரணத்தால்தான் வானம் செவ்வானமாகக் காட்சி நல்குகின்றதோ? அல்லது இந்திரன், தனது சக்தியென்ற ஆயுதத்தால் மலைகளின் சிறகுகளை வெட்டி வீழ்த்தியபோது[3] உதயகிரியின் சிறகுகளை வெட்டி வீழ்த்திவிட்டானோ? அச்சிறகுகளிலிருந்து ஒழுகிப் பெருகும் ரத்தத்தின் சிவப்போ? என்று எண்ணுவது போலத் தோன்றும் சூரியனின் சிவந்த கிரணங்கள் உங்களுடைய துன்பங்களைப் போக்கட்டும்.

शीर्णघ्राणाङ्घ्रिपाणीन्व्रणिभिरपघनैर्घर्घराव्यक्तघोषान्

दीर्घाघ्रातानघौघैः पुनरपि घटयत्येक उल्लाघयन् यः ।

घर्मांशोस्तस्य वोऽन्तर्द्विगुणघनघृणानिघ्ननिर्विघ्नवृत्ते-

र्दत्तार्घाः सिद्धसङ्घैर्विदधतु घृणयः शीघ्रमंहोविघातम् ॥ ६

1. ஓஷதிகளின் கணவனாகச் சந்திரன் உருவகிக்கப்படுகிறான்.

2. சூரிய காந்தக்கல் என்று ஒன்று உண்டு என்றும் அது சூரியனின் கிரணங்கள் பட்டதும் தீயை உமிழும் என்பதும் கவி மரபு.

3. மலைகளின் இறக்கைகளை இந்திரன் வெட்டினான் என்றும், இதன் காரணமாகவே மலைகள் பறக்காமல் நிலைத்துவிட்டன என்றும் வேத, இதிஹாஸ, புராணங்களில் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

इदानीं सूर्यस्याखिलरोगमङ्घातविघट्टनपटुत्वमाह शीर्णेति । उल्लाघो व्याधिनिर्मोक: । उल्लाघं करोतीत्युल्लाघयन् "तत्करोति तदाचष्ट" इति निच् प्रत्यय: । एक: एकपक्ष:, य: धर्मांशु: सूर्य: घ्राणं च अङ्घ्रिश्च पाणिश्च घ्राणाङ्घ्रिपाणि द्वन्द्वश्च "प्राणितूर्य सेनांगानामि"ति द्वन्द्वैकवद्भाव: । शीर्णं छिन्नं घ्राणाङ्घ्रिपाणि व्रणमेषां अस्तीति व्रणिन:, तै: व्रणिभि: अपघनै: अङ्गै: "अपघनोऽङ्गमि"ति निपातनात् । उपलक्षणम् । तृतीया तै: उपलक्षितान् घर्घरा: अव्यक्तघोषा: । अव्यक्तवचनं यथा तथा घोषा: येषां तान् घर्घराव्यक्तघोषान् । जघौघै: पापसमूहै: । दीर्घं आयतं घ्रातं निश्वासा येषां ते तान् दीर्घघ्रातान् कुरूपादिमहाव्याधियुक्तान् । पुनरपि घटयति संपूर्णावयवान् करोतीत्यर्थ: । अन्तर्हृदये द्विगुणा घृणा महती घृणा घन च घृणा तया निघ्ना अधीना "अधीनो निघ्न आयत्त" इत्यमर: । निघ्ना उपद्रव: निर्विघ्ना च समावृत्तिश्च अन्तर्द्विगुणघनघृणा निर्विघ्नवृत्तिर्यस्य स: अन्तर्द्विगुणघन-घृणानिघ्ननिर्विघ्नवृत्ति: तस्य । धर्मा: उष्णा: अंशवो यस्य स: धर्मांशु: सूर्य: तस्य धर्मांशो: । सिद्धानां सङ्घा: समूहा: तै: सिद्धसङ्घै: सिद्धा इत्युप-लक्षणम् । यक्षगुह्यकरक्षोरगविद्याधरकिन्नरकिम्पुरुषमनुष्यादिसङ्घै: इत्यर्थ: । दत्त: अर्घा येभ्यस्ते दत्तार्घा: । घृणय: रश्मय: । व: युष्माकम् । शीघ्रमाशु अहोविघातं पापविनाशं । विदधतु कुर्वन्तु । विपूर्वाद्दधाति करोतीत्यर्थ: ॥

சீர்ண-க்ராணாங்க்ரி-பாணீந்-வ்ரணி-பி-
ரபகநை:-கர்கரா-வ்யக்த-கோஷான்
தீர்காக்ராதாநகௌகை: புநரபி கடயத்-
யேக உல்லாகயன் ய:।
கர்மாம்சோஸ்தஸ்ய வோ஽ந்தர் த்விகுண-
கநக்ருணா-நிக்ந-நிர்விக்நவ்ருத்தே:
தத்தார்கா: ஸித்தஸங்கை:-விததது
க்ருணய: சீக்ரமம்ஹோ-விகாதம் ॥

மிகக் கொடிய பாவத்தின் காரணமாக ஏற்படும் நோய் குஷ்டரோகம். (कुष्णातीति कुष्ट) உடல் உறுப்புக்களைக் குறைக்கின்ற காரணத்தால் குஷ்டரோகம் எனப்பட்டது. இந்த நோயினால் குறைந்த மூக்கு, குறைந்த கை-கால்கள், இவற்றில் தோன்றும், புண்கள்-ரணங்கள், அதில் தோன்றும் சீழ், அதனால் பரவும் துர்நாற்றம். ஆகிய வினைகளையும்; அறிவினால் தோன்றுவது பேச்சு, இத்தகைய பேச்சில் தெளிவின்மை: சஞ்சலமான, திடமற்ற மனம்; (அறிவில் தோன்றும் ஊனம், மனதில் தோன்றும் ஊனம்) ஆகிய அனைத்து வியாதிகளையும் நீக்கி, தெளிவான பேச்சையும், உறுதியான உள்ளத்தையும் நோயற்ற வாழ்வையும் நல்குகின்றவன் சூரியன். இத்தகைய நோயாளிகளிடம் வெறும் வார்த்தைகளால் ஆறுதல் கூறுவது மட்டும் போதாது. சாதாரணமான பரிவை இருமடங்காக்கிச் செயல்பட்டு, அந்த நோயாளிக்கும் பணிவிடை செய்வதற்கு இடைவிடா முயற்சி வேண்டும். அத்தகைய சூரியனை ஸித்த புருஷர்கள் அர்க்யம் கொடுத்து உபசரித்துக் கொண்டாடுகிறார்கள். அந்த சூரியனுடைய கிரணங்கள் உங்கள் பாவங்களைப் போக்கட்டும்.

இந்நூலாசிரியர் 'மயூர கவி'க்கு குஷ்டரோகம் இருந்ததாகவும், இக்கொடிய நோயிலிருந்து மீளவே 'சூரியசதகம்' என்ற இந்த நூலைப்பாடியுள்ளார் என்பதும் இலக்கிய உலகின் பொதுக்கருத்து. இக்கருத்துக்கு வலுவூட்டுவதாகவே இச்சுலோகத்தில் தொழுநோயாளிகளிடையே தோன்றும் நோய்களை வருணித்துள்ளார் என்பது தெளிவு. 'ஆதி' என்பது மனத்தைப் பற்றி வரும் நோய். வியாதி என்பது உடலைப் பற்றி வரும் நோய். இவ்விரண்டு வகை நோயையும் நீக்குகின்றவன் சூரியன் என்கிறார் கவி.

विभ्राणा वामनत्वं प्रथममथ तथैवांशवः प्रांशवो वः
क्रान्ताकाशान्तरालास्तदनु दशदिशः पूरयन्तस्ततोऽपि ।

ध्वान्तादाच्छिद्य देवद्विष इव बलिनो विश्वमाश्वश्नुवाना:
कृच्छ्राण्युच्छ्रायहेलोन्तर्हसितहरयो हारिदश्वा हरन्तु ॥ ७

बिभ्राणा इति । उच्छ्रायया उन्नतया, हेलया लीलया, अन्तर्हसित: अनुकृत:, हरिर्विष्णुर्यैषां ते उच्छ्रायहेलोन्तर्हसितहरय: । प्रथमं वामनत्वं ह्रस्वत्वं, बिभ्राणा: धारयन्त: । अथ अनन्तरं । प्रांशव: दीर्घा: । तथैव क्रान्तं व्याप्तम् । आकाशस्यान्तरालं मध्यमं यैस्ते आक्रान्ताकाशान्तराला: । तदनु दशदिश: पूरयन्त: व्याप्नुवन्त: । ततोऽपि देवद्विष: सुरशत्रव: । बलिन इव ध्वान्तात् अन्धकारात् । आच्छिद्य आक्षिप्य । आशु शीघ्रम् विश्वं जगत् । अश्नुवाना: व्याप्नुवन्त: । हरित: अश्वा यस्य स: हरिदश्व: सूर्य: तस्येमे, हारिदश्वा: सूर्यसम्बन्धिन: । अंशव: युष्माकम् । कृच्छ्राणि दु:खानि हरन्तु ॥ ७

பிப்ராணா வாமனத்வம் ப்ரதமமத
ததைவாம்சவ: ப்ராம்சவோ வ:
க்ராந்தாகாசாந்தரலா: ததநு
தசதிச: பூரயந்தஸ்ததோ஽பி ।
த்வாந்தாதாச்சித்ய தேவத்விஷ இவ
பலிநோ விச்வமாச்வச்நுவானா:
க்ருச்சாண்யுச்ராய ஹேலோபஹஸித-
ஹரய: ஹாரிதச்வா ஹரந்து ॥ 7

உதிக்கும் சூரியனைப் பார்க்கும் கவிஞர் உள்ளத்தில் ஒரு வியப்பு! உதயமாகும்போது சூரிய கிரணங்கள் ஒரு குறிப்பிட்ட அளவில்தான் பரவுகின்றன. ஆனால், இதே சூரியன் உச்சியை அடைந்தபோது அதன் கிரணங்கள் எங்குமே வியாபிக்கின்றனவே! இது போலத்தானே திருமாலின் அவதாரமான வாமனாவதாரமும், திரிவிக்ரம அவதாரமும் நடைபெற்றது! என்று சிந்திக்கின்றார். இதன்

விளைவாக சூரியனையும் திருமாலையும் இணைத்து கவியுள்ளம் சிந்திக்கின்றது கவிதையும் பிறக்கிறது.

ஒளிமிக்க சூரிய கிரணங்கள் உதிக்கும்போது சிறுசிறு கதிர்களாக வெளிப்படுகின்றன பிறகு வானம் எங்கும் திக்குகள் பத்திலும் ஊடுருவி வளர்ந்து, இருட்டிலிருந்து பிரபஞ்சத்தை மீட்கின்றன. இது எப்படி எனில் வாமனனாக வந்த மஹாவிஷ்ணு, தேவர்களின் பகைவனான மஹாபலியிடமிருந்து யாசித்து திரிவிக்ரமனாக வளர்ந்து மூவுலகையும் மீட்டானே! அப்படி. அந்தத் திரிவிக்ரமனையும் விஞ்சி வளர்ந்துவிட்ட சூரியனின் கிரணங்கள் ஹரியைக் கூட பரிகசிக்கின்றனவே!

திதி குமாரனான பலிச்சக்ரவர்த்தி தேவர்களுக்குத் துன்பமிழைத்தான். அத்துன்பங்களிலிருந்து விடுதலை பெற, தேவர்கள் திருமாலிடம் முறையிட்டனர். இதன் காரணமாக திருமால் மஹாபலியிடம் மூன்றடி மண்ணை யாசிக்க அந்தணச் சிறுவனாக அவதரித்தார். அப்போது, வாமனனாக வந்த திருமால் தனது சக்திகளை வெளிப்படுத்தாமலேயே தோன்றினார் மூன்றடி மண்ணைத் தானமாகப் பெற்றதும், திரிவிக்ரமனாக வளர்ந்து மூவுலகிலும் வியாபித்து நின்று உலகைக் காத்தார். இதைப் போலத்தான் சூரியன் உலகைக் காக்க சிறுசிறு ஒளிக் கிரணங்களைப் பரப்பி 'இருள்' என்ற அசுரனை அழிக்க. உதய காலத்தில் வாமனன் போலத் தோன்றுகின்றான். நடுப்பகலில் திரிவிக்ரமன் போலத் தனது கிரணங்களை மூன்று உலகங்களிலும், (பத்துத் திசைகளிலும்) வியாபிக்குமாறு பூர்ணமாகப் பரப்புகிறான். பொன்வண்ணமுடைய தேர்க்குதிரைகள் போன்ற சூரியனின் கிரணங்கள் உங்களுடைய கவலைகளை நீக்கியருளட்டும்.

उद्गाढेनारुणिम्ना विदधति बहुलं येऽरुणस्यारुणत्वं

मूर्धोद्धूतौ खलीनक्षतरुधिररुचो ये रथाश्वाननेषु ।

शैलानां शेखरत्वं श्रितशिखरशिखास्तन्वते ये दिशन्तु
प्रेङ्खन्तः खे खरांशोः खचितदिनमुखास्ते मयूखाः सुखं वः ॥ ८

उद्गाढेनेति । ये मयूखाः उद्गाढेन अत्यन्तं निबिडेन अत्यन्तोन्नतेन । अरुणस्य भावः अरुणिमा, तेन अरुणिम्ना अतिलोहितत्वेन । अरुणस्य सूर्यसारथेः "मिहिरारुण पूषणः" इत्यमरः । अरुणत्वं लोहितत्वम् । बहुलं सान्द्रम् । विदधति । मूर्ध्नः शिरसः उद्धूतिः उत्क्षेपणं तस्यां मूर्धोद्धूतौ खलीनेन अश्ववक्त्रक्षिप्तेन मुखयन्त्रेण क्षतं व्रणं तत्र रुधिरं रक्त तस्य रुगिव रुग्येषां ते खलीनक्षतरुधिररुचः । ये मयूखाः रथाश्वानामाननेषु । क्षिताः इति शेषः । शिखराणां शृङ्गाणाम् । शिखाः कोटयः । श्रिताः शिखर शिखाः यैः ते. श्रितशिखरशिखाः । ये मयूखाः । शैलानां पर्वतानाम् । शेखरत्वं मौलित्वम् । तन्वते कुर्वते । ते खे आकाशे । प्रेंखन्तः । खचितं रचितम् । दिनस्य मुखं दिवसप्रारम्भो यैस्ते खचितदिन-मुखाः ते । खरांशोः सूर्यस्य मयूखाः । सुखं युष्माकं दिशन्तु ॥ ८

உத்காடேநாருணிம்நா விதததி பஹுலம்
யே அருணஸ்யாருணத்வம்
மூர்த்தோத்தூதௌ கலீநக்ஷதருதிரருசோ
யே ரதாச்வாநநேஷு ।
சைலாநாம் சேகரத்வம் ச்ரிதசிகரி-சிகா-
ஸ்தந்வதே யே திசந்து
ப்ரேங்கந்த: கே கராம்சோ: கசிததிமுகா-
ஸ்தே மயூகா ஸுகம் வ: ॥ 8

உதிக்கின்ற செங்கதிரைப் பார்க்கும் கவியுள்ளத்திற்கு, சூரியன், இத்தகைய செம்மைக்கிரணங்களைத் திசையெங்கும் பரப்பக்காரணந்தான் என்ன? என்று சிந்திக்கின்றார்.

சூரியனின் சாரதி அருணனோ! இயல்பாகவே சிவந்த மேனியுடையவன். இவனுக்கு மேன்மேலும் சிவப்பை, சூரியன் கொடுப்பதால்தான் இத்தகைய சிவப்பு, வான வெளியெங்கும் பரவியுள்ளதோ ? அல்லது சூரியன், தனது ரதத்தில் பூட்டியுள்ள குதிரைகளின் வேகத்தையடக்க, அவற்றின் வாய்களில் கடிவாளத்தைப் பொருத்தி இருப்பதின் காரணமாகவே வாய்களிலிருந்து வழியும் ரத்தப் பெருக்கின் தோற்றந்தான் இச்செம்மைக்குக் காரணமோ ? ஆஹா ! ... இதோ பர்வதங்களின் சிகரங்களுக்கு மேலே சென்று காட்சி நல்கும், சூரிய கிரணங்கள் மகுடத்திலுள்ள 'மாணிக்க மணி' போலல்லவா பிரகாசிக்கின்றன. இவை இப்போது வானவீதியில் செல்லப் புறப்பட் விட்டன, இவை புறப்பட்டுச் செல்வதால்தானே 'நாள்' (தினம்) என்பது உருவாகிறது. இத்தகை 'நாளை' உருவாக்குகின்ற சூரிய கிரணங்கள் உங்கள் அனைவருக்கும் சகல சுகங்களையும் நல்கட்டும்.

அருணன் சூரியனுக்குச் சாரதியாக விளங்குகின்றவன், இவன் 'சாரதியாக' விளங்குவதற்குரிய கதை மஹாபாரதத்தில் காணப்படுகிறது. ஒரு சமயம் ராகு சூரியனைப் பிடித்தபோது தேவதைகளில் எவருமே சூரியனுக்கு உதவவில்லை. இதனால் மனம் வருந்திய சூரியன் அனைத்து உலகையும் எரித்துவிட தீர்மானித்தான். 'எதிர்பாராத நிலையில் உலகம் அழித்துவிடும் ஆபத்தை' உணர்ந்த தேவர்கள், அருணனை சூரியனின் தேர்த்தட்டில் அமர்த்தி சாரதியாக்கினார்கள். அருணனின் மிகப்பெரும் தேஜஸ்ஸின் காரணமாகச் சூரியனும் சற்று ஒளி குன்றினானாம், அன்று முதல் சூரியனின் சாரதியாகவே அருணன் விளங்குகின்றான்' என்று மஹாபாரதத்தில் காணப்படுகிறது.

மேலும், இந்த நூலின் 44-49 ஆம் சுலோகங்களில் தேர்க்குதிரைகளின் வர்ணனைகள் பேசப்படுகின்றன. 45, 47, 92 ஆகிய சுலோகங்களில் சூரியனது குதிரைகள் மஞ்சள், வெளிர் மஞ்சள் நிறமுடையவை என்றும் பேசப்படுகின்றன.

दत्तानन्दाः प्रजानां समुचितसमयाकृष्टसृष्टैः पयोभिः
पूर्वाह्णे विप्रकीर्णा दिशि दिशि विरमत्यह्नि संहारभाजः ।
दीप्तांशोर्दीर्घदुःखप्रभवभवभयोदन्वदुत्तारनावो
गावो वः पावनानां परमपरिमितां प्रीतिमुत्पादयन्तु ॥ ९

अथ सूर्यस्यरश्मिनां धेनुसाम्यमाह दत्तानन्दाः इति । समुचितश्चासौ समयश्च कालश्च तस्मिन्नाकृष्टानि जलानि तत्सृष्टानि त्यक्तानि तैः समुचितसमयाकृष्टसृष्टैः । पयोभिर्जलैः । अन्यत्र क्षीरैः । दत्तः आनन्दः हर्षः यैस्ते दत्तानन्दाः प्रजानामित्यत्रान्वयः । पूर्वाह्णे प्रभाते दिशि दिशि प्रकारवचने द्विर्वचनम् । विप्रकीर्णा इतस्ततो गताः प्रातःकालीनानागता इत्यर्थः । तथा अह्नि दिवसे विरमति समाप्तिं गते सति । संहारभाजः सङ्कोचभाजः । उभयत्र समानमेतत् । दीर्घं च दुःखं च प्रभवत्यस्मादिति प्रभवः कारणं दीर्घदुःखप्रभवश्चासौभवः संसारश्च तस्माद्भयं तदेवोदन्वान् । "उदधिः सिन्धुरि"त्यमरः । उत्तारस्तरणं तस्मिन् नावः यानपात्राणि(नौकाः)- दीर्घदुःखप्रभवभवभयोदन्वदुत्तारनावः । पावनानां पवित्राणां मध्ये परमुत्कृष्टाः रूपकमेतत् । दीप्ताः प्रकाशमानाः । अंशवः यस्य सः दीप्तांशुः सूर्यः तस्य दीप्तांशोः । गावः रश्मयः धेनवश्च । स्वर्गेषु "पशुवाग्वज्रधिङ्नेत्रघृणिभूजल"मित्यमरः । वः युष्माकम् । अपरिमितां सम्पूर्णाम् । प्रीतिमुत्पादयन्तु ॥ ९

தத்தாநந்தா: ப்ரஜாநாம் ஸமுசிதஸமயா-
க்ருஷ்ட ஸ்ருஷ்டை; பயோபி:
பூர்வாஹ்நே-விப்ரகீர்ணா திசி திசி விரமத்-
யஹ்நி ஸம்ஹார பாஜ: ।

தீப்தாம்சோ: தீர்கது:கப்ரபவபவபயோ-
தந்வதுத்தாரநாவோ
காவோ வ: பாவநாநாம்
பரமபரிமிதாம் ப்ரீதிமுத்பாதயந்து || 9

சூரியனின் உதயத்தைக் காண்கிறார் கவி. சூரியன் தனது கிரணங்களைத் திசையெங்கும் பரப்புவதையும் காண்கிறார். இங்ஙனம் கிரணங்களைப் பரப்புவதன் காரணந்தான் என்ன? என்று சிந்திக்கிறார். அந்தச் சிந்தனையின் பயனாக விளைந்ததே இந்த சுலோகம்.

காலையில் சூரிய கிரணங்கள் திசைகளெங்கும் பரவி, மாலையில் அவை ஒடுங்கிக்கொள்கின்றன. வெண்மையான கிரணங்கள் பூமியிலுள்ள தண்ணீரை உறிஞ்சி, உரிய காலத்தில் மழையாகப் பொழிவித்து, மக்களுக்கு உண்ண உணவும், பருக நீரையும் அளிக்கின்றன. இதனால் உலக உயிர்கள் சுகமாக வாழ்கின்றன. இதுமட்டுமா? சம்சார சாகரத்தில் வெகுகாலம் உழன்று துன்பப்படும் உயிர்களுக்கு ஒரு தோணிபோலிருந்து அவர்களைக் காக்கின்றன. இத்தகைய சூரிய கிரணங்கள் அனைவருக்கும் அபரிமிதமான சுகங்களைக் கொடுக்கட்டும்,

இந்தச் சுலோகத்தில் गाव: என்ற சொல் மட்டும் சிலேடையாக பசுக்களையும், சூரிய கிரணங்களையும் குறிக்கிறது. பசுக்கள் உரிய காலத்தில் காலையிலும், மாலையிலும் பால் தந்து மக்களை மகிழ்விக்கின்றன. முற்பகலில் திசையெங்கும் மேயப்போகின்றன. மாலையில் வீடு வந்துசேர்கின்றன. அதுபோல, சூரிய கிரணங்களும், உரிய காலத்தில் கோடை நாட்களில் தண்ணீரை உறிஞ்சி மேகங்களில் சேமித்து — மழை நாட்களில் பொழிந்து மக்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கின்றன. காலையில் அவை (கிரணங்கள்) திசையெங்கும் பரவுகின்றன. மாலையில் அவை ஒடுங்குகின்றன. இவ்விதம் (गाव:) காவ: என்ற சொல்லின் பொருளான பசுக்களுக்கும், கிரணங்களுக்கும்

ஒத்தாற்போல் பொருள் கூறமுடிந்தாலும், அந்த அடைமொழிகளில் சிலேடை இல்லை. ஆயினும், அவற்றின் சொல்லமைப்பு இரண்டுக்கும் பொருத்தமாகப்வே இருக்கிறது. ஆகவே, இது சிலேடை அலங்காரமல்ல. இந்த சுலோகத்தை எடுத்தாண்ட ஆனந்தவர்தனர் சொற்களின் பொருள்கள் இரண்டுக்கும் ஒட்டுகின்ற முறையில் வியங்கியமாகத் தொனிக்கின்றன என்று த்வன்யாலோகத்தில் கூறுகிறார்.

बन्धध्वंसैकहेतुं शिरसि नतिरसाबद्धसन्ध्याञ्जलीनां
लोकानां ये प्रबोधं विदधति विपुलाम्भोजषण्डाशयेव ।
युष्माकं ते स्वचित्तप्रथिमपृथुतरप्रार्थनाकल्पवृक्षाः
कल्पन्तां निर्विकल्पं दिनकरकिरणाः केतवः कल्मषस्य ॥ १०

बन्ध इति । यस्य किरणाः शिरसि नतिर्नमस्कारः । तस्मिन्रसः अनुरागः । तेन आबद्धाः सन्ध्यायामञ्जलयो येषां तेषां नतिरसाबद्धसन्ध्याञ्जलीनाम् । लोकानां जनानाम् । लोकस्तु 'भुवने जने' इत्यमरः । बन्धः संसारबन्धः । तस्य ध्वंसो नाशः तस्मिन्नेकहेतुं मुख्यकारणम् । प्रबोधं सम्यग्ज्ञानम् । ये विदधति उत्पादयन्ति । अम्भोजानां पद्मानाम् । षण्डं समूहः । विपुलं महत् । तच्च तत् अम्भोजषण्डं तस्मिन् महती आशा अभिलाषः तया । विपुलाम्भोजषण्डाशयेव । विदधति कुर्वन्ति । स्वस्य चित्तं मनः, तस्य प्रथिमा पृथुत्वं तेन पृथुतरा महत्तरा, सा च सा प्रार्थना च, तस्याम् । कल्पवृक्षाः स्वचित्तप्रथिमपृथुतरप्रार्थनाकल्पवृक्षाः । ननु चित्तस्य पृथुत्वं कथम् ? बहुवि(ध)विषयाश्रितत्वेन चित्तस्य पृथुत्वमस्तीत्यर्थः । ते दिनकरकिरणाः । कल्मषस्य पापस्य । केतवः नाशहेतवः । युष्माकम् । निर्विकल्पं निर्विकारं क्रियाविशेषणम् । कल्पन्तां समर्थाः भवन्तु ॥ १०

பந்த-த்வம்ஸைகஹேதும் சிரஸி நதிரஸா-
பத்த ஸந்த்யாஞ்சலீநாம்
லோகாநாம் யே ப்ரபோதம் விதததி விபுலாம்-
போஜ ஷண்டாச யேவ ।
யுஷ்மாகம் யே ஸ்வசித்த ப்ரதிம ப்ருதுதர-
ப்ரார்த்நா-கல்ப-வ்ருக்ஷா:
கல்பந்தாம் நிர்விகல்பம் தினகர-கிரணா:
கேதவ: கல்மஷஸ்ய ॥ 10

சூரிய கிரணங்களை வழிபடுகின்றவர்களுக்குரிய பயன் பற்றி இந்த சுலோகத்தால் விளக்குகிறார் கவி.

ஸந்தியா காலங்களில் சூரியனை வழிபடுவது சிறப்புக் குரியது இக் காலங்களில் தலைமேல் கை குவித்துத் தொழும் அடியார்களின் கூப்பிய கரங்கள் தாமரை மொட்டைபோலக் காணப்படுகின்றன. சூரியனின் கிரணங்கள் அந்தத் தாமரை மொட்டுக்களை மலர்விப்பதைப் போல, அஞ்சலி செலுத்தும் அடியார்களுக்கு, சம்சார பந்தத்தை (பிறவிப் பெருந்தளை)க் கடக்கும் ஞானத்தை (பேரறிவை) அளித்து மலரச் செய்கின்றன. இது மட்டுமா? அவர்களுடைய உள்ளத்தில் தோன்றும் அனைத்து விருப்பங்களையும், தனது கிரணங்கள் வாயிலாக கற்பக மரத்தைப்போல அருளுகின்றன. இத்தகைய சிறப்புமிக்க சூரிய கிரணங்கள் உங்களுடைய பாபங்களை அழிக்கட்டும்.

கற்பக விருக்ஷத்தின், அடியில் நின்று யார் எதை விரும்பினாலும், அவற்றையெல்லாம் அளிக்கும் தன்மையுடையது என்பது புராணக் கொள்கை.

ध्वारा रयोऽध्वनायापदि सपदि करालम्बभूताः प्रपाते
तत्त्वालोकैकदीपास्त्रिदिवपति[1]पुरप्रस्थितौ वीथ्य एव ।
निर्वाणोद्योगियोगिप्रगमनिजतनुद्वारि वेत्रायमाणा-
स्त्रायन्तां तीव्रभानोर्दिवसमुखसुखाः रश्मयः कल्मषाद्वः ॥ ११

1. "स्त्रिदशपति" इति पाठः B. 4961 / 3937.

धारा इति । धनाया नाम धनाशा । सैव आपत् तस्यां धनायापदि दुर्भिक्षापदीत्यर्थः । "अशनायो दन्या धनाया बुभुक्षापिपासागर्धेषु" इति निपातः । रायो धनस्य धाराः । भवन्तीतिशेषः । यद्वा आपदि अधनाय धनरहिताय पुरुषाय । रायो धनस्य । धाराः (भवन्ति) प्रपातः दुर्गतिः, तस्मिन् प्रपाते नरकपात इत्यर्थः । सपदि तदानीमेव करालम्बभूताः हस्तालम्बसाधनाः । तत्त्वस्य परमात्मतत्त्वस्य । आलोकः प्रकाशः । तस्मिन् एक दीपाः । यद्वा तत्त्वस्य घटपटादेः आलोके प्रकाशे मुख्यदीपाः । त्रिदिवस्य स्वर्गस्य पतिः इन्द्रः । तस्य पुरममरावती । तं प्रति प्रस्थितिर्गमनम् । तस्यां त्रिदिवपतिपुरप्रस्थितौ वीथ्य एव मार्ग एव निर्वाणं मोक्षः । "निर्वाणं सूनृनामोक्षे विगमे गतमज्जन" इति यादवः । तस्य उद्योगः प्रयत्नः निर्वाणोद्योगोऽस्यास्तीति निर्वाणोद्योगी सचासौ योगी च तस्य प्रगमः गमनम् । निजा च सा तनुश्च निजतनुः, स्वकीयशरीरं सैव द्वाः द्वारमिव तस्मिन् । निर्वाणोद्योगियोगिप्रगमनिजतनुद्वारि । "उपमितं व्याघ्रादिभिः सामान्याप्रयोगः" इत्युपमित समासः । वेत्रमिवाचरन्तीति वेत्रायमाणाः । वेत्राणि राजभवनद्वारे अनभिमतपुरुषापसरणविधानसाधनानि । सूर्यमण्डलं भित्वा योगी व्रजतीत्यागमः । दिवसस्यमुखे सुखयन्तीति दिवसमुखसुखाः । तीव्रभानोः रश्मयः । वः युष्मान् । कल्मषात् पापात् । त्रायन्तां रक्षन्तु ॥ ११

தாரா ராயோऽதநாயாபதி ஸபதி
கராலம்பபூதா: ப்ரபாதே
தத்வாலோகைக தீபா: த்ரிதிவபதிபுர-
ப்ரஸ்திதௌ வீத்ய ஏவ ।
நிர்வாணோத் யோகி யோகி ப்ரகம-
நிஜதநுத்வாரி வேத்ராயமாணா:
த்ராயந்தாம் தீவ்ர-பாநோ:-
திவஸமுகஸுகா: ரச்மய: கல்மஷாத்வ: ॥ 11

இந்த சுலோகத்தில் சூரிய கிரணங்கள் உலக மக்களுக்குச் செய்யும் நன்மைகளைக் கூறுகின்றார் கவி.

மனிதர்கள், தங்களது நிலையிலிருந்து 'தாழ்வுற்ற போது' அவர்களை கைகொடுத்துத் தூக்கி விடுகின்றன. இங்கு 'தாழ்வு' என்பது பொருளாதாரத்தினாலும், ஆரோக்யத்தினாலும் என்று விரிவடையும். பொருளாதாரத்தால் வீழ்ச்சியுற்றவர்களுக்கு தனமாகிய செல்வத்தைத்தொடர்ந்தளித்து அவர்களை உயர்த்திவிடுகின்றன. நோயினால் வீழ்ச்சியுற்றவர்களுக்கு, ஆரோக்யத்தைக் கொடுத்து அவர்களது வாழ்வில் உயர்நிலையை அடையச் செய்கின்றன இதன் காரணமாகவே आरोग्यं भास्करादिच्छेत् என்ற பழமொழியும் ஏற்பட்டது. பாரமார்த்திக தத்துவத்தை அறிய விரும்புகின்ற யோகிகள் முன்னேறும் போது அவர்களுடைய உள்ளத்தில் அறியாமை புகாதவாறு தடுக்கின்ற காவல்காரனின் பிரம்புகள் போன்றவை சூரிய கிரணங்கள். இது மட்டுமா? அவை சுவர்கம் போகின்றவர்களுக்குச் சாலையாகவே அமைகின்றன. புறமுதுகு காட்டாது போரிட்டு உயிர் துறந்த வீரனும், யோகமார்கத்தில் திறன்பெற்று மோக்ஷத்தையெட்டும் ஞானிகளும், இந்த சரீரத்தை விடுத்து உயிர் நீங்கும்போது அந்த ஜீவன் (உயிர்) சூரிய மண்டலத்தைக் கடந்தே (பிளந்தே) (सूर्यमण्डलभेदिनौ) சொர்கம் செல்கின்றனர் என்பது சாஸ்திரங்களின் முடிவு. இத்தகைய சிறப்பு வாய்ந்த சூரியனின் ஒளிக் கிரணங்கள் உங்களுடைய பாபங்களை நீக்கி உங்களைக் காக்கட்டும்.

प्राचि प्रागाचरन्त्योऽनतिचिरमचले चारु चूडामणित्वं
मुञ्चन्त्यो रोचनाम्बु प्रचुरमिव दिशामुच्चकैश्चर्चनाय ।
चाटूत्कैश्चक्रनाम्नां चतुरमविचलैर्लोचनैरर्च्यमाना-
श्चेष्टन्तां चिन्तितानामुचितमचरमाश्चण्डरोचीरुचो वः ॥ १२

प्राचीति । प्राचि प्राच्यां दिशि । अचले पर्वते । प्राक् पूर्वम् । अनतिचिरं कांश्चित् क्षणान् । चारु सुन्दरं यथा तथा । चूडायां मणिः तस्य भावस्तत्वं चूडामणित्वम् । आचरन्त्यः बिभ्राणा इत्यर्थः । दिशाम् । चर्चनाय लेपाय । प्रचुरं प्रभूतम् । उच्चकैः । गोरोचनाम्बु गोरोचनमिश्राम्बु मुञ्चन्त्य इव स्थिताः । चाटूनि प्रियकरणानि । तेषु उत्कैः "उत्क उन्मन उत्सुका" इत्यमरः । चक्रमिति नाम एषां ते चक्रनामानः तेषां चक्रनाम्नाम् । अविचलैः अनिमेषैः । लोचनैः अर्च्यमानाः । सवितुरुदये प्रियैः सह संयोगमाचरन्तीत्यादराद्दृश्यमाना इत्यर्थः । अचरमाः अभिनवाः । चण्डानि तीव्राणि रोचींषि यस्य सः चण्डरोचिः सूर्यः । तस्य रुचः दीप्तयः "रोरि, इति रुलोपे, द्रलोपे पूर्वस्य दीर्घोऽणः" इति दीर्घः । वः युष्माकम् । चिन्तितानां मनोरथानाम् । उचितं अनुरूपं यथा भवति तथा । चेष्टन्तां प्रवर्तन्ताम् ॥ १२

ப்ராசி ப்ராகாசரந்த்யோ-
அநதிசிரமசலே சாரு சூடாமணித்வம்
முஞ்சந்த்யோ ரோசநாப்பு
ப்ரசுரமிவ திசாம் உச்சகை: சர்ச்சனாய |
சாடுத்கைச்சக்ர நாம்நாம் சதுரமவிசலை:
லோசனைரர்ச்யமாநா:
சேஷ்டந்தாம் சிந்திதாநாம்
உசிதமசரமா: சண்டரோசீ ருசோ வ: ॥ 12

சூரியன் கீழ்வானில் உதித்து வானவீதியில் பவனிவரத் தொடங்கிவிட்டான். மன்னனையோ, பெரியவர்களையோ நல்வரவுகூறி அழைக்குமுன் வீதிகளில் நீர்தெளித்து, மெழுகி, நறுமலர்களைக் கொண்டு அர்சித்து வரவேற்பது மரபு. இம்மரபையொட்டி, தனது கற்பனையைச் சுலோகமாக வடித்துள்ளார் கவி.

கிழக்குத் திசையிலுள்ள உதயகிரியின் சிகரத்தில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் சூரியனின் கிரீடத்தில் (தலையில்) சூட்டியுள்ள அழகுவாய்ந்த சூடாமணிபோல சற்று நேரம் காட்சி நல்குகின்றன சூரியனின் கிரணங்கள். சற்று நேரத்தில் சூரியன் பவனிவரும் வானவீதியில் கோரோசனை கலந்த (மஞ்சளும் – கருப்புமான) தண்ணீரால், திசைகளாகிய பெண்களின் முகங்களில் கோரோசனைப் பூச்சைப் பூசுவது போலவும் காணப்படுகின்றன. அப்போது சக்ரவாகப் பறவைகள் தங்களது கண் பார்வையால் நன்றியுடன் அர்ச்சிப்பது போலவும் காட்சி நல்கும் சூரியனின் கிரணங்கள் உங்களது மன விருப்பங்களைப் பூர்த்திசெய்யட்டும்.

சக்கரவாகப் பறவைகளைக் காதற்பறவைகள் என்று இலக்கியவாதிகள் கூறுகின்றனர். இரவில் இப்பறவைகளுக்குக் கண்கள் தெரியாமையால் காதலர்களான இவை யொன்றையொன்று காணமுடியாமல் இரவு முழுதும் பிரிவுத் துன்பத்தால் அவதிப்படுமென்றும், சூரியன் உதயமான பின்னரே அவைகள் ஒன்றையொன்று சந்தித்து மகிழ்கின்றனவென்றும், தங்களுடைய மகிழ்ச்சிக்குக் காரணமான சூரியனை நன்றியுடன் காண்பது 'சூரியனைத் தன் கண் மலர்களால் அர்ச்சனை செய்வதாக'வும் கற்பனை செய்துள்ளார் கவி.

एकं ज्योतिर्दृशौ द्वे त्रिजगति गदितान्यब्जजास्यैश्चतुर्भि-
र्भूतानां पञ्चमं यान्यलमृतुषु तथा षट्सु नानाविधानि ।
युष्माकं तानि सप्तत्रिदशमुनिनुतान्यष्टदिग्भाञ्जि भानो-
र्यान्ति प्राह्णे नवत्वं दश दधतु शिवं दीधितीनांशतानि ॥१३

एकमिति ॥ यानि दीधितीनां दशशतानि दीधितिसहस्रम् । त्रयाणां जगतां समाहारः त्रिजगत् । तस्मिन् त्रिजगति । तद्धितार्थे- त्यादिना" उत्तरपदसमासः । "सङ्ख्यापूर्वो द्विगुरि"ति द्विगुसंज्ञा । "द्विगुरेकवचनमि"त्येकवचनम् । चतुर्भिः । अप्सु जातं अब्जं, तस्मिन् जातोऽब्जजो ब्रह्मा तस्य आस्यैः मुखैः । एकं ज्योतिः, सूर्यमेकं तेजः गदितम् । दृशौ लोचने द्वे गदिते । तथा भूतानां पृथिव्यप्तेजो- वाय्वाकाशानां मध्ये पञ्चममग्निः । रूपं ज्योतिस्तेजः गादितम् । तथा षट्सु वसन्तादिषु ऋतुषु । नानाविधानि नानाप्रकाराणीति गदितानि । एतदुक्तं भवति । यत्किञ्चित्सामान्यं तेजोरूपं तत्सर्वं गदितमिति । तिस्रो दशाः येषां ते त्रिदशाः देवाः, त्रिदशाश्च ते मुनयश्च सप्त च ते त्रिदशमुनयश्च तैर्नुतानि स्तुतानि । अष्टच ताः दिशश्च ताः भजन्तीति प्राप्नुवन्तीत्यष्टदिग्भाञ्जि । प्राह्णे प्रभाते । नवत्वं प्रत्यग्रत्वम् । यान्ति गच्छन्ति । तानि भानोः । दीधितीनां किरणानाम् । दश शतानि । युष्माकम् । अलमत्यर्थम् । शिवं मङ्गलम् । दधतु पुष्णन्तु । एकमित्यारभ्य दशपर्यन्ताः सङ्ख्याशब्दाः द्रष्टव्याः ॥ १३

ஏகம் ஜ்யோதி: த்ருசௌ த்வே த்ரிஜகதி
கதிதாந்யப்ஜ-ஜாஸ்யை: சதுர்பி:
பூதாநாம் பஞ்சமம் யாந்யலம்ருதுஷு ததா
ஷட்ஸு நாநா விதாநி ।
யுஷ்மாகம் தாநி ஸப்த த்ரிசமுநிநுதாந்-
யஷ்ட-திக்பாஞ்ஜி பாநோ:
யாந்தி ப்ராஹ்ணே நவத்வம்
தச ததது சிவம் தீதிதீநாம் சதாநி ॥ 13

இந்த சுலோகத்தில் சூரியன் ஒன்று முதல் ஆயிரமாக உள்ளான் என்பதைக் கூறுமுகத்தான் ஒன்று முதல் பத்து வரையுள்ள எண்களை வைத்துப் பாடியுள்ளார் கவி.

சூரியன், உலகின் ஒரே ஜோதி இவன் உலகினருக்கு இரு கண்களாக விளங்குகின்றான். மேலும், மூவுலகிலும் வியாபித்துள்ளான். நான்முகனாகிய பிரம்மதேவனால் புகழப்படுகிறான். ஐம்பூதங்களிலொன்றான தீயாக (நிலம்-நீர்-தீ-காற்று-ஆகாயம்) விளங்குகின்றான். ஆறு ருதுக்களில் (வஸந்த-க்ரீஷ்ம-வர்ஷ சரத்-ஹேமந்த-சிசிர) ஆறு வகையான உருவைப் பெற்று விளங்குகின்றான். மரீசி-அத்ரி முதலிய ஏழு தேவரிஷிகளால் துதிக்கப்படுகிறான். எண்திசைகளிலும் பரவியுள்ளான். தினந்தோறும் புதியனாக (நவ என்ற சொல் ஒன்பது என்ற எண்ணையும் - புதிய என்ற பொருளையும் தரும்)க் காட்சி நல்குகிறான். இத்தகைய சூரியனுடைய பத்து x நூறு — ஆயிரம் — ஆயிரக்கணக்கான) கிரணங்கள் உங்களுக்கு அனைத்து மங்கலங்களையும் நல்கட்டும்.

आवृत्तिभ्रान्तविश्वाः श्रममिव दधतः शोषिणः स्वोष्मणेव
ग्रीष्मे दावाग्नितप्ता इव रसमसकृद्ये धरित्र्या धयन्ति ।
ते प्रावृष्यात्तपानातिशयरुज इवोद्वान्ततोया हिमर्तौ
मार्तण्डस्याप्रचण्डाश्चिरमशुभभिदेऽभीषवो वो भवन्तु ॥ १४

आवृत्तीति ॥ आवृत्त्या प्रतिदिनसञ्चारेण भ्रान्तं विश्वं येषां ते आवृत्तिभ्रान्तविश्वाः । अथ श्रमं दधत इव स्थिताः । स्वस्य ऊष्मणा उष्णत्वेन । शोषिणः शोषमुपगता इव, ग्रीष्मे निदाघकाले । दावाग्निना वनाग्निना । तप्ता इव । वने च "वनवह्नौ च दवो दाव" इत्यमरः । ये अभीषवः रश्मयः । "अभीषुः प्रग्रहे रश्माविऽ"त्यमरः । धरित्र्याः

धरण्या: "धरा धरित्री धरिणिः" इत्यमरः । रसं उदकम् । असकृत् बहुशः । धयन्ति पिबन्ति । प्रावृष्यां वर्षाकाले । आत्तपानातिशयत्वेन रुक् व्याधिः । आत्तः स्वीकृतः पानातिशयः तेन रुग्येषां ते आत्तपानातिशयरुज इव । उद्भ्रान्तं उद्गीर्यमाणं तोयं यैस्तैः उद्भ्रान्ततोयाः । हिमतौ अप्रचण्डाः मन्दाः ते । मार्तण्डस्य सूर्यस्य । "विकर्त्तनार्कमार्तण्डः" इत्यमरः । अभीषवः किरणाः । चिरं चिरस्य । वः युष्माकम् । अशुभं भिनत्तीत्यशुभभित् तस्मै अशुभभिदे अमङ्गलनाशाय भवन्तु ॥ १४

ஆவ்ருத்தி ப்ராந்த விச்வா: ச்ரமமிவ ததத:
சோஷிண: ஸ்வோஷ்மணேவ
க்ரீஷ்மே தாவாக்நி தப்தா இவ
ரஸமஸக்ருத்யே தரித்ர்யா தயந்தி ।
தே ப்ராவ்ருஷ்யாத்த பாநாதிசய ருஜ
இவோத்வாந்த தோயா ஹிமர்தௌ
மார்த்தண்டஸ்யா ப்ரசண்டா; சிரமசுபபிதே-
அபிசவோ வோ பவந்து || 14

இந்த சுலோகத்தில் சூரிய கிரணங்களைப் பார்த்த மயூர கவி அங்கலாய்க்கின்றார்,

சூரிய கிரணங்கள் ஓயாமல் சுற்றிக்கொண்டே இருக்கின்றன. இதனால் அவை களைத்துவிடுகின்றன. தம்முடைய வெப்பமே தாங்காமல் சுண்டியும் விடுகின்றன. கடுங்கோடையின் காரணமாக காட்டுத் தீ வேறு. காடுகள் பற்றி எறிகின்றன. இதனால், அந்தக் கிரணங்கள் மேலும் சுடுகின்றன. இதன் காரணமாக, அந்தக் கிரணங்கள் பூமியிலுள்ள தண்ணீரைப் பருகுகின்றன. தாபம் தாங்காமல் அளவுக்கு மீறி நீரையும் குடித்துவிடுகின்றன. கார்காலம் வந்ததும், தானுண்ட நீரைக் கக்குகின்றன, (அளவுக்கு அதிகமான நீரைப் பருகிவிட்டால்

அதனைக் கக்குவதைப் போல) இதனால் (கக்கியவன் சோர்ந்து விடுவதைப் போல) பனிக்காலத்தில் கிரணங்கள் (சோபையின்றி) சோர்ந்து விடுகின்றன. இவை சோபை (ஒளி) இழந்து போனாலும், அந்த சோபை இழந்த கிரணங்கள் உங்களுடைய அமலங்களைப் போக்கட்டும்.

तन्वाना दिग्वधूनां समधिकमधुरालोकरम्यामवस्था-
मारूढप्रौढिलेशोत्कलितकपिलिमालंकृतिः केवलैव ।
उज्जृम्भाम्भोजनेत्रद्युतिनि दिनमुखे किञ्चिदुद्भिद्यमाना
श्मश्रुश्रेणीव भासां दिशतु दशशती शर्म घर्मत्विषो वः ॥ १५

तन्वानेति ॥ दिश एव वध्वः तासां दिग्वधूनाम् । सम्यगधिकं मधुरः सुखकरः मधुरश्चासावालोकश्च । समधिकमत्यर्थम् । मधुरालोकः प्रकाशश्च तेन रम्या रमणीया तां समधिकमधुरालोकरम्याम् । अवस्थां दशाम् । तन्वाना कुर्वाणा । प्रगशतापं ढेर्लेशः कणः, आरूढः उत्पन्नः, आरूढाश्चासौ प्रौढिलेशः तेन, उत्कलितः उद्भवः, कपिलिमा कपिलत्व सचाऽसौ कपिलिमा च, आरूढप्रौढलेशोत्कलितकपिलिमा, अलङ्कृतिः अलङ्कारो, यस्यास्सा आरूढप्रौढलेशोत्कलितकपिलिमालङ्कृतिः । उज्जृम्भाम्भोजनेत्रद्युतिनि । दिनमुखे प्रभाते । किञ्चिदुद्भिद्यमाना प्रकाशमाना । श्मश्रूणां श्रेणिरिव पङ्क्तिरिव स्थिता । घर्माः त्विषो यस्य सः घर्मत्विट् तस्य घर्मत्विषः । सूर्यस्य भासां तेजसां, दशानां शतानां समाहारः दशशतीः "पङ्क्तिविंशती"त्यादिना, उत्तरपदसमासः । सङ्ख्यापूर्वो द्विगुरिति द्विगुसंज्ञा । अकारान्तोत्तरपदोद्विगुस्त्रियां भाष्य इति स्त्रीलिङ्गत्वात् द्विगोरिति ङीप् । शर्म सुखम् । 'शर्मशातसुखानि'चेत्यमरः । केवलैव दिशतु ददातु ॥ १५

தந்வாநா திக்வதூநாம் ஸமதிக மதுரா-
லோகரம்யாம் அவஸ்தாம்
ஆரூட ப்ரௌடி லேசோத்கலித கபிலிமா-
லங்க்ருதி: கேவலைவ ।
உஜ்ஜ்ரும்பாம்போஜ நேத்ர த்யுதிநி
திநமுகே கிஞ்சிதுத்பித்யமாநா
ச்மச்ரு ச்ரேணீவ பாஸாம் திசது
தசசதீ சர்ம கர்ம த்விஷோ வ: ॥ 15

உதிக்கின்ற சூரியனைப் பார்க்கும் கவிஞருடைய கண்களுக்கு, அவனுடைய மென்மையான ஒளிக்கிரணங்கள், முகத்திலுள்ள விரிவடையும் ரோமாவளிபோலத் தென்படுகின்றன. அதனையே இங்கு உவமையாகச் சொல்கிறார்.

மனைவியரை மகிழச்செய்ய, அவளது கணவன் பட்டாடையை வாங்கிக் கொடுப்பான். அவளும் அவ்வாடையை அணிந்து புதுப்பொலிவுடனும், மகிழ்வுடனும் காட்சி தருவாள். அவளைக்கண்டு கணவன் அகமும் - முகமும் மலர்ச்சிபெற்று மகிழ்வான். அப்போது அவனது உதடுகளின் மேலுள்ள மீசையும் விரிவடையும். இத்தகைய உலகியலில் காணப்படும் தொடர் நிகழ்ச்சிகளையே இங்கு உவமையாகக் கூறுகிறார் கவிஞர். இங்கு கணவன் சூரியன், மனைவியர் திசைகள். ஆடை அவனுடைய மஞ்சள் வண்ண ஒளிக்கதிர்கள். ஆகவே, திசைகளாகிய மகளிரை பொலிவா (அழகாக)ச் செய்ய தனது மென்மையான மஞ்சள் வண்ண ஒளிக் கதிர்களை அவர்களுக்கு அணிவித்து அத்திசை மகளிரை அழகியராகச் செய்கிறான் சூரியன். இதனால் அகமகிழ்ந்த (கணவனாகிய) சூரியனின் முகம் தாமரை மலர் மலர்வதைப் போல மெல்ல மெல்ல மலர்ச்சியுற்று, அதனால் அவனது முகத்திலுள்ள மீசை (ரோமாவளி)யும் விரிவடைவதைப் போல மெல்ல மெல்ல விரிவடையும் சூரியனின் ஒளிக்கிரணங்கள் உங்களுடைய மாசுக்களை நீக்கி சுகங்களைக் கொடுக்கட்டும்.

இந்த சுலோகத்தில் ஒளிக்கு நிழல் உண்டு என்று கூறுகிறார் கவி. ஒளிமயமான கிரணங்களூடே ஒரு கருமை. பகல் விடியும்போது சூரிய கிரணங்கள் முற்றும் ஊடுருவாத நிலையில் ஒரு நிழல். அதன் வழியே உதிக்கும் சூரியனை நேர்முகமாகப் பார்க்கமுடியும். இக் கருமையில்லாவிடில் நம்மால் நேரடியாகப் பார்க்க முடியுமா? முடியாது. அப்போது ஒளிப்பிழம்பான சூரியனின் முகத்தில் கரு கரு வென்று மீசை முளைத்தது போல கிரண நிழல்கள் தெரிகின்றன என்கிறார் கவி.

मौल्लीन्दोरेष मोषेद्युतिमिति वृषभाङ्केन यः शङ्कितेन
प्रत्यग्रोद्घाटिताम्भोरुहकुहरगुहासुस्थितेनेव धात्रा ।
कृष्णेन ध्वान्तकृष्णस्वतनुपरिभवत्रस्नुनेव स्तुतोऽलं
त्राणाय स्ताच्चनीयानपि तिमिररिपोः स त्विषामुद्गमो वः ॥ १६

मौलीति ॥ तिमिरस्य अन्धकारस्य । रिपुः शत्रुः, तस्य तिमिररिपोः सूर्यस्य, त्विषां तेजसां । यः उद्गमः प्रादुर्भावः । मौलौ शेखरे इन्दुः, तस्य द्युतिं कान्तिं, न एषः मोषेत् इति मोषेदिति मुष्णीयादिति । वृषभाङ्केन शङ्करेण । शङ्कास्यास्तीति शङ्कितेन व्रीह्यादिभ्यश्चेति इतच् प्रत्ययः । यस्तुतः आकीर्यरश्मिनामिन्दुरश्मि-संहारं कृत्वा (आकीर्णरश्मिनः इन्दुरश्मिसंहारकारणत्वात्) वृषभाङ्क-स्येन्दुशेखरत्वाच्च शङ्का युज्यते । प्रत्यग्रं नवम् । उद्घाटितं विकसितं प्रत्यग्रोद्घाटितं च तत्, अम्भोरुहं च तस्य कुहरं मध्यमं, तदेव गुहा तस्यां सुस्थितेन सुखेन स्थितेनेव । धात्रा ब्रह्मणा स्तुतः । मुकुला-वस्थायां सुखासीनाभावात् सूर्योदये कमलविकासो भवति । तस्मात्सुस्थि-तेनेति युक्तम् । ध्वान्तं अन्धकारं तद्वत्कृष्णा स्वशब्दैः श्रीकृष्ण उच्यते । ध्वान्तं इव कृष्णा च स्वतनुश्च तस्याः । परिभवस्तिरस्कारः तस्मात् त्रस्नुना-भीरुकेन ध्वान्तकृष्णस्वतनुपरिभवत्रस्नुनेव स्थितेन कृष्णेन हरिणा । अलं

अत्यर्थम् । स्तुतः आदित्यरश्मीनां ध्वान्तपरिभवत्वात् । कृष्णशरीरस्य तत्समानत्वाच्च । वस्तुनैव युक्तः एषः तनीयान् अल्पः । तिमिररिपोः स त्विषामुद्गमो वः युष्माकम् । त्राणाय रक्षणाय । स्तात् भवतु ॥ २६

மௌலீந்தோரேஷமோஷேத்யுதிமிதி
வ்ருஷபாங்கேந யः சங்கிதேந
ப்ரத்யக்ரோத்காடிதாம்போருஹ-
குஹரகுஹாஸுஸ்திதேநேவ தாத்ரா ।
க்ருஷ்ணேன த்வாந்த-க்ருஷ்ண-ஸ்வதநு-பரிபவ
த்ரஸ்நுநேவ ஸ்துதோ(அ)லம்
த்ராணாய ஸ்தாத்-தநீயாணபி திமிரரிபோः
ஸ த்விஷாம் உத்கமோ வः ॥ *16*

இந்த சுலோகத்தால் "சிவன், பிர்மன், விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளாலேயே வழிபாடு செய்யப்படுகின்ற சிறப்பு வாய்ந்தவன் சூரியன்" என்று சூரியனின் மஹிமையைச் சிறப்பித்துக் கூறுகிறார் கவிஞர்.

சூரியன் உதயமானதும் சந்திரனின் ஒளிகுன்றிவிடும் என்பது அனைவரும் அறிந்ததே. சிவபெருமான் தன்னுடைய சிரசில் பிறையைச் சூடிக்கொண்டு சந்திர சேகரனாகத் திகழ்கிறார் அல்லவா! அவர், தன்னுடைய சிரசில் அணியாகச் சூடிக்கொண்டுள்ள சந்திரனின் ஒளியை அபகரித்துவிடுவானோ? என்ற கவலையால் சூரியனைக் குறித்துத் தோத்திரம் செய்கின்றார். பிர்மதேவனோ! தாமரையாகிய கர்பவாசத்தில் மலர்வதன் முன்னம் (அதற்குள்) ஒடுங்கி அமர்ந்திருந்தார். மலர்ந்த உடன் சற்று தாராளமாக அமர்ந்துகொள்ள இடம் கிடைத்ததில் மகிழ்ச்சிகொண்டார். மஹாவிஷ்ணுவான திருமாலும், சூரியனைப் பிரார்த்தனை செய்கிறார். சூரியன் இருளை அழிக்கும் ஆற்றல் உள்ளவன் இருளுக்கு "கிருஷ்ண" (கருப்பு) என்றதொரு பெயருண்டு. அவர் உடலும் கருப்பு.

அதனால் "என் உடல் கருப்பாக இருக்கிறதே! இவ்வுடலை யும் அழித்துவிடுவானோ" என்ற அச்சங்கொண்டு சூரியனை ப்ராத்தனை செய்கிறான். உதிக்கின்ற நேரத்தில் மெல்ல மெல்லப் புறப்படும் மெல்லிய கிரணங்களே சிவனுக்குக் கவலையையும், பிரம்மதேவனுக்கு மகிழ்ச்சியையும், கிருஷ்ணனுக்குப் பயத்தையும் ஒருங்கே தருகின்றன. அதனாலே மூவரும் சூரிய கிரணங்களைத் துதிக்கின்றனர். இதனால் பிரமாதி மூவர்களும் ப்ரார்த்திக்கும் சக்தி வாய்ந்த சூரியனின் கிரணங்களின் உதயம் உங்களைக் காக்கட்டும்.

विस्तीर्णं व्योम दीर्घाः सपदि दश दिशो व्यस्तवेलाम्भसोऽब्धीन्
कुर्वद्भिर्दृश्यनानानगनगरनगाभोगपृथ्वीं च पृथ्वीम् ।
पद्मिन्युच्छ्वास्यते यैरुषसि जगदपि ध्वंसयित्वा तमिस्रा-
मुस्रा विस्रंसयन्तु द्रुतमनभिमतं ते सहस्रांत्विषो वः ॥ १७

विस्तीर्णमिति । व्योम आकाशम् । विस्तीर्णं विमलं कुर्वद्भिः । अब्धीन् समुद्रान् । व्यस्तं व्यस्ता विस्तारिता वेला अम्भसां ये ते व्यस्तवेलाम्भसः । वेलायां अम्भः वेलाम्भो यस्तान् व्यस्तवेलाम्भसः, यद्वा व्यस्ता त्यक्तावेला यैस्तानि व्यस्तवेलानि अम्भांसि येषां ते तान् व्यस्तवेलाम्भसः । आदित्योदये समुद्रजलं सङ्कुचितं भवतीति प्रसिद्धम् । पृथ्वीं भूमिं च । च शब्दः समुच्चये । न गच्छन्तीति नगाः पर्वताश्च नगराणि पुराणि च नगाः वृक्षाश्च नानाविधाश्च ते नगनगरनगाश्च दृश्याश्च ते नानाविधनगराश्च तेषां, आभोगो विस्तारः । तेन पृथ्वीं महतीं कुर्वद्भिः । यैस्तैः किरणैः । उषसि प्रभाते । तमिस्रां रात्रिम् । "तमिस्रा-तामसीरात्रि"रित्यमरः । ध्वंसयित्वा नाशयित्वा । पद्मिनी कमलिनी । उच्छ्वास्यते विकास्यते । जगदपि अपिशब्दः समुच्चये । उच्छ्वास्यते

प्रबोध्यते । सहस्रं त्विषो यस्य सः सहस्रत्विट्, तस्य सहस्रत्विषः । उस्रा रश्मयः । वः युष्माकम् । अनभिमतं पापम् । द्रुतं क्षिप्रम् । विध्वंसयन्तु नाशयन्तु ॥ १७

விஸ்தீர்ணம் வ்யோம தீர்கா: ஸபதி தச திசோ
வ்யஸ்தவேலாம்பஸோ அப்தீன்
குர்வத்பி:-ருச்யநாநா-நக-நகர-நகா-
போக-ப்ருத்வீம் ச ப்ருத்வீம் ।
பத்மின்யுச்ச்வாஸ்யதே யைருஷஸி ஜகதபி
த்வம்ஸயித்வா தமிஸ்ரா
முஸ்ரா விஸ்ரம் ஸயந்து த்ருதமநபிமதம்
தே ஸஹஸ்ரத்விஷோ வ: ॥ 17

சூரியன் உதிக்கும்போது என்னென்ன நடைபெறுகிறது என்பதை விளக்குகிறார் இக் கவிதையால்.

(இருள் சூழ்ந்த) ஆகாயம் விரிகின்றது. திசைகள். நீள்கின்றன. கடற்கரையைத் தாண்டி நீர்பரப்பு விரிகின்றது. பூமியெங்கும் மலைகளும், நகரங்களும், பள்ளங்களும் தெரிகின்றன. தாமரைக்குளம் 'அப்பாடா' என்று பெருமூச்சுவிட்டு விம்மிதம் அடைகிறது. இருளைத் தொலைத்து நமக்கு வேண்டாதவற்றை அகற்றி அருளட்டும் சூரியனின் ஆயிரம் கிரணங்கள்.

अस्तव्यस्तत्वशून्यो निजरुचिरनिशानश्वरः कर्तुमीशो
विश्वं वेश्मेव दीपः प्रतिहततिमिरं यः प्रदेशस्थितोऽपि ।
दिक्कालापेक्षयासौ त्रिभुवनमटतस्तिग्मभानोर्नवाख्यां
यातः शातक्रतव्यां दिशि दिशतु शिवं सोऽर्चिषामुद्गमो वः ॥

अस्तव्यस्तत्वशून्य इति। अस्तः अन्योन्यपरिभूत। व्यस्तः अन्योन्य श्रितः। अस्तश्च व्यस्तश्च अस्तव्यस्तौ तयोर्भावस्तत्वं तेन। शून्यः रहितः। अनेकार्थत्वाधातूनां अयमर्थोलक्ष्यत इत्यदोषः। धातूनामनेकार्थत्वं कथम्? उक्तं च – "निपाताश्चोपसर्गाश्च धातवश्च ते त्रयः। अनेकार्थाः-स्मृताः सर्वैः पातस्तेषां निदर्शन"मिति॥ आदित्यस्यार्चिषामुद्गमः प्रादुर्भावः।

अन्येन, तेजसा परिभूयते अन्येन तेजसा न मिश्रितश्च। दीपोऽपि नवं, निजा अनुत्पाद्या, रुचिः कान्तिर्यस्य स. दीपोऽपि न नवं, तैलवर्त्यग्नि-संयोगसम्भवरुचित्वात्। अनिशं सर्वदा। अनश्वरः अनाशनशीलः। यस्तिग्मभानोः सूर्यस्य अर्चिषामुद्गमः उदयः दीप इव। प्रदेशास्थितोऽपि उदयपर्वतस्थितोऽपि। अन्यत्र गृहकोणस्थितोऽपि। विश्वं वेश्म गृहं च। प्रतिहतं तिमिरमन्धकारं यस्य तत्प्रतिहततिमिरं कर्तुं सम्पादयितुम्। ईशः समर्थः। सकलजगदन्धकारापनोदनसमर्थ इत्यर्थः। दीपो गृहगतान्धकार-नाशने समर्थः इत्यनेन दीपसूर्यतेजसां साधर्म्यवैधर्म्ये प्रतिपाद्येते। दिक्कालापेक्षया। शतं क्रतवो यस्य सः शतक्रतुः इन्द्रः। शतक्रतोरियं शातक्रतवी तस्यां शातक्रतव्याम्। "तस्येदमित्यण् प्रत्ययः" ठिड्ढाणञ् इत्यादिना ङीप् ओर्गुणः इति गुणः अवादेशः। तद्धितेष्वचामादेरित्यादि-वृद्धिः। दिशि इति व्याख्यातः। नित्यस्य नवत्वोपपत्तिः भाव्या। नवत्वपृथिवीत्वादि धर्माः घटाकाशपटाकाशवदौपाधिकाः। त्रिभुवनमटतः गच्छतस्तिग्मभानोः सूर्यस्य सः असावर्चिषामुद्गमः। वः युष्माकम्। शिवं मङ्गलम्। दिशतु। असाविति प्रतीतः। यः पूर्वं मया काश्यां दृष्टः स एव काञ्च्यां दृष्टः इति वत्प्रत्यभिज्ञा॥ १८

அஸ்தவ்யஸ்தத்வ சூன்யோ நிஜருசி:
அநிசாநச்வர: கர்த்துமீசோ
விச்வம் வேச்மேவ தீப:
ப்ரதிஹத திமிரம் ய: ப்ரதேச ஸ்திதோபி ।
திக்காலாபேக்ஷயா (அ)ஸௌ
த்ரிபுவநமடத: திக்ம பாநோர்-நவாக்யாம்
யாத: சாத-க்ரதவ்யாம் திசிதிசது சிவம்
ஸோ (அ)ர்சிஷாம் உத்கமோ வ: ॥ 18

உதயமோ, அஸ்தமனமோ இல்லாதவன் சூரியன் என்பதை விளக்குகிறார் கவி,

अस्तव्यस्तत्वशून्यः அஸ்தமனம் என்பதோ வெளிப்பாடு என்பதோ இல்லாதவன் சூரியன். ஓரிடத்தில் இருந்து கொண்டே தன்னொளி பாயுமிடங்களில் எல்லாம் இரவை/இருளைப் போக்குகின்றான். ஒரு வீட்டின் நடுக்கூடத்தி லுள்ள விளக்கு அந்த வீட்டின் பிற பகுதிகளிலுள்ள இருளையோட்டுவதைப் போல, அண்டப்பெருவெளி (Universe)யெங்கும் பிரகாசித்து இருளையோட்கிறான் ஆனால், இரவும்-இருட்டும் எப்படி வருகிறது? சூரிய ஒளியை விட்டு மறைந்த திசை இருட்டாகவும், மறைந்த நேரம் இரவாகவும் உள்ளது. இதனாலும் ஒரு அனுகூல முண்டு, பூமியின் சுழற்சியினால் சூரியன் சஞ்சரிப்பதாக வும். திசையில் உதிப்பதாகவும். நாமாகக் கற்பித்துக் கொள்கிறோம். ஏன்? நமக்கு திசையும், காலமும் தெரிய வேண்டுமே! அதற்காக. 'இதோ! கீழ்த்திசையில் புதிய சூரியன்!' என்று கண்டு மகிழ்கிறோம். இத்தகைய நன்மை களையே நல்கும் சூரிய கிரணங்கள் உங்களுக்கு (மேன்மேலும்) நன்மையை அருளட்டும்.

मा गान्ग्लानिं मृणालीमृदुरिति दययेवाप्रविष्टोऽहिलोकं
लोकालोकस्य पार्श्वं प्रतपति न परं यस्तदाख्यार्थमेव ।

ऊर्ध्वं ब्रह्माण्डखण्डस्फुटनभयपरित्यक्तदैर्घ्यो द्युसीम्नि
स्वेच्छावश्यावकाशावधिरवतु स तापनो रोचिरोघः ॥ १९

तपनस्यायं तापनः सूर्यसम्बन्धिः तस्येदमित्यप्रत्ययः । रोचिषामोघः रोचिरोघः । मृणालीवत् पद्मिनीवत् । मृदुः अहिलोकः । मा, ग्लानिमागादिति विशुष्कलतां न गच्छत्विति दययेव । अहीनां सर्पाणाम् । लोकः पाताललोकः । न प्रविष्टः । लोक्यत इति लोकः । लोकश्चासावलोकश्च तस्य लोकालोकस्य । लोकालोकपर्वतः । जलधीन् द्वीपानावृत्य तिष्ठतीति पुराणप्रसिद्धम् । परं पार्श्वं पाश्चात्यभागम् । तस्य लोकालोकपर्वतस्य आख्या नामधेयमर्थः प्रयोजनं यस्मिन् कर्मणि, तत्तथा तदाख्यार्थमिति । लोकालोकपर्वतस्यान्वर्थोयथा स्यादिति । न प्रतपति न प्रकाशयतीति । लोकालोकपर्वतस्य पाश्चात्यभागं प्रकाशयेच्चेल्लोकालोकेत्याख्यानम् । द्युसीम्नि स्वर्गसीम्नि । ऊर्ध्वं उपरि ब्रह्मणःअण्डं तस्य खण्डं अर्धस्फुटनं तस्माद्भयं तेन परित्यक्तं दैर्घ्यं येन सः ब्रह्माण्डखण्डस्फुटनभयपरित्यक्तदैर्घ्यः उक्तः देवप्रयोजनस्तिर्यगूर्ध्वमधश्च न प्रवर्तत इति । स्वेच्छया, आत्मवाञ्छयावश्यः अविधेयः । अवकाशः प्रदेशः । अवश्यश्चासाववकाशश्च, तस्य अवधिः मर्यादा यस्य सः स्वेच्छावश्यावकाशावधिः स तापनो रोचिरोघः । वः युष्मान् । अवतु रक्षतु ॥ १९

மா காந்க்லாநிம் ம்ருணாளீ-ம்ருதுரிதி தயயா
அப்ரவிஷ்டோ (அ)ஹிலோகம்
லோகாலோகஸ்ய பார்ச்வம்
ப்ர-தபதி ந பரம் யஸ்ததாக்யார்த்த-மேவ ।
ஊர்த்வம்-ப்ரஹ்மாண்டகண்டஸ்புடந-பய-
பரித்யக்ததைர்க்யோ த்யுஸீம்நி
ஸ்வேச்சாவச்யாவகாசா - வதிரவது ஸ
வஸ்தாபநோ ரோசிரோத: ॥ 19

சூரிய ஒளி வர்ணனை

சூரியன் எங்கும் ப்ரகாசிக்கும் ஆற்றல் பெற்றிருந்த போதிலும், சிற்சில இடங்களில் அவன் ப்ரகாசிப்பதில்லை. அவன் ப்ரகாசிக்காமல் இருப்பதின் காரணத்தை இச் சுலோகத்தின் வாயிலாகப் புலப்படுத்துகின்றார் கவிஞர்.

தாமரைத் தண்டு போலக் குளிர்ந்த. மென்மையான நாகங்கள், தனது கிரணங்களின் சூடுபட்டால் வாடிவிடுமே என்ற கருணையினாலோ என்னவோ பாதாளத்தில் சூரிய கிரணங்கள் பரவுவதில்லை 'லோகம்' என்றால் கண்களுக்குப் புலப்படுவது. 'அலோகம்' என்றால் கண்களுக்குப் புலப்படாதது. பரமன் தன் படைப்பில் 'அலோகம்' என்ற பகுதியையும் படைத்திருப்பதால் - அங்கு தன் கிரணங்கள் பரவினால் அதன் பெயர் கெட்டுவிடுமே! என்ற காரணத்தினால், அதன் பக்கம் சூரிய கிரணங்கள் பரவுவதில்லையோ! சூரிய கிரணங்களின் நீட்டத்திற்கு எல்லை கிடையாதுதான். ஆனால் அப்படி 'நீண்டு கொண்டே போய் பிர்ம்மாண்டத்தின் வான்முகட்டை உடைத்துவிடக்கூடாதே' என்ற அச்சத்தில் சூரிய கிரணங்கள் அதுவரை நீள்வதில்லை. தங்கு தடையில்லாத தன் கிரணங்களை இப்படி தன் விருப்பம் போல் அடக்கிக் கொள்ளும் 'சூரிய ஒளி' உங்களைக் காக்கட்டும்.

இங்கு 'லோகாலோகம்' என்றதொரு இடத்தைக் குறிப்பிடுகின்றார் கவிஞர். இது பற்றி புராணங்களில் பரவலாகக் காணப்படுகிறது. அதன்படி 'லோகாலோகம்' என்பது ஒரு மலையின் முன்பகுதி பின்பகுதி என்றும், விரிவடைந்த இந்த நிலத்தை ஆகாயத்திலிருந்து பிரிக்கிறது என்றும், இங்கு ஒரு பகுதியில் சூரியனின் பிரகாசம் உண்டு என்றும், மற்றொரு பகுதியில் சூரியன் பிரகாசிக்காது என்றும், அப்பகுதி இருள்மயமாகவே இருக்குமென்றும் காணப்படுகிறது. இதன் காரணமாகவே லோகம் சூரியனால் காணப்படும் (பிரகாசிக்கப்படும்) பகுதியென்றும், அலோகம் காணப்படாத (பிரகாசமில்லாத) பகுதியென்றும்

அழைக்கப்பட்டுள்ளது. இந்த மலைச்சிகரம் நெடிதுயர்ந்தது என்றும், அந்தச் சிகரத்தில் சந்திர - சூரிய - நக்ஷத்திரங்களின் ஒளிகூடபடாத அளவில் மிகவும் உயரமானதென்றும், அந்தச் சிகரம் நீலநிறமுடையதென்றும் ஸ்ரீமத் பாகவதம் போன்ற புராணங்களில் காணப்படுகிறது. கவி காளிதாஸனியற்றிய ரகுவம்சத்தின் முதல் சர்கம் 68 ஆம் சுலோகத்தில்

सोऽहमिज्या विशुद्धात्मा प्रजालोपनिमीलितः ।
प्रकाशश्चाप्रकाशश्च लोकालोक इवाचलः ॥

என்று குறிப்பிட்டுள்ளார்

अश्यामः काल एको न भवति भुवनान्तोऽपि नीतेऽन्धकारे
सद्यःप्रालेयपादो न विलयमचलश्चन्द्रमा अप्युपैति ।
बन्धः सिद्धाञ्जलीनां न हि कुमुदवनस्यापि यत्रोज्जिहाने
तत्प्रातः प्रेक्षणीयं दिशतु दिनपतेर्धाम कामाधिकं वः ॥ २०

अश्यामः इति । यत्र यस्मिन् धाम्नि । उज्जिहाने उद्गच्छति इति । काल एक एव । श्यामा रात्रिः । " श्यामाच्छानिलभामिनी "-त्यमरः । न विद्यते श्यामा यस्मिन् सः अश्यामः । न भवतीति । किन्तु । भुवनान्तोऽपि अश्यामो भवति । अपि शब्दः समुच्चये । अन्धकारे नीते सति । भुवनानां अन्तः । मध्यम् । अश्यामो धवलो भवति । प्रालेयं हिमम् । पादाः प्रत्यन्तपर्वताः यस्य सः प्रालेयपादः हिमवानचलः । सद्यः । विलयं नाशम् । नापैति । क्रमादिति भावः । चन्द्रमा अपि सद्यो विलयमुपैति च । सिद्धाञ्जलीनां बन्धः । न भवति अर्घ्यदानादिरिति भावः । कुमुदवनस्यापि । बन्धो भवति । हि । सूर्योदये कुमुदानां

विकासाभावात् । प्रातः प्रेक्षणीयं द्रष्टुं अप्रचण्डत्वादिति भावः । तद्दिनपतेर्धाम सूर्यतेजः । वः युष्मभ्यम् । कामादिकं यानरथादिकम् । दिशतु ददातु ॥ २०

அச்யாம: கால ஏகோ ந பவதி
புவநாந்தோ(அ)பி நீதே(அ)ந்தகாரே,
ஸத்ய: ப்ராலேயபாதோ ந விலய - மசல:
சந்த்ரமா அப்யுபைதி ।
பந்த: ஸித்தாஞ்ஜலீநாம்
ந ஹி குமுதவநஸ்யாபி யத்ரோஜ்ஜிஹாநே
தத்ப்ராத: ப்ரேக்ஷணீயம் திசது
திநபதே: தாம காமாதிகம் வ: ॥ 20

சூரிய ஒளி பரவும்போது நிகழும் நிகழ்வுகளைக் கூறுகிறார் கவி:

சூரிய ஒளி பரவும்போது இரவு என்ற காலம், நேரம் மட்டும் கருமை நீங்குவதில்லை. இருள் அகன்றவுடன் உலகின் எல்லையெல்லாம் கருமை நீங்குகின்றது. பனி மலை மட்டும் உருகிக் கரைவதில்லை, சந்திரனும் லயமடைகிறான். முனிவர்களின் கைகள் மட்டும் அஞ்சலி செய்து கூம்புவதில்லை; ஆம்பல் மலர்க்காடும் கூம்புகிறது. இத்தகைய ஆற்றல் பொருந்திய காலைச் சூரியனின் செவ்வொளி உங்களது விருப்பங்களை, விரும்பியதற்கு அதிகமாகவே நிறைவேற்றட்டும்.

यत्कान्तिं पङ्कजानां न हरति कुरुते प्रत्युताधिक्यरम्यां
नो धत्ते तारकाभां तिरयति नितरामाशु यन्नित्यमेव ।
कर्तुं नालं निमेषं दिवसमपि परं यत्तदेकं त्रिलोक्या-
श्चक्षुः सामान्यचक्षुर्विसदृशमघभिद्भास्वतः स्तान्महो वः ॥ २१

यत्कान्तिमिति । सामान्यचक्षुः तस्यास्माद्विसदृशं अन्यप्रकारम् । त्रिलोक्याः एकं चक्षुः एतन्महः सूर्यतेजः । त्रयाणां लोकानां समाहारः त्रिलोकी । तद्धितार्थे इत्यादिना समासः सङ्ख्यापूर्वो द्विगुरिति द्विगुसंज्ञा । अकारान्तोत्तरपदाद्द्विगुःस्त्रियां भाष्ये इति स्त्रीलिङ्गत्वाद्द्विगुरिति ङीप् । पङ्कजानां पद्मानाम् । कान्तिं शोभां । न हरतीति अन्यत्र हरति प्रत्युत विपरीततया आधिक्यम् । तेन रम्यां कान्तिम् । कुरुते यन्महस्तारकाणां नक्षत्राणाम् । आभां कान्तिम् । नो धत्ते न धारयति । प्रत्युत चाशु नितरामेव । तारकाभां नक्षत्रकान्तिम् । नित्यं सर्वदा । तिरयति छादयति । अन्यत्र, तारका कनीनिका नयनमध्ये तेजोमयप्रदेशः "तारकाक्ष्णः कनीनिके"त्यमरः । तस्य भां कान्तिम् । धत्ते पुष्णातीत्यर्थः । आशु कनीनिकाभाम् । नित्यं तिरयति मीलयति न छादयती इत्यर्थः । यत्परं ए तस्मादितरत् । महः नयनतेजः निमेषः पक्षविक्षेपः तं कर्तुमलम् । निमेषः कालविशेषः । तं कर्तुं नालं दिवसमपि कर्तुं नालं सौरतेजसासमयं कर्तुं समर्थमित्यर्थः । भास्वतः सूर्यस्य तन्महत्तेजः । वः । अघं पापं भिनत्तीति भित् स्तात् ॥ २१

யத்காந்திம் பங்கஜாநாம்
ந ஹரதி குருதே ப்ரத்யுதாதிக்யரம்யாம்
நோ தத்தே தாரகாபாம் திரயதி நிதராம்
ஆசு யந்நித்யமேவ ।
கர்த்தும் நாலம் நிமேஷம்
திவஸமபி பரம் யத்ததேகம் த்ரிலோக்யா-
ச்சக்ஷுஃ ஸாமான்ய சக்ஷுஃ
விஸத்ருசமகபித்பாஸ்வதஃ ஸ்தாந்மஹோ வஃ ॥

உதயமாகும் சூரியனைக் காணும் கவி 'சூரியனே உலகின் ஒரே கண்' என்று நினைக்கிறார். உடனே

சூரியனாகிய கண்ணுக்கும், நமது கண்ணுக்குமுள்ள வேறுபாடுகளை இச் சுலோகத்தின் வாயிலாகக் கூறுகிறார் கவி.

சூரியன் உலகிற்கு ஒரே கண்ணாகத் திகழ்கின்றான். நமக்கும் கண்களுண்டு. நமது கண்களோ ஸாமான்யமான கண்களே. இதனால், நமது கண்ணுக்கும் சூரியனாகிய கண்ணுக்கும் பெருத்த வேறுபாடுகளுண்டு. நமது கண்கள் தாமரையின் அழகைக் கண்டு கவரும். அவற்றுக்கு அழகைக் கொடுக்கும் வல்லமை கிடையாது. கண்களால் கவரப்படும் அழகுடையது தாமரை. ஆனால், சூரியனாகிய 'கண்' தாமரையின் அழகை அபகரிக்காமல் அத்தாமரை களுக்கு மேன்மேலும் அழகூட்டும். **नो तारकाणां तिरयति । आशु नित्यमेव तारकाणां नितरां धत्त एव ।** நம் கண்களுக்கு நக்ஷத்திரங் களின் ஒளி மறைந்து காணப்படுகிறது. ஆனால் சூரியனின் ஒளிக்கிரணங்கள் நம் கண்ணின் மணிகளை மறைப்ப தில்லை. மாறாக என்றுமே உடன் ஒளி பாய்ச்சி, கண்க ளுக்குக் காணும் திறனைத் தருகிறது.

நிமிஷம் என்றால் 'கண் சிமிட்டல்' என்று பொருள். ஒரு கண்சிமிட்டும் நேரத்தை நிமிஷம் (இமைப்பொழுது) என்கிறோம். ஆகவே, நம் கண்கள் ஒரு நிமிஷத்தைத்தான் கொடுக்க முடியும். ஆனால் சூரியனாகிய கண் ஒரு பகலையே கொடுக்கிறது. இத்தகைய ஆற்றல் படைத்த சூரிய ஒளி (தேஜஸ்) உங்களுடைய அனைத்துப் பாபங் களையும் அழிக்கட்டும்.

இங்கு 'தாரகா' என்ற சொல் நக்ஷத்திரத்தையும், நமது கண்களின் மையப்பகுதியிலுள்ள 'கண்மணி' (பாப்பா)வையும் குறிப்பிடுகிறது,

क्ष्मां क्षेपीयः क्षपाम्भःशिशिरतरजलस्पर्शतर्षाद्दगेव

द्रागाशा नेतुमाशा द्विरदकरसरःपुष्कराणीव बोधम् ।

प्रातः प्रोल्लङ्घ्य विष्णोः पदमपि घृणयेवातिवेगाद्दवीय-
स्युद्दामं द्योतमाना दहतु दिनपतेर्दुर्निमित्तं द्युतिर्वः ॥ २२

क्ष्मामिति । क्षपा रात्रिः, तस्याः अम्भः हिमजलं अतिशयेन, शिशिरं शिशिरतरं अतिशीतलमितियावत् । क्षपाम्भसा शिशिरतरं, तत् जलं च । तस्य स्पर्शः तस्मिंस्तर्षः, तस्मिन् तृष्णा तस्मात् । क्षपाम्भः-शिशिरतरस्पर्शतर्षादिव क्षेपणीयम् । क्षिप्रतरं क्षिप्रशब्दाद्द्विवचनेत्यादिना ईयसन्प्रत्ययः । स्थूलदूरेत्यादिना यणादिपरं लुप्यते पूर्वस्य च गुणः । क्ष्मां भूमिं गता । आशासु दिक्षु द्विरदाः गजाः तेषां कराः त एव सरांसि तेषां पुष्कराणि करिहस्ताग्राणि । "पुष्करं करिहस्ताग्रे वाद्यभाण्ड-मुखेषु चे"ति विश्वः । पद्मानि च बोधं विकासं, नेतुमिम प्रापयतुमिव । द्राक् शीघ्रम् । आशाः दिशः । गताः । प्रातः प्रभाते । विष्णोः पदमाकाशमपि । प्रोल्लङ्घ्य अतिक्रम्य । दवीयसि दूरतरे । दूर-शब्दात्तरप् प्रत्ययः । स्थूलदूरेत्यादिना परस्य यणादेर्लोपः पूर्वस्य च गुणः अवादेशः । उद्दामः अनिवारितप्रसरं यथा भवति तथा । घृणयेव सद्धार्थेष्विति भावः । अतिवेगात् अतिजवात् । द्योतमाना प्रकाशमाना । दिनपतेः सूर्यस्य । द्युतिः दीप्तिः । वः युष्माकम् । दुर्निमित्तं पापम् । दहतु ॥ २२

க்ஷ்மாம் க்ஷேபீய: க்ஷபாம்ப: சிசிரதர-
ஜலஸ்பர்ஸதர்ஷா த்ருத்கதேவ
த்ராகாசா நேதுமாசா த்விரதகரஸர:-
புஷ்கரணீவ போதம் ।

ப்ராத: ப்ரோல்லங்க்ய விஷ்ணோ:
பதமபி க்ருணயே வாதிவேகாத்தவீய:-
யுத்தாமம் த்யோதமாநா தஹது திநபதே:
துர்நிமித்தம் த்யுதிர்வ: ॥ 22

உதயமான சூரியன் வெகு விரைவில் ஆகாயத்தைக் கடந்து வருகிறான். இதனைக் கண்ட கவிஞர், 'சூரியன் வெகு விரைவாக ஆகாயத்தைக் கடந்து வருவதன் காரணம் தான் என்ன ?' என்று எண்ணுகிறார். அதற்குரிய காரணங்களைக் கற்பிக்கின்றார் கவிஞர்.

சூரியன், கீழ்வானத்தைக் கடந்து வெகு விரைவாக ஆகாயத்தைக் கடக்க வருகிறானே !' இதன் காரணந்தான் என்ன ? ஓஹோ ! ... இரவில் பொழிந்த குளிர்ச்சியான பனிநீரை விரும்பிப் பருக பூமியை நோக்கி வருகிறானா ? அல்லது, சூரிய உதயத்தால் தடாகத்திலுள்ள தாமரைகள் மலர்ந்துவிட்டனவே ! ஆயின் திக்கஜங்களின் தும்பிக்கைகள் என்னும் தடாகத்திலுள்ள தாமரைகளை மலரச்செய்வதற் காகத்தான் எண்திசைகளிலும் தனது கிரணங்களைப் பரப்பிக்கொண்டு விரைந்து வருகிறானோ ? (஘ூணா) க்ருணா என்றால் இந்த இடத்தில் 'தவறு செய்யக்கூடாது - என்ற கூச்சம். ஆலய வாயிலைத் தாண்டி மிதியடியுடன் போகும் போது நமது உள்ளத்தில் ஒருவகையான கூச்சம் வரும். வரும். அதுபோல, ஆகாயத்திற்கு 'விஷ்ணுபதம்' என்று மறு சொல்லுண்டு. காரணம் ஆகாயம் விஷ்ணுவின் திருவடியாயிற்றே. அதனால், அதன்மீது தம் சூடு படக் கூடாதே என்ற கூச்சத்தினால் சூரிய ஒளி வேகமாக ஆகாயத்தைக் கடக்கின்றதோ இத்தகைய சூரிய ஒளி உங்களுடைய கெட்ட சகுனங்களைப் போக்கட்டும்.

திக்கஜங்களே எண்திசைகளையும் காத்துவருகின்றன. என்பது புராணங்களில் காணப்படும். செய்திகள். 'ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்ஜனம், புஷ்பதந்தம், சார்வபௌமம், ஸுப்ரதீகம்' என்று திசை

யானைகளின் பெயர்களாக அமரகோசத்தில் காணப் படுகிறது.

இங்கு 'துதிக்கைகளின் தடாகத்தில்' என்று கவிஞர் கூறுவது. 'துதிக்கைகளின் தலைப்பகுதி (अग्रभागः) உணவுப் பொருட்களை எடுத்ததற்குரியதாகும். யானையின் துதிக் கையின் நுனிப்பகுதி தாமரையுடன் ஒப்பிடுவது கவி மரபு. 'துதிக்கையைத் திறப்பதும், தாமரை மலர்வதும்' சமான மாகக் கொண்டு கற்பனை செய்யப்பெற்றுள்ளது. ஆதலால் இது 'உத்ப்ரேக்ஷாலங்காரமாகும்'.

नो कल्पापायवायोरदयरयदलत्क्ष्माधरस्याप्य गम्या
गाढोद्गीर्णोज्ज्वलश्रीरहनि न रहिता नो तमःकज्जलेन ।
प्राप्तोत्पत्तिः पतङ्गान्न पुनरुपगता मोषमुष्णत्विषो यो
वर्तिः सैवान्यरूपा सुखयतु निखिलद्वीपदीपस्य दीप्तिः ॥ २३

नो कल्पापायेति । न विद्यते दया यस्य सः अदयः रयः वेगः । अदयश्चासौ रयश्च तेन अदयरयेण दलन्तः शीर्यन्त इति अदयरयदलन्तः ते च ते क्ष्माधराः पर्वताश्च । अदयरयदलन्तः क्ष्माधरा यस्त सः अदयरय-क्ष्माधरः तस्यापि कल्पस्य अपायो नाशः तस्मिन्वायुः तस्य कल्पापायवायोः अगम्या अभिभवितुमशक्या कल्पापायवायुना नो गम्येत्यर्थः । "कृत्यानां कर्तरिवे"ति कर्तरि षष्ठी । इतरादियं दीप्तिस्तु अल्पवायोः अगम्या । अहनि दिवसे । गाढमत्यर्थम् । उद्गीर्णा सर्वतः प्रसृता उज्ज्वाला भास्वरा सा श्रीश्च गाढोद्गीर्णोज्ज्वलश्रीः कान्तिः यस्याः सा गाढोद्गीर्णोज्ज्वलश्रीः इतरा अहनि मन्ददीप्तिः । कज्जलं, कज्जलं तम एव कज्जलं तेन

तमःकज्जलेन रहिता नो रहतेत्यर्थः द्वौ नकारौ प्रकृतमर्थं गमयतः । दीप-दीप्तिस्तु । कज्जलेन सहिता । "पतङ्गाः सूर्यपतङ्गौ । प्राप्ता उत्पत्तिर्यस्याः सा प्राप्तोत्पत्तिः । पतङ्गात् मोषमपहरणं नोपेता न प्राप्ता । दिवस-दीप्तिस्तु, पतङ्गात् शलभात् मोषादि तु गता दीप्तिस्तु । अन्यत् रूपं यस्याः सा अन्यरूपा अवर्तिः । वर्तिरहिता उष्णाः त्विषो यस्य सः उष्णत्विट् तस्य उष्णत्विषः । निखिलाः समस्ताश्च निखिलाश्च द्वीपाश्च तेषां निखिलद्वीपद्वीपानां दीपः तस्य निखिलद्वीपदीपस्य सैव दीप्तिः । वः युस्मान् सुखयतु ॥ २३

நோ கல்பாபாயவாயோரதயரயதலத்-
　　க்ஷ்மாதரஸ்யாப்யகம்யா
காடோத்கீர்ணோஜ்வலஶ்ரீரஹநி
　　ந ரஹிதா நோ தம: கஜ்ஜலேந ।
ப்ராப்தோத்பத்தி: பதங்காந்ந புநருபகதா
　　மோஷமுஷ்ணத்விஷோ வோ
வர்த்தி: ஸைவாந்யரூபா ஸுகயது
　　நிகிலத்வீபத்வீபஸ்ய தீப்தி: ॥ 23

சூரிய ஒளியை தீபத்துடன் உவமித்துக் கூறலாமா? என்று ஆராய்கிறார். தீபத்திற்குச் சமமானதா? இல்லையா என்ற கேள்விக்கு விளக்கமளிக்கிறார் கவி.

விளக்கொளி சாதாரண காற்றுப்பட்டால் அவிந்து விடும். இரக்கமின்றிக் கடுமையாக வீசி மலைகளையே புரட்டிவிடுகின்ற பிரளய காலக் காற்றுக்கூட சூரியனுடைய விளக்கொளியை அணைக்கமுடியாது. நம் வீட்டு விளக்கின் அடிப்புறத்துத் திரியில் கருப்புமை பரவியிருக்கும். உதிக்கும்போதே அடர்த்தியாகக் கிளம்பும் சூரிய ஒளியில் பகலில்கூட கருப்புமை காணப்படாது. பதங்கம் என்றால்

சூரியன் என்றும், மின்மினிப்பூச்சியென்றும் பொருள்படும். ஒளி, பதங்க (சூரிய)னிடமிருந்து உண்டாவதுதான். ஆனால் பதங்கம் (மின்மினிப்பூச்சி போல) ஒளியிழந்து விடுவதில்லை. பூமியென்ற பெருந்தீவுக்குத் தீபமாக விளங்கும் சூரியனின் (விளக்கு) ஒளி உங்களுக்கு சுகம் தரட்டும்.

निःशेषाशावपूरप्रवरगुरुगुणश्लाघनीयस्वरूपा
पर्याप्ता नोदयाद्रौ दिनगमसमयोपप्लवेऽप्युन्नतैव ।
अत्यन्तं यानभिज्ञा क्षणमपि तमसा साकमेकत्र वस्तुं
ब्रध्नस्येद्धा रुचिर्वो रुचिरिव रुचिरस्याप्तये वस्तुनोऽस्तु ॥ २४

निःशेषेति ॥ या ब्रध्नस्य सूर्यस्य । रुचिः दीप्तिः । रुचिरिव स्वसंवेद्या संविदिति यावत् । निश्शेषाः समस्ताः, निश्शेषाश्च ताः आशाश्च तासामवपूरः व्यापनं, तेन प्रवरः सृष्टः, गुरुः महान् । गुरुश्चाऽसौ गुणश्च, निःशेषाशावपूरप्रवरश्चासौ गुरुगुणश्च तेन श्लाघनीयं स्तुत्यं स्वरूपं यस्यास्सा । अन्यत्र आशाः मनोरथाः, निःशेषाश्च ताः आशाश्च तासां अवपूरः निष्पाकदंशशेषक्षमानम् । उदयाद्रौ प्रभाते । पर्याप्ता सम्पूर्णा । उन्नता न किन्तु दिनगमनसमयकालः स एवोपप्लवः तस्मिन् दिनगमनसमयो-पप्लवेऽपि उन्नतैव अस्तङ्गच्छतोपि ते मयूखाः । उन्नताः उदयसमयेप्युन्नता इत्यर्थः । तमसा अन्धकारेण साकं सह "साकं सत्रा समं सह" इत्यमरः । अन्यत्र अज्ञानेन सह साकम् । क्षणमपि अल्पकालमपि । "निर्व्यापारस्थितिः कालविशेषो स यः क्षण" इत्यमरः । एकस्मिन् एकत्र देशे वस्तुमा-वस्थातुम् । अत्यन्तं अत्यर्थम् । अनभिज्ञा असमर्था अयोग्येति यावत् ।

इद्धा समृद्धा सा । ब्रध्नस्य सूर्यस्य । रुचिः दीप्तिः । वः युष्माकम् । रुचिरस्य सम्मतस्य वस्तुनः अर्थस्य प्राप्तयेऽस्तु ॥ २४

நி: ப்சேஷாசாவபூர-ப்ரவரகுருகுண-
ஸ்லாகநீயஸ்வரூபா
பர்யாப்தா நோதயாத்ரௌ நிநகமஸமயோ-
பப்லவே(அ)ப்யுந்நதைவ ।
அத்யந்தம் யாநபிக்ஞா க்ஷணமபி தமஸா
ஸாகமேகத்ர வஸ்தும்
ப்ரத்நஸ்யேத்தா ருசிர்வோ ருசிரிவ
ருசிரஸ்யாப்தயே வஸ்துநோ(அ)ஸ்து ॥ 24

நம்முடைய அளவிலடங்கா ஆசைகளுடன் சூரிய ஒளியை ஒப்பிடுகிறார் கவி.

நம்முடைய பேராசை திசையெங்கும் முட்டி மோதிப் பரவும். அதைச் சாதிக்கக்கூடிய திறன்தான் நம்மிடமில்லை. ஆனால் சூரிய ஒளி திசையெங்கும் எட்டிவிடுவது மட்டும் அல்ல. ஒளித்திறன் குறையாதவாறு நிரம்புகிறது. **गुरुगुण श्लाघनार्थी** நம் ஆசை சிறியதாகத்தான் குறுத்துவிடுகிறது. பத்து ரூபாய் இருந்தால் பொழுது போய்விடுமென்று. ஆனால் எத்தனை கோடி ரூபாய் இருந்தாலும் போதாது என்ற பேராசை வளர்ந்து விடுகிறது. ஆனால் சூரியனுடைய ஒளி கிளம்பும் போதும் குறைவாக இருப்பதில்லை. பகலின் முடிவிலும் அது நிமிர்ந்துதான் பிரகாசிக்கின்றது. நம்முடைய பேராசையில் கபடம், சூழ்ச்சிகள் போன்ற தமோ குணங்கள் அதிகமுண்டு. ஆனால் சூரிய ஒளியோ ஒரு க்ஷணம் கூட ஒரு மூலையில் கூட ஒரு திவிலை கூட தமஸ் (இருட்டு) என்பதை அறியாது. ஆனால் நம்முடைய பேராசைக்கும் சூரிய ஒளிக்கும் ஒரே பெயர் ருசி. அதனால் ஒப்பிட்டுப் பார்க்க நேர்ந்தது அப்படி ஒப்பிட முடியாத சூரிய ஒளி நீங்கள் விரும்பிய பொருளை வழங்கட்டும்.

बिभ्राणः शक्तिमाशु प्रशमितबलवत्तारकौर्जित्यगुर्वीं
कुर्वाणो लीलयाधः शिखिनमपि लसच्चन्द्रकान्तावभासम् ।
आदध्यादन्धकारे रतिमतिशयिनीमावहन्वीक्षणानां
बालो लक्ष्मीमपारामपर इव गुहोऽहर्पतेरातपो वः ॥ २५

बिभ्राणमिति ॥ तारकाः नक्षत्राणि, बलमासामस्तीति बलवत्यः बलवत्यश्च ताः तारकाश्च तासां, और्जित्यं औन्नत्यं, प्रशमितं नाशित तच्च तत् बलवत्तारकौर्जित्यतेनगुर्वीम् । शक्ति सामर्थ्यम् । आशु बिभ्राणम् ।

अन्यत्र, तारको नाम कश्चिदसुरः बलवांश्चासौ तारकश्च तस्य और्जित्यं प्रशमितं च तत् बलवत्तारकौर्जित्यं च तेन गुर्वीं तां शक्ति आयुध विशेषम् । बिभ्राणः । लसत् चन्द्रः तद्वत् । दीप्यमानः लसंश्चासौ चन्द्रश्च लसच्चन्द्रः तद्वत् कान्तः कमनीयः अवभासः कान्तिः यस्य सः लसच्चन्द्रकान्तावभासम् । यद्वा चन्द्रकान्ताः चन्द्रकान्तमणयः, लसन्तश्च ते चन्द्रकान्ताश्च तेषां अवभास इव अवभासो यस्य सः । तं शिखिनं लीलया । अधः कुर्वाणः, अन्यत्र चन्द्रकान्तशिलाः लसन्तश्च ते चन्द्रकान्ताश्च तेषाम् । अन्तेषु अग्रेषु अवभासो यस्य सः तम् । शिखिनं मयूरम् । लीलया अधः कुर्वाणः वाहनादितिभावः । अन्धकारे तमसि । वीक्षणानां लोचनानां अतिशयेन महतीं रतिं प्रीतिम् । वहन् प्रीति-मुत्पादयन् । बालः अह्नां पतिः अहर्पतिः तस्य अहर्पतेः सूर्यस्य । आतपः प्रकाशः । "प्रकाशोद्योत आतपः" इत्यमरः । बालः अपरो गुह इव "पार्वतीनन्दनः स्कन्दस्सेनानीरग्निभूर्गुहः" इत्यमरः । युष्माकं अपरां अपरिमितां लक्ष्मीं आदध्यात् पुष्णातु ॥ २५

பிப்ராண: சக்திமாசு ப்ரசமிதபலவத்-
தாரகௌர்ஜித்ய குர்வீம்
குர்வாணோ லீலயாத: சிகிநமபி
லஸச்சந்த்ர காந்தாவ பாஸம் |
ஆதத்யாதந்தகாரே ரதிமதிசயிநீம்-
ஆவஹந்வீக்ஷணாநாம்
பாலோ லக்ஷ்மீமபாராம் அபர இவ குஹோ
அஹர்பதேராதபோ வ: ॥ 25

கீழ்வானில் சிவந்த வண்ணத்தை எங்கும் பரப்பிக் கொண்டு சூரிய கிரணங்கள் உதயமாகின்றன. இதனைக் காணும் கவியின் உள்ளத்தில் செவ்வேள் பரமன் முருகனும் இப்படித்தானே! உதயமானான்? என்று எண்ணுகிறார். கவியின் உள்ளத்தில் முருகனையும், சூரிய கிரணங்களையும் ச்லேடையாக ஒப்புமைப்படுத்தும் சுலோகமும் உதயமாகின்றது.

இரவில் தாரகைகள் ஒளிமிக்கவைதாம் (बलवत्यः तारकाः) சந்திரனில்லாதபோதுங்கூட தம்மொளியை நிலைநாட்டுபவைதாம். (तासां और्जित्यम्) இருந்தாலும் அதையும் அடக்கும் 'சக்தி' சூரிய கிரணங்களுக்கு உண்டு. (प्रशमितबलवत्तारकौर्जित्यगुर्वीं शक्तिं बिभ्राण:) பாலமுருகனும் இப்படித்தானே! மிகவும் வலிமைபொருந்திய தாரகாசுரனின் உறுதியைக் குலைக்கும் சக்தியை (ஆயுதத்தைப்) படைத்தவன் அல்லவா? இது மட்டுமா? ... சந்திரனின் ஒளிபோலவே குறைந்த ஒளிதான் அக்னிக்கும் உண்டு. இப்படி அக்நியை ஒளியியில் தாழ்மைபடுத்துவது சூரிய கிரணங்கள். (लसच्चन्द्रकान्तावभासं शिखिनम्) முருகனோ! மதியொளிபோன்ற சிறகை விரித்தாடும் (शिखिनम्) மயிலை, தனக்குக் கீழே (வாஹனமாக) வைத்துக்கொள்கின்றவன். மேலும் இருளிலும் கண்களுக்கு ஒளியைக் கொடுக்கும் சூரியனின் ஒளிக்கிரணங்கள், நமக்கு இன்பத்தை அளிக்கட்டும். அந்தகாசுரனை அழித்த சிவனுடைய குமாரன் தனது கருணை விழிகளால் அருள் பாலித்து எல்லையற்ற செல்வத்தையளிப்பது போல. 25

ज्योत्स्नांशाकर्षपाण्डुद्युतितिमिरमषीशेषकल्माषमीष-
ज्जृम्भोद्भूतेन पिङ्गं सरसिजरजसा सन्ध्यया शोणरोचि ।
प्रातः प्रारम्भकाले सकलमपि जगच्चित्रमुन्मीलयन्ती
कान्तिस्तीक्ष्णत्विषोऽक्ष्णां मुदमुपनयतात्तूलिकेवातुलां वः ॥ २६

ज्योत्स्नांशेति ॥ ज्योत्स्ना कौमुदी तस्याः अंशवः तेषां आकर्षः तेन, 'ज्योत्स्नाभया सकलया अम्बुधवला द्युतिः' कान्तिर्यस्य तत् । ज्योत्स्नांशो कृष्णपाण्डुद्युतितिमिरमेव मषी तस्याः शेषः एकदेशः, तेन कल्माष कृष्णम् । ईषज्जृम्भोद्भूतेन "किञ्चिद्विकासे तृन्" अनेन सरसिजानि पद्मानि तेषां रजः परागः । तेन सरसिजरजसा पिङ्गं पिशङ्गं सन्ध्यया शोणं रक्तवर्णं रोचिः कान्तिः यस्य तत् । शोणरोचि इत्यनेन प्रकारेण ; सकलं समस्तं जगत् चित्रं नाम, अनेकवर्णसङ्करचनायुक्तद्रव्यविशेषः चित्रम् । प्रातः प्रारम्भकाले । उन्मीलयन्ती उद्गच्छन्ती । तीक्ष्णाः त्विषः यस्य तस्य सूर्यस्य कान्तिः तूलिकेव चित्रगा वर्तिरिव, वः युष्माकं, अक्ष्णां नयनानां, अतुलां सम्पूर्णां मुदं हर्षम् । उपनयतात् विदधातु ॥

ஜ்யோத்ஸ்நாம்சா கர்ஷ பாண்டுத்யுதி-
திமிரமஷீசேஷகல்மாஷமீஷ-
ஜ்ரும்போத்பூதேந பிங்கம் ஸரஸிஜரஜஸா
ஸந்த்யயா சோணரோசி ।
ப்ராத: ப்ராரம்பகாலே ஸகலமபி
ஜகச்சித்ரம் உன்மீலயந்தீ
காந்தி: தீக்ஷ்ணத்விஷோ அக்ஷ்ணாம்
முதமுபநயதாத் தூலிகேவாதுலாம் வ: ॥ 26

உதிக்கின்ற செங்கதிர் தனது மெல்லிய கிரணங்களை எங்கும் பரப்பி உலகையே அழகுமயமாகச் செய்கிறது. ஒருபுறம் வெண்மை, மறுபுறம் கருமை, மற்றொருபுறம் மஞ்சள், செம்மை போன்ற பல்வேறு வகைப்பட்ட வண்ணங்கள் உலகெங்கும் நிறைந்து காணப்படுகின்றன. இத்தகைய வண்ணக் கலவைகளைக்கொண்டு உலகையே ஓவியமாகத் தீட்டும் ஓவியனாகச் சூரியனை சித்தரிக்கின்றார் கவிஞர் இந்த சுலோகத்தால்:

சூரியன் உதித்ததும் சந்திரன் மறைகிறான். மறையும் சந்திரனின் எஞ்சிய ஒளியோ உலகெங்கும் சித்திரத்தின் பகைப்புலன் போல வெண்மையைப் பரப்புகின்றது. இருள் மெல்ல மெல்ல விலகிய போதும் இன்னும் சிறிது எஞ்சியே யுள்ளது. அதனால் கருமை வண்ணமும் சிறிது காணப் படுகிறது. தாமரைகள் மெல்ல மெல்ல மலரத் தொடங்கி யுள்ளதால் அதிலுள்ள மகரந்தப் பொடிகள் பரப்பும் மஞ்சள் வண்ணம், கீழ்வானில் ஆதவன் உதயமாகும் சந்தியா காலமாதலால் செம்மை வண்ணம். இதுபோன்ற பல்வேறு வண்ணக் கலவைகளால் சூரியன் தனது ஒளி யாகிய ஓவியத் தூரிகைகளால் உலகையே ஒரு சித்திரமாக விளங்கச் செய்கிறான். இத்தகைய சூரியனின் ஒளி உங்களுடைய கண்களுக்கு அபரிமிதமான ஆனந்தத்தை நல்கட்டும்.

आयान्ती किं सुमेरोः सरणिररुणिता पाद्मरागैः परागैः-
आहोस्वित्स्वस्य माहारजनविरचिता वैजयन्ती रथस्य ।
माञ्जिष्ठप्रष्ठवाहावलिविधुतशिरश्चामराली नु लोकै-
राशङ्क्यालोकितैवं सवितुरघनुदे स्तात्प्रभातप्रभा वः ॥ २७

आयान्तीति ॥ सुमेरोः पर्वतात् । आयान्ती आगच्छन्ती सरणिः मार्गः "सरणिः पद्धतिः पद्या" इत्यमरः । पद्मरागस्य इमे पाद्मरागाः तैः

पाद्मरागैः पद्मसगसम्बन्धिभिः पाद्मरागैः परागैः रेणुभिः । अरुणता किं ? अहोस्विदिति आशङ्का द्योतकेऽपि अहोस्वित् । स्वस्य सूर्यस्य सम्बन्धिनः । रथस्य माहारजनं कुसुम्भं तस्येदं माहारजनं, रक्तवासः तेन विरचिता वैजयन्ती "पताका वैजयन्ती स्यात्" इत्यमरः । मञ्जिष्ठा नाम कश्चन रक्तद्रव्यविशेषः । मञ्जिष्ठेन रक्ताभाञ्चितेन रक्तं, "रागादित्यदिना ठन्प्रत्ययः" प्रष्ठाः अग्रगामिनः प्रष्ठाश्च ते वाहाश्च तेषामावलिः । पङ्क्तिः यथा विधुता चामराणामावलिः पङ्क्तिः । शिरस्सु चामरावलिर्मांजि(ष्ठा) च सा प्रष्ठवाहावलिः विधुतशिरश्चामरावलिः । नु तर्के । एवं लोकजनै-राशङ्क्या आलोकिता प्रेक्षिता । सवितुः सूर्यस्य प्रभा । प्रभाते । वः युष्माकम् । चिरम् । अग्नुदे स्तात् स्यात् इत्यर्थः ॥ २७

ஆயாந்தீ கிம் ஸுமேரோ: ஸரணிருணிதா
பத்மராகை: பராகை:
ஆஹோஸ்வித்ஸ்வஸ்ய மாஹா-
ரஜந விரசிதா வைஜயந்தீ ரதஸ்ய ।
மாஞ்ஜிஷ்டீ ப்ரஷ்ட வாஹாவளி-
விதுதசிரச்சாமராளீ நு லோகை:
ஆசங்க்யா லோகிதைவம் ஸவிதுரகநுதே
ஸ்தாத்ப்ரபாத ப்ரபா வ: ॥ 27

இளஞ்சிவப்புடன் உதிக்கின்றான் சூரியன். அதனால் கீழ்வானம் முழுதும் செம்மை பரப்பியக காட்சியைக் காண்கிறார் கவிஞர் இதைக் கண்டு வியப்பு மேலீட்டால் 'இத்தகைய செம்மைக்குக் காரணம் யாதாக இருக்கலாம்?' என்ற ஐயம் கவிஞரின் உள்ளத்தில் பிறக்கின்றது. அதுவே சுலோகமாகவும் பிறக்கிறது.

கீழ்வானம் முழுதும். செம்மை வண்ணமாக இருப்பதன் காரணமென்ன? ஓஹோ ... சூரியன் மேருமலையின் வழியாக வருவதால், அங்கு வழியில் சிதறிக்கிடக்கும் பத்மராக மணி (இளஞ் சிவப்புக் கலந்த மஞ்சள் வண்ணம் கொண்ட நவரத்தினங்களிலொன்று) யின் பிரகாசத்தால் தான் இத்தகைய செம்மை வண்ணம் காணப்படுகிறதோ? அல்லது சூரியனுடைய ரதத்தில் கட்டப்பட்டுள்ள சிவப்பு வண்ணக் கொடியின் காந்தியோ? அல்லது அவனுடைய ரதத்தில் வரிசையாகப் பூட்டப்பட்டுள்ள உயர்ந்தஜாதிக் குதிரைகளின் பிடரி மயிர்களில் காணப்படும் சிவப்பின் காந்தியோ? (The colour of the Indian madder) என்று மக்கள் ஐயுறுமாறுத் தோன்றுகின்ற சூரியனின் காலை ஒளி உங்களுடைய பாவங்களை அழிக்கட்டும்.

ध्वान्तध्वंसं विधत्ते न तपति रुचिमान्नातिरूपं व्यनक्ति
न्यक्त्वं नीत्वापि नक्तं न वितरतितमां तावदह्नस्त्विषं यः ।
स प्रातर्मा विरंसीदसकलपटिमा पूरयन्युष्मदाशा-
माशाकाशावकाशावतरणतरुणोपक्रमोऽर्कप्रकाशः ॥ २८

ध्वान्तध्वंसमिति ॥ यः अर्कस्य सूर्यस्य । प्रकाशः आतपः "प्रकाशो द्योतिरातपः" इत्यमरः । ध्वान्तस्य अन्धकारस्य । ध्वंसं नाशम् । विधत्ते । न तपति न सन्तापयति, बालत्वादिति भावः । रुचिमान्नाति रूपं सरूपं चक्षुर्विषयं घटपटादिना । व्यनक्ति न करोति । नक्तं रात्रि न्यक्कृतमल्पत्वम् । नीत्वापि तावत् अन्त्यः । दिवसस्य । त्विषं कान्तिं । न वितरतितमां न विस्तारयति । किमेतिङव्ययघादाम्वद्रव्यप्रकर्षे इत्यमु प्रत्ययः । असकलः असम्पूर्णः । पटोः भावः पटिमा यस्य सः असकल-पटिमा । आशाः दिशः, आशाश्च आकाशं च । आकाशं तस्य

अवकाशः । मध्यप्रदेशः तस्य अवतरणमुल्लङ्घनं तस्मिन् । तरुणः युवा । तस्य उपक्रमः उद्योगो यस्य सः आशाकाशावकाशावतरुणोपक्रमः । अर्कप्रकाशः । युष्मदाशां भवदभिलाषाम् । पूरयन् । मा विरंसीत् न विरमतु ॥ २८

த்வாந்தத்வம்ஸம் விதத்தே ந தபதி ருசிமான்-
நாதிரூபம் வ்யநக்தி
ந்யக்த்வம் நீதாபி நக்தம்
ந விதரதிதமாம் தாவதஹ்நத்விஷம் ய: ।
ஸ: ப்ராதர்மா விரம்ஸீத்
அஸகல படிமா பூரயந்யுஷ்மதாசாம்-
ஆசாகாசாவகாசாவதரண தருண-
உபக்ரமோ அர்க்க ப்ரகாச: ॥ 28

உதிக்கின்ற சூரியன் இன்னும் முழுமையாக வெளிப்பட வில்லை. (**नातिरूपं व्यनक्ति**) ஒளிமட்டும் வருகிறது. ஆனால் சூடு இல்லை. (**रुचिमान् न तपति**) ஆயின் இருளை அறவே ஒழித்துவிடுகிறான். இரவு முழுதும் பின்தள்ளப்பட்டு விட்டது. ஆனால் இன்னும் பகல் ஒளி பரவவில்லை. (**न वितरतितरां तावदह्नः त्विषम्**) ஆகாயமெங்கும் வியாபிக்க வேண்டும் என்ற வீர்யத்தோடு கிளம்புகின்ற சூரிய ஒளி, இன்னும் முழுமையாக வெளிப்படாவிட்டாலும், (**असकल पटिमा**) உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு முன் ஓய வேண்டாம்.

तीव्रं निर्वाणहेतुर्यदपि च विपुलं यत्प्रकर्षेण चाणु
प्रत्यक्षं यत्परोक्षं यदिह यदपरं नश्वरं शाश्वतं च
यत्सर्वस्य प्रसिद्धं जगति कतिपये योगिनो यद्विदन्ति
ज्योतिस्तद् द्विप्रकारं सवितुरवतु वो बाह्यमाभ्यन्तरं च ॥ २९

तीव्रमिति । तीव्रं तीक्ष्णं उष्णमित्यर्थः । तद्ध ह्ययं यद् निर्वाणस्य मोक्षस्य । हेतुः कारणं "निर्वाणं निर्वृत्तिः मोक्षः" इत्यमरः । ब्रह्मतत्वं तदाभ्यन्तरम् । तद्विपुलं महश्च तत् बाह्यम् । च शब्दसमुच्चये । यच्च प्रकर्षेण अतिशयेन सूक्ष्मं तदाभ्यन्तरम् । यत्प्रत्यक्षं इन्द्रियग्राह्यं तद्बाह्यं यत्परोक्षमनुमानग्राह्यं तदाभ्यन्तरम् । अस्मिन् लोके यत्सारं तेजः तद्बाह्यम् । यत्तेजः अपरं लोकान्तरस्थं तदाभ्यन्तरं यत् । तन्नश्वरं, शाश्वतं नित्यं । तदाभ्यन्तरं यत्तेजः सर्वस्य योगस्य प्रसिद्धं सुविदितम् । जगति कतिपये । योगिनः योगाः श्वासरहिताः । विदन्ति जानन्ति । तदाभ्यन्तरं तद्बाह्यं आभ्यन्तरं चेति द्विप्रकारम् । सवितुः ज्योतिः । वः युष्मान् । अवतु रक्षतु ॥ २९

தீவ்ரம் நிர்வாணஹேது:
யதபி ச விபுலம் யத்ப்ரகர்ஷேண சாநு
ப்ரத்யக்ஷம் யத்பரோக்ஷம்
யதிஹ யதபரம் நச்வரம் சாச்வதம் ச ।
யத்ஸர்வஸ்ய ப்ரஸித்தம்
ஜகதி கதிபயே யோகிநோ யத்விதந்தி
ஜ்யோதிஸ்தத் த்விப்ரகாரம்
ஸவிது: அவது வோ பாஹ்யம் ஆப்யந்தரம் ச ॥ 29

சூரியனுக்கு இருவித ஒளிகள் உண்டு என்பதை இந்த சுலோகத்தில் குறிப்பிடுகிறார் கவி.

ஒன்று; ஸவிது; வரேண்யம் பர்க:, பரப்ரம்மத்தினுடைய மிகச் சிறந்த ஆத்மவொளி. அதுதான் (**निर्वाणहेतुः**) தன்னுடன் சேர்த்துக்கொள்ளும் திறனுடையது. எங்கும் நிறைந்தது (**विपुलं**). ஆயினும் புலன்களுக்கு அகப்படாதது (**परोक्षम्**); என்றும் உள்ளது (**शाश्वतं**), இதனை யோகிகளே உணர்வார்கள். (**योगिनो यद्विदन्ति**)

மற்றொன்று, கடுமையானது (तीव्र). அதன் வீச்சையும் பார்த்து, அதன் உருவத்தையும் பார்த்தால் அணுவானது. ஆனால் கண்களுக்குப் புலப்படுவது. பரப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறானது. அழிவுள்ளது இதுதான் உலகெங்கும் பிரஸித்தமானது.

இப்படி உள்ளும் புறமும் (बाह्यं आभ्यन्तरं च) இரண்டு விதமாகவும் ஒன்றாகவே பிரகாசிக்கின்ற சூரியன் (ஸவிதாவின்) ஒளி உங்களைக் காக்கட்டும்.

रत्नानां मण्डनाय प्रभवति नियतोद्देशलब्धावकाशं
वह्नेर्दार्वादि दग्धुं निजजडिमतया कर्तुमानन्दमिन्दोः ।
यच्च त्रैलोक्यभूषाविधिरघदहनमाह्लादि वृष्ट्याशु तद्वो
बाहुल्योत्पाद्यकार्याधिकतरमवतादेकमेवार्कतेजः ॥ ३०

रत्नानामिति ॥ उद्देशः नियतश्च उद्देशश्च नियतोद्देशः, लब्धः अवकाशो येन तत् नियतोद्देशलब्धावकाशम् । रत्नानां यत् तेजः । मण्डनाय प्रभवति भूषणायैव समर्थं भवति । नान्यस्मै प्रयोजनायेत्यर्थः । तस्य वह्नेः तेजः दार्वादि काष्ठादिकं दग्धुं भस्मीभूतं कर्तुं प्रभवति । त्रयश्च ते लोकाश्च त्रैलोक्यम् । स्वार्थे यप्रत्ययः । त्रैलोक्यस्य भूषा । तस्याः विधिः । दह्यते अनेनेति दहनम् । बाहुल्येन बहुलत्वेन, उत्पाद्यानि निर्वर्त्यानि कर्तुं योग्यानि कार्याणि, बाहुल्योत्पाद्यानि च तानि कार्याणि च, अतिशयेन अधिकं अधिकतरं बाहुल्योत्पाद्यादिकार्याधिकतरं तत् एकमेवार्कतेजः । वृष्ट्या । अह्लादितुं (आह्लादितुं) तोषयितुं शीलमस्यास्तीति आह्लादि सत् । आशु । वः युष्मान् । अवतात् ॥ ३०

ரத்நாநாம் மண்டநாய
ப்ரபவதி நியதோத்தேச லப்தாவகாசம்
வந்ஹ்நேர்தாவாதி தக்தும்
நிஜஜடிமதயா கர்த்தும் ஆநந்தமிந்தோ: |
யச்ச த்ரைலோக்ய பூஷா
விதிரக தஹநம் ஹ்லாதி வ்ருஷ்ட்யாசு தத்வோ
பாஹுல்யோத்பாத்ய கார்யா-
அதிகதரமவதாதேக மேவார்க தேஜ: || 30

அழகையும், ஆனந்தத்தையும் நல்குவது சூரிய ஒளி என்று கூறுகிறார் இச்சுலோகத்தில்.

உலகில், காரணத்திலிருந்து காரியமாகும் பொருட்கள் அனைத்தும், காரணத்தைக் காட்டிலும் அதிக திறனுடைய வைதான். ஆனால், சூரியனுடைய தேஜஸ், அது விளைவிக்கும் பொருட்களைவிட திறன்மிக்கது. (**बाहुल्योत्पाद्य-कार्य - अधिकतरम्**) ரத்தினங்களின் சுப ஒளி அவை இருக்குமிடத்தில் கொஞ்சம் தெரியும். அவற்றின் மீது சூரிய ஒளி பட்டால் அவை அதிக ஒளி பெற்று அலங்காரமாக ஆகின்றது. (**रत्नानां नियतोद्देश लब्धावकाशं तेज: सूर्य तेजसा मण्डनाय प्रभवति**) இதைப்போலவே நெருப்பு, காட்டையே அழிக்கும் திறன் பெறுவது சூரிய ஒளியினாலே. ஏனெனில், சூரிய வெப்பம் தாக்கிச் சூடேறிய மரங்களில் நெருப்பு விரைவாகப் பற்றிப் பரவுகிறது. சந்திரனுக்கு ஒளியும் உண்டு, தண்மையும் உண்டு. ஒளிமட்டும் ஆனந்தமளிப்பதில்லை அவ்வொளியுடன் (தண்மை) குளிர்ச்சியும் சேர்ந்தால். அது ஆனந்தத்தைத் தருகிறது. சூரியனுடைய ஒளிபெற்று, தனது தண்மையால் சந்திரன் ஆனந்தமளிக்கிறான். ஆகவே, உலகிலுள்ள பொருட்களுக்கு உரிய அழகை விளங்கவைப்பது சூரிய ஒளியே. அது அழகைக் கொடுத்து ஆனந்திக்கச் செய்வதுடன், மழை பொழியச் செய்து மகிழவும் வைக்கிறது, இவ்விதம் பலவாறாக உபகரித்து மகிழவைக்கும் ஓரே தேஜஸான சூரிய தேஜஸ் உங்களைக் காக்கட்டும். **30**

मीलच्चक्षुर्विजिह्मश्रुति जडरसनं निघ्निताघ्राणवृत्ति
स्वव्यापाराक्षमत्वक्परिमुषितमनः श्वासमात्रावशेषम् ।
त्रिस्रस्ताङ्गं पतित्वा स्वपदपहरतादाश्रियं वोऽर्कजन्मा
कालव्यालावलीढं जगदगद इवोत्थापयन्प्राक्प्रतापः ॥ ३१

अथानेन जगतः सूर्यदष्टपुरुषेण साम्यमुच्यते । मीलच्चक्षुरिति ॥

मीलितं सङ्कुचितं चक्षुः यस्य तत् मीलच्चक्षुः । विजिह्मं अवधीरितभूता श्रुतिः श्रवणेन्द्रियं यस्य तत् विजिह्मश्रुति । जडा स्वविषय-मधुरादिग्रहणाक्षमा रसना यस्य तत् जडरसनं, निघ्निता विहता घ्राणस्य वृत्तिर्यस्य तत् । निघ्निताघ्राणवृत्ति । स्वव्यापारे स्वविषयस्य स्पर्शग्रहणे अक्षमा असमर्थात्वक् त्वगिन्द्रियं यस्य तत् स्वव्यापाराक्षमत्वक् । परिमुषितं खण्डितं मनः यस्य तत् परिमुषितमनः । श्वासाः निश्वासाः एव मात्रं स्वासमात्रमवशेषो यस्य तत् श्वासमात्रावशेषम् । विस्रस्तानि अङ्गानि अवयवा यस्मिन् कर्मणि तत् । विस्रस्ताङ्गम् । पतित्वा भूम्यादौ इति भावः । कालः एव व्यालः सर्पः तेन अवलीढं दष्टं । जगत् । अगद इव विषमन्त्रवेदी, अगदो विषमत्र विदीप्तिः शाश्वता । उत्थापयन् । अर्कात् जन्म यस्य सः, अर्कजन्मा । "जन्मोत्तरपदाद्व्यिकरणो बहुव्रीहिरिति" वामनः । प्राक् प्रातः । प्रथमकिरणपातः । वः युष्माकम् । अश्रियं अलक्ष्मीं अपहरतात् अपहरतु ॥ २२

மீலச்சக்ஷுர் விஜிம்ஹ ச்ருதி ஜடரஸநம்
நிக்நிதா க்ராண வ்ருத்தி
ஸ்வவ்யா பாரா க்ஷமத்வக்-
பரிமுஷிதமந: ச்வாஸ மாத்ராவசேஷம் ।

விஸ்ரஸ்தாங்கம் பதித்வா
ஸ்வபதபஹரதாதாச்ரியம் வோ அர்க்கஜன்மா
காலவ்யாலாவலீடம்
ஜகதகத இவோத்தாபயந் ப்ராக் ப்ரதாப: 31

தன்னையும் மறந்து கிடக்கும் மனிதனை எழுப்புகின்றவன் 'சூரியனாகிய மருத்துவனே' என்கிறார் கவி.

இரவு (காலம்) என்ற பெரும்பாம்பு உலகை விழுங்கி விட்டது. கண்கள் மூடிவிட்டன. காதுகள் கேட்க வில்லை. நாக்கில் (விஷம் பரவி) ருசி (சுவை) தெரிய வில்லை. மூச்சு முட்டிவிட்டது. உடலில் தொடும் உணர்ச்சி, குளிர்ச்சி, சூடு தெரியவில்லை. மனது மயங்கி விட்டது. மூச்சுமாத்திரம் லேசாக வருகிறது. கை கால்கள் விரைத்து விழுந்து கிடக்கின்றன உலகம் தூங்கி விட்டதோ? இப்படி குற்றுயிராகக் கிடக்கும் உலகை, சூரியனிடம் உண்டாகின்ற முன்னொளி என்ற விஷ வைத்தியன் புத்துயிர் கொடுத்து எழுப்பட்டும்.

निःशेषं नैशमम्भः प्रसभमनुदन्नश्रुलेशानुकारि
स्तोकस्तोकापनीतारुणरुचिरचिरादस्तदोषानुषङ्गः ।
दाता दृष्टिं प्रसन्नां त्रिभुवननयनस्याशु युष्मद्विरुद्धं
वध्याद् ब्रध्नस्य सिद्धाञ्जनविधिरपरः प्राक्तनोऽर्चिः प्रचारः ॥ ३२

अथानेन सूर्यार्चिषः सिद्धाञ्जनविधिना साम्यमुच्यते निःशेषमिति । आश्रूणां लेशाः कणाःताननुकरोतीत्यश्रुलेशानुकारि नयनजलबिन्दुसदृशमित्यर्थः । नैशं निशि भवम् । अम्भस्तु पारजलम् । निर्गतः शेषो यस्मिन् कर्मणि निश्शेषम् । प्रसभमत्यर्थमपनुदन् अन्यत्र अश्रूणि अपनुदन् । स्तोकस्तोकं अत्यल्पं, अपनीता अपहृता अरुणरुचिः रक्तकान्तिर्यस्य सः ।

स्तोकस्तोकापनीतारुणरुचिः । उभयत्र समानम् । अचिरात् शीघ्रम् । अस्तः नुन्नः । दोषानुषङ्गोऽत्र संश्लेषो येन सः अस्तदोषानुषङ्गः । अन्यत्र अस्तः नुन्नः दोषानुषङ्गस्तिमिरपटलाद्यनुषङ्गः संश्लेषो येन सः । त्रिभुवनानां नयनं तस्य त्रिभुवननयनस्य सूर्यस्य । प्रसन्नां निर्मलां दृष्टिं दर्शनं निर्मलं दाता दृष्टिशब्दस्य "कर्तृकर्मणोः कृतीति षष्ठ्यां प्राप्तायां, न लोकाव्ययनिष्ठाखलर्थतृनामिति षष्ठी प्रतिषेधः" । प्रत्नस्य सूर्यस्य प्राक्तनः प्राक्भवः सायं चिरेत्यादिना लुट् प्रत्ययः । तदागमश्च अर्चिषां प्रचारः सञ्चारः । अपरः सिद्धाञ्जनविधिरिव युष्मद्विरुद्धं भवतां अशुभं आशु वध्यात् 'हनोवधलिङिति' वधादेशः । ३२

நி:சேஷம் நைசமப்ப:
ப்ரஸபமபநுதந் அஸ்ருலேசாநுகாரீ
ஸ்தோகஸ்தோகாபநீத
அருணருசிரசிராத் அஸ்ததோஷாநுஷங்க: ।
தாதா த்ருஷ்டிம் ப்ரஸந்நாம்
த்ரிபுவந நயந ஸ்யாசு யுஷ்மத் விருத்தம்
வத்யாத் ப்ரத்நஸ்ய ஸித்தாஞ்ஜந
விதிரபர: ப்ராக்தநோர்ச்சி: ப்ரசார: 32

கீழ்வானில் ஏற்பட்ட செம்மை வண்ணம் மெல்ல மெல்ல மறைந்துகொண்டு வருகிறது. சூரியனும் சிவந்த வண்ணத்திலிருந்து மாறி தங்கத் தகட்டைப் போலத் தெளிவாகக் காட்சி தருகிறான். இக்காட்சியைக் கண்ட மயூர கவி சிலேடையாக, கண்ணோய்க்கு மருந்தான மைக்கும் சூரிய உதயத்திற்கும் ஒப்புமையுடன் கூடிய கற்பனைக் கவிதையை இயற்றுகிறார்.

கண்ணோய் உள்ளவனுடைய கண்களில் (உஷ்ணத்தினால்) நீர் வடியும், கண்கள் சிவந்திருக்கும். கண்களில் உறுத்தல் இருக்கும். நன்றாகப் பார்க்க முடியாது.

இதற்காகக் கண்களில் (மருந்து) 'மை'யிட்டுக்கொள்வது வழக்கம். அதனால் கண்களில் நீர்வடிவது நீங்கும். சிவப்பும் நீங்கும். உறுத்தல் இருக்காது. பார்வை நன்றாக விளங்கும்.

சூரியனோ ! உலகின் ஒரு கண். அதில் இரவுப் பனியினால் காலையில் முத்துமுத்தாக எங்கும் நீர் சொட்டுகிறது. அந்த நீரையும் வடிய வைக்கிறது சூரியனின் ஒளி பரப்பு. மூவுலகக் கண் காலையில் சிவந்து காணப்படுகிறது. சூரியனின் ஒளி பரவப்பரவ அந்தச் சிவப்பு மெல்ல மெல்ல நீங்குகிறது. 'தோஷா' **(दोषा)** என்றால் காலைச் சந்தி, மாலைச்சந்தி. அதன் தொடர்பு நீங்குகிறது. **दोषाया अनुषङ्गः अस्तः** சாதாரண மக்கள் விஷயத்தில் **दोषस्य अनुषङ्गः अस्तः** கண் உறுத்தல் முதலிய தோஷங்கள் விலகுகின்றன. இப்படிப்பட்ட சூரிய ஒளி ஒரு மாந்திரிக (மந்திரவாதி)னின் 'மை' போல நம் கண்களின் பார்வையைத் தெளிவுபடுத்துகிறது. அது உங்களுக்கு விரோதமான (தீமையானவற்றை) அழிக்கட்டும்.

'ஆரோக்யத்தைப் பெறவேண்டுமாயின் சூரியனை வழிபடவேண்டும்' என்பது ஆன்றோர்களின் வாக்கு. கண்ணோய் மற்றும் பிறநோய்கள் நீங்குவதற்காகச் சூரியனை வழிபாடு செய்வதும், சூரிய நமஸ்காரங்களைச் செய்வதும் மரபு. இதனை இன்னும் பலர் கடைபிடித்து வருகின்றனர். இதனை நினைவூட்டுவதைப் போல சூரிய ஒளியை 'கண்ணோய்க்குரிய மருந்தாக' இக் கவிதையில் குறிப்பிட்டுள்ளார் கவி.

भूत्वा जम्भस्य भेत्तुः ककुभि परिभवारम्भभूः शुभ्रभानो-
र्बिभ्राणा बभ्रुभावं प्रसभमभिनवाम्भोजजृम्भाप्रगल्भा ।
भूषा भूयिष्ठशोभा त्रिभुवनभवनस्यास्य वैभाकरी प्राग्-
विभ्रान्तिभ्राजमाना विभवतु विभवोद्भूतये सा विभा वः ॥ ३३

भूत्वेति । विभाकरस्येयं वैभाकरी सूर्यसम्बन्धिनी, विभा दीप्तिः । जम्भस्य भेत्तुः इन्द्रस्य । ककुभि प्राच्यां दिशि । 'दिशस्तु ककुभः काष्ठा' इत्यमरः । शुभ्रा भानवो यस्य सः शुभ्रभानुः चन्द्रः तस्य शुभ्रभानो । परिभवस्य आरम्भः उद्योगः तस्य भूः भूमिस्थानमिति यावत् । भूत्वा प्रसभं अत्यर्थं बभ्रुभावं अरुणं बिभ्राणा अभूदिति शेषः । अभिनवानां नूतनानाम् । अम्भोजानां कमलानां जृम्भा विकासः तया प्रगल्भा । अस्य त्रिभुवनमेव भवनम् । तस्य भवनस्य भूयिष्ठा महती शोभा कान्तिर्यस्यास्सा भूयिष्ठशोभा । भूषा अलङ्करणम् । विगता भ्रान्तिरज्ञानं यस्यास्सा । भ्राजमाना दीप्यमाना विभ्रान्तिश्च । सा भ्राजमाना च बिभ्रान्तिभ्राजमाना सा वैभाकरी विभा । वः युष्माकम् । विभवस्य सामर्थ्यस्य उद्भूतये अधिकसम्पदे । विभवतु सम्यग्भूयात् ॥ ३३

பூத்வா ஜம்பஸ்ய பேது:
ககுபி பரிபவா: ரம்பபூ: சுப்ரபாநோ:
பிப்ராணா பப்ருபாவம்
ப்ரஸபமபிநவாம்போஜஜ்ரும்பாப்ரகல்பா ।
பூஷா பூயிஷ்டசோபா
த்ரிபுவநபவநஸ்யாஸ்ய வைபாகரீ ப்ராக்-
விப்ராந்தி ப்ராஜமாநா
விபவது விபவோத்பூதயே ஸா விபா வ: ॥ 33

இந்தக் கவிதையில் சூரியன் உதிக்கும் முன்னரே தோன்றும் 'முன்னொளி'யின் சிறப்பைக் கூறுகிறார் கவி.

प्राग्विभ्रान्ति भ्राजमाना वैभाकरी विभा சூரியன் உதயமாவதற்கு முன்னரேயே பிரகாசிக்கின்றது சூரியனின் ஒளி. இந்த ஒளி முதலில் கீழ்த்திசையில் பிரவேசிக்கின்றது. இந்திரன் மூவுலகிற்கும் அதிபதி, ஜம்பன் என்ற அசுரனைக்

சொன்றனன், இவனுடைய ஆட்சிக்குட்பட்ட கிழக்குத் திக்கில் பிரவேசித்த சூரியனின் முன்னொளி, அந்த இந்திரனின் ஒளியையும் குன்றச் செய்துவிடுகிறது. மேலும் அது மெல்ல மெல்ல விரிவடைந்து உறங்கிக் கொண்டிருந்த தாமரையை உசிப்பியும் விடுகிறது. இதனால் அந்தத் தாமரைகள் மெல்ல மெல்ல கொட்டாவி விடுகின்றன. (கொட்டாவி விடுவதைப் போல மலர்கின்றன) இத்தகைய வனப்பு இங்குமட்டுமில்லை. மூவுலகினுக்கும் வனப்பை வளர்க்கிறது; கீழ்வானில் அலங்காரமாகத் திகழும் சூரியனின் முன்னொளி உங்களுக்கு அனைத்துச் செல்வங்களையும் செழிக்கச் செய்யட்டும்.

संसक्तं सिक्तमूलादभिनवभुवनोद्यानकौतूहलिन्या-

यामिन्या कल्य एवामृतकरकलशावर्जितेनाऽमृतेन ।

अर्कालोकः क्रियाद्वो मुदमुदयशिरश्चक्रवालालवाला-

दुद्यन्बालप्रवालप्रतिमरुचिरहःपादपप्राक्प्ररोहः ॥ ३४

अथार्कालोकस्य पादपप्रथमाङ्कुरसाम्यमुच्यते संसक्तमिति ।

भुवनं भवोद्यानं अभिनवं रम्यं अभिनवं च तत्, भुवनोद्यानं च । कुतूहलमेव कौतूहलम् । अस्या अस्तीति कौतूहलिनी । अभिनवभुवनोद्यान-कौतूहलिनी तया अभिनवभुवनोद्यानकौतूहलिन्याम् । उभयत्र समानम् । यामिन्या रात्र्या । कल्य एव । अमृतकरश्चन्द्रः । अमृतकर एव कलशः । तेनावर्जितं तेनामृतकरकलशावर्जितेन । अमृतेन जलेन । "पयः कीलालममृत"मित्यमरः । अन्यत्र अमृतेन सुधया । "पीयूषममृतं सुधे"त्यमरः । संसक्तं निरन्तरं सिक्तं द्रवीकृतं मूलं यस्य तत् सिक्तमूलात् । उदयः उदयपर्वतः तस्य शिरांसि तेषां चक्रवालं मण्डलं "चक्रवालं तु मण्डल"मित्यमरः । तदेवालवालं तस्मात् -- उदयशिरश्चक्रवालात् । उद्यन्

उदयन् बालश्चासौ प्रवालश्च प्रवालेन प्रतिमा सदृशी रुचिः कान्तिर्यस्य सः बाल प्रवालप्रतिमरुचिः । नवपल्लवसदृशकान्तिरित्यर्थः । पद्भिः पिबतीति पादपो वृक्षः अह एव पादपः अहःपादपः तस्य अहःपादपस्य । प्राक् प्ररोहः प्रथमाङ्कुरः । अर्कालोकः सूर्यस्य प्रकाशः । वः युष्माकम् । मुदं हर्षं क्रियात् ॥ ३४

ஸம்ஸக்தாஸிக்தமூலாத்-
அபிநவபுவநோத்யான கௌதூஹலிந்யா-
யாமிந்யா கந்ய ஏவ
அம்ருதகர கலசா வர்ஜிதேநாம்ருதேந ।
அர்க்காலோக: க்ரியாத்வோ
முதமுதயசிரச்சக்ரவாலாலவாலாத்-
உத்யந்பாலப்ரவால
ப்ரதிமருசிரஹ: பாதப ப்ராக் ப்ரரோஹ: ॥ 34

உதிக்கின்ற சூரியனின் இளந்தளிர் போன்றுள்ள காந்தியின் அழகைக் கண்டு ரசித்த மயூர கவி, உலகை நந்தவனமாகவும். அதில் வளரும் மரத்தின் தளிருக்கு சூரியகாந்தியையும் ஒப்புமைப்படுத்திக் கற்பனை செய்கிறார் இக் கவிதையின் வாயிலாக.

உதயாசலம் (உதயகிரி) என்னும் நந்தவனத்தில், பகல் என்னும் (மரத்தின்) விதையை நட்டுப் பயிரிட மிகுந்த விருப்பங்கொண்டாள் இரவாகிய நங்கை. இதற்கு சந்திரனாகிய குடத்தில், அமிர்மாகிய ஜலத்தை ஊற்றி (மரத்தை) வளர்த்தாள். இதன் பயனாக விதை முளைத்து, பவளம் போன்ற சிவந்த காந்தியுடன் கூடிய தளிரிட்டது. அந்த இளந்தளிர் போல் விளங்கும் சூரியனின் ஒளிக்கதிர்கள் உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கட்டும்.

உதயகிரியை நந்தவனமாகவும், அதில் வளரும் மரத்திற்கு பகலையும், மரம் வளரத் தேவைப்படும் தண்ணீர் - மற்றும் குடத்திற்கு நிலவையும், தண்ணீர் வார்க்கும் பெண்ணுக்கு இரவாகிய நங்கையையும், முளைத்துக் கிளம்பும் இளந்தளிரின் காந்திக்கு சூரியனின் இளங்காந்தியையும், உவமையாகக் கொண்டு கற்பனை செய்துள்ளார் மயூர கவி.

भिन्नं भासारुणस्य क्वचिदभिनवया विद्रुमाणां त्विषेव

त्वङ्गन्नक्षत्ररत्नद्युतिनिकरकरालान्तरालं क्वचिच्च ।

नान्तर्निःशेषकृष्णश्रियमुदधिमिव ध्वान्तराशिं पिबन्स्ता-

दौर्वः पूर्वोऽप्यपूर्वोऽग्निरिव भवदघप्लुष्टयेऽर्कावभासः ॥ २५

भिन्नमिति ॥ क्वचित् कुत्र प्रदेशे । अभिनवया रम्यया । विद्रुमाणां प्रवालानाम् । त्विषा कान्त्येव । अरुणस्य अनूरुः । भासा कान्त्या । भिन्नं युक्तम् । क्वचित् कुत्रचित् प्रदेशे नक्षत्राण्येव रत्नानि तेषां तद्युतयः । त्वंगत्यः गच्छन्त्यः । त्वंगत्यश्च ताः नक्षत्ररत्नद्युतयश्च, यद्वा त्वङ्गानि दीप्यमानानि च तानि नक्षत्ररत्नानि तेषां द्युतयः । तासां निकरः समूहः । तेन करालं अन्तरालं मध्यं यस्य सः, तम् । त्वङ्गन्नक्षत्र-द्युतिनिकरकरालम् । अन्तरालं मध्यम् । निर्गतः शेषः यस्यास्सा निःशेषा, कृष्णस्य कृष्णवर्णस्य श्रीःशोभा यस्य सः स न भवति नान्तर्निश्शेषा कृष्णश्रीः । अन्यत्र निर्गतः शेषो नान्तो यस्मात्सः निश्शेषश्चासौ कृष्णश्च नारायणश्च स न भवतीति नान्तर्निश्शेषकृष्णः तस्य । श्रीः लक्ष्मीः यस्य सः नान्तर्निश्शेषकृष्णश्रीः तां नान्तर्निश्शेषकृष्णश्रियम् । नञर्थस्य सुप्सुपेति समासः । ध्वान्तस्य अन्धकारस्य । राशिं उदधिमिव पिबन् पूर्वोऽपि

अपूर्वः और्वः अग्निरिव वडवाग्निरिव । अर्कविभासः सूर्यप्रकाशः । भवतां अघानां, प्लुष्टये दहनाय, प्लुष्टा दाहकत्वमस्मात् द्रातीति स्त्रियां तिङ् इति तिङ् प्रत्ययः, ष्टुत्वं च । स्तात् भवतु ॥ ३५

பிந்நம் பாலாருணஸ்ய
க்வசிதபிநவயா வித்ருமாணாம் த்விஷேவ
த்வங்கந்நக்ஷத்ர ரத்ந-
த்யுதிநிகரகராலாந்தராலம் க்வசிச்ச ।
நாந்தர்நிச்சேஷ க்ருஷ்ண-
ச்ரியமுததிமிவ த்யாந்தராசிம் பிபந்ஸ்தா-
தௌர்வ: பூர்வாப்யபூர்வோ-
(அ)க்நிரிவ பவதக ப்லுஷ்டயே(அ)ர்க்காவபாஸ: ॥

இந்தச் ச்லோகத்தால் 'இருள்' கூட்டத்திற்கு 'கடலை' உவமையாகக் கூறுகின்றார் கவி:

அருணோதய காலம், இருள் கூட்டம் விலகாத நேரம். ஆனால் அருணனுடைய ஒளி அதைத் தகர்த்துக் கொண்டிருக்கிறது. **अरुणस्य भासाभिन्नं**– ஒரு புறம் புதுமுளை கண்ட பவளம்போல கருப்பு நீங்காத சிவப்பாகக் காணப்படுகிறது. அந்தக் கடலின் மத்தியிலுள்ள அக்நி கொதித்து கடலுக்கு அடியில் கிடக்கும் ரத்தினங்கள் வெளிப்பட்டு, சில இடங்களில் ஒளி வீசுகிறது. கடலின் நடுவில் இருள் இருக்க முடியாதே! அங்கு சேஷ சயனத்தில்(அரவணையில்) கிருஷ்ணன் விளங்குவானே! என்று கேட்டால் - இந்த இருட்டுக் கூட்டம் என்ற கடலில் சேஷ சயனத்தில் கிருஷ்ணன் கிடையாது. அதனால் அது அபூர்வம்.

கடல் நீரைக் குடிப்பது 'படபாக்னி', இது சூரியனைப் போன்று பிரகாசமானது. அருணனுடைய பிரகாசமான ஒளியினின்றும் மாறுபட்டு, புதிய பவழம் போன்று மின்னுகின்ற நட்சத்திரங்கள் மங்கிய ஒளியை மையத்தில் கொண்டுள்ளது இருட்டுக் கூட்டம். சூரிய ஒளி என்னும்

அபூர்வமான அக்னி, இருள் கூட்டத்தைக் குடித்துவிடுகிறது. அத்தகைய சூரிய ஒளி என்னும் அக்னி உங்கள் பாபங்களைப் போக்கட்டும்

गन्धर्वैर्गद्यपद्यव्यतिकरितवचोहृद्यमातोद्यवाद्यै-
राद्यैर्यो नारदाद्यैर्मुनिभिरभिनुतो वेदवेद्यैर्विभिद्य ।
आसाद्यापद्यते यं पुनरपि च जगद्यौवनं सद्य उद्य-
न्नुद्द्योतो द्योतितद्यौर्द्यतु दिवसकृतोऽसाववद्यानि वोऽद्य ॥ ३६

गन्धर्वेति ॥ दिवसं करोतीति दिवसकृत तस्य, दिवसकृतः सूर्यस्य । यः उद्योतः प्रकाशः । आदौ भवाः आद्याः तैराद्यैः नारदाद्यैः तुम्बुरुनारदप्रमुखैः, वेदवेद्यैः वेदविद्भिः गन्धर्वैः मुनिभिः गद्यपद्यैः । व्यतिकरितानि मिश्रितानि च वचांसि । तैः हृद्यानि यस्मिन् कर्मणि तत् । आतोद्यवाद्यैः[1] मुरजादिभिः वाद्यैः, विभिद्य विचार्य, अभिनुतः नुतः, जगत्रयं उद्योतम् । आसाद्य प्राप्य । पुनरपि, यूनः भावः यौवनं, आपद्यते प्राप्नोति । अद्य सम्प्रति, उदयन्, द्योतिता प्रकाशिता द्यौः आकाश येन सः । दिनकृतः असौ । वः युष्माकं, अवद्यानि पापानि, सद्यः द्यतु खण्डयतु ॥

கந்தர்வை: கத்ய பத்ய
வ்யதிகரிதவசோ ஹ்ருத்யமாதோத்யவாத்யை:
ஆத்யைர்யோ நாரதாத்யை:
முநிபிரபிநுதோ வேதவேத்யைர் விபித்ய ।

---

1. आतोद्यवाद्यम् चतुर्विधम् । तत वितत घन आनद्धं सुषिरमिति । ततं वीणादिकम् । विततं घनं कांस्यं तालादिकम् । घनं आनद्ध मुरजादिकम् । सुषिर वंशादिकम् । इति त्रिभुवनपाल कृत सूर्यशतकटीकायां दृश्यते ।

ஆஸாத்யாபத்யதே யா

புநரபி ச ஜகத்யௌவநம் ஸத்ய உத்யந்-

உத்யோதோ த்யோதிதத்யௌ: த்யது

திவஸக்ருதோ(அ)ஸாவவத்யாநி வோத்ய ॥ 36

சூரியனின் புதிய ஒளியைக் கண்ட கந்தர்வர்கள் மகிழ்ச்சியால் சூரியனைத் துதித்து வாத்தியங்களுடன் புகழிசை பாடுகின்றனர் என்கிறார் கவி.

எவனுடைய ஒளி பெற்று உலகம் அன்றாடம் உற்சாக மிக்க யௌவனப் பருவத்தை எய்துகின்றதோ அவன், இனிமையான சொற்களைக் கொண்டு புனைந்த உரைநடையாலும், செய்யுட்களாலும், இன்னிசைக் கருவிகளுடன் கந்தர்வர்களால் துதிக்கப் படுகின்றான். வேதங்களில் வல்லவர்களான தும்புரு நாரதாதி முனிவர்களால் துதிக்கப் படுகின்றவனும், ஆகாசத்தில் பிரகாசிப்பவனுமான சூரியனின் புத்தம் புதிய (அப்பொழுது தோன்றிய) ஒளி உலகைப் புதிய யௌவனப் பூரிப்புடன் விளங்கச் செய்கிறது. அது உங்களுடைய பாவங்களை அழிக்கட்டும்.

இந்த சுலோகத்தில் 'ஆதோத்ய வாத்யை.' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது 'ஆதோத்ய வாத்யம்' என்பவை (விரல்களால் இயக்கப்படுபவை) நான்கு வகைப் படும். அவையாவன: ததம், விததம், ஆனத்தம், சுஷிரம் எனப்படும். ததம் - தந்தி வாத்யங்கள் வீணை, தம்பூர் முதலியன. விததம் - ஜாலர். சதங்கை முதலியன. (உலோக வாத்யங்கள்). ஆனத்தம் - முரசு, மத்தளம் போன்ற தோற் கருவிகள், சுஷிரம் - புல்லாங்குழல், நாகஸ்வரம் போன்ற துளைக்கருவிகள் என்று இந்த நூலுக்கு உரை எழுதிய உரையாசிரியர் த்ரிபுவனபாலர் குறிப்பிட்டுள்ளார்.

त्वावानैश्चन्द्रकान्तैश्च्युततिमिरतया तानवात्तारकाणा-

मेणाङ्कालोकलोपादुपहततमसामोषधीनां लयेन ।

आरादुत्प्रेक्ष्यमाणा क्षणमुदयतटान्तर्हितस्याहिमांशो-
राभा प्राभातकी वोऽवतु न तु नितरां तावदाविर्भवन्ती ॥ ३७

लावानैरिति ॥ लावानैः ईषच्छुष्कैः चन्द्रकान्तैः मणिभिः, च्युत नष्टं, तिमिरं यस्यास्सा, च्युततिमिरातस्याः भावस्तत्ता, तया च्युततिमिरतया, आरात् दूरात्, उत्प्रेक्ष्यमाणा ऊह्यमाना । तारकाणां तानवात् अल्पीभावात् । एणः अङ्को यस्य सः एणाङ्कः चन्द्रः, कुरङ्गलाञ्छनः इत्यर्थः । तस्यालोकः प्रकाशः तस्य लोपात् नाशात् । उपहतं नष्टं तमः अन्धकारो याभिस्ताः उपहततमसः, तासां उपहततमसां । ओषधीनां तृणज्योतिषां लयेन नाशेन । तु शब्दः समुच्चये । दूरादुत्प्रेक्ष्यमाणा नितरामत्यर्थं तावदाविर्भवन्ती यावत् । सूर्यः उदयेन गच्छतीति शेषः । क्षणं उदयत्यस्मादिति अस्मिन्निति वा उदयः उदयपर्वतः । तस्य तटैः सानुभिः । अन्तर्हितस्य व्यवहितस्य । अहिमाः उष्णाः, अंशवो यस्य सः अहिमांशुः सूर्यः । तस्याऽहिमांशोः, आभा प्रभा सम्बन्धीति प्रभा । वः युष्मान् । अवतु रक्षतु ॥ ३७

லாவாநைச்சந்த்ரகாந்தை:
ச்யுததிமிரதயா தாநவாத்தாரகாணாம்
ஏணாங்கா லோகலோபாத்
உபஹத தமஸாம் ஓஷதீநாம் லயேந ।
ஆராத் உத்ப்ரேக்ஷ்யமாணா
க்ஷணமுதயதட அந்தர் ஹிதஸ்யா ஹிமாம்சோ:
ஆபா ப்ராபாதகீ வோ
அவது ந து நிதராம் தாவதாவிர் பவந்தீ ॥ 37

இந்தச் சுலோகத்தின் பொருளுக்குச் சாவி — உத்ப்ரேக்ஷ்யமாணா (उत्प्रेक्ष्यमाणा) என்ற சொல்லில் உள்ளது. ஒரு எதிர் பார்வையை ரஸமாகக் கூறுகிறார் கவி.

ரயில் நிலையத்தில் காத்திருக்கும் மக்கள் வண்டி வருகிறதா ? என எட்டியெட்டிப் பார்க்கிறார்கள். இதோ மணி அடித்துவிட்டான். அதோ தூரத்திலுள்ள 'கை' இறங்கிவிட்டது. பச்சைக்கொடி காட்டப்படுகிறது. அதோ ... அதோ ... புகைமண்டலம் தெரிகிறது. ரயில் வண்டி வருகிறது என்று மக்கள் குதூகலப்படுவதைப் போல —

சந்திரன் ஒளி மங்குவதால் சந்திரகாந்தக் கற்களில் நீர் கசிவது நின்றுவிட்டது. இருள் மறைவதால், இருளில் பிரகாசிக்கின்ற நட்சத்திரங்கள் பொலிவிழக்கின்றன. நிலவொளி மறைந்தேவிட்டது. இரவில் துளிர்க்கின்ற மூலிகைகள் வாடுகின்றன. அதோ உதய மலைக்கப்பால் மறைந்துள்ள சூரியனின் முன்னொளி காலையில் உண்டாகிறது. இத்தகைய காலையொளி உங்களைக் காக்கட்டும்.

சூரியகாந்தக் கல் சந்திரகாந்தக் கல் என்ற இரண்டு வகையான கற்கள் இருந்ததாக இலக்கியங்களில் காணப்படுகின்றன. சூரியனின் வெப்பத்தால் சூரிய காந்தக் கற்கள், வெப்பத்தை - உஷ்ணத்தைப் பெருக்குமென்றும், சந்திரனின் ஒளியால் சந்திரகாந்தக் கற்கள் குளிர்ந்த நீர்ப் பெருக்கை உண்டு பண்ணும் என்றும் கூறும், சூரியோதய காலத்தில் சந்திர காந்தக் கல் நீரைப் பெருக்காது என்றும் நூல்களில் காணப்படும் செய்தியாகும்.

सानौ सा नौदये नारुणितदलपुनर्यौवनानां वनाना-
माली मालीढपूर्वा परिहृतकुहरोपान्तनिम्ना तनिम्ना ।
मा वो भात्त्वोपशान्ति दिशतु दिनपतेर्भासमानाऽसमाना
राजी राजीवरेणोः समसमयमुदेतीव यस्या वयस्या ॥ ३८

सानाविति ॥ राजीवानां पद्मानां रेणवः परागाः यस्य सः रजीवरेणुः तस्य । दिनपतेः सूर्यस्य तस्य भासः राजिः श्रेणिः वयस्येव सखीव

समसमय: कालो यस्मिन्कर्मणि तत् । उदेतीव । औदये उदयपर्वत-
सम्बन्धिनि सानौ वप्रे अरुणितैर्लोहितैः दलैः पर्णैः पुनर्यौवनं येषां तानि
अरुणितदलपुनर्यौवनानां वनानां, आलीं पङ्क्तिं आलीढपूर्वा स्पृष्टपूर्वा पूर्व-
स्पृष्टेति यावत् । नेति । किन्तु आलीढपूर्वा । द्वौ नञौ प्रकृतमर्थं
गमयतः । तनोर्भावः तनिमा तेन तनिम्ना अल्पत्वेन । परिहृतानि
त्यक्तानि कुहराणि उपान्तानि पार्श्वाणि, निम्नानि निम्नस्थलानि, यया सा
परिहृतकुहरोपान्तनिम्ना भासमाना । विद्यते समाना यस्यास्सा, असमाना ।
दिनपतेः । भा: भासः । वः युष्माकं, भावः चित्तं तस्या उपशान्तिं
दिशतु ददातु ॥ ३८

ஸாநௌ ஸா நௌதயே
    நாருணிததலபுநர் யௌவநாநாம் வநாநாம்
ஆலீமாலீடபூர்வா பரிஹ்ருத-
    குஹரோபாந்தநிம்நா தநிம்நா ।
பா வோ பாவோபசாந்திம்
    திசது திநபதேர் பாஸமாநா(அ)ஸமாநா
ராஜீ ராஜீவரேணோ:
    ஸமஸமயமுதேதீவ யஸ்யா வயஸ்யா ॥ 38

சூரியனின் முன்னொளி பெற்ற துளிர்கள் யௌவனத்தை அடைகிறது என்கிறார் கவி:

சூரியனின் முன்னொளி பரவி, காட்டிலுள்ள மரங்களின் துளிர்கள் புத்தொளி பெற்று யௌவன மெருகு பெருகின்றன. இந்த ஒளி இடுக்குகளெங்கும் பரவி, அவற்றின் ஆழத்தைப் புலப்படுத்துகிறது. அந்த ஒளிக்குத் தோழி போல தாமரைகளின் மகரந்தப்பொடிகளின் இழைகள் அப்போதுதான் துளிர்க்கின்றன. அத்தகைய தோழியுடன் கூடிய சூரியனின் முன்னொளி உங்களுக்கு 'இல்லை' என்று சொல்வராதவாறு செழுமை அளிக்கட்டும்.

இந்த ச்லோகம் ஒவ்வொரு பாதத்திலும் முதற் சொற்கள் இரட்டிப்பாகி - யமகாலங்காரம் என்ற சொல்லணியினால் அழகு பெறுகிறது.

उज्जृम्भाम्भोरुहाणां प्रभवति पयसां या श्रियै नोष्णतायै
पुष्णात्यालोकमात्रं न तु दिशति दृशां दृश्यमाना विघातम् ।
पूर्वाद्रेरेव पूर्वं दिवमनु च पुनः पावनी दिङ्मुखाना-
मेनांस्यैनी विभासौ नुदतु नुतिपदैकास्पदं प्राक्तनी वः ॥ ३९

उज्जृम्भेति ॥ या इनः सूर्य, "इनः सूर्योऽर्यमा" इत्यमरः । इनस्य इयमिति ऐनी सूर्यसम्बन्धिनी विभा दीप्तिः । उज्जृम्भानि विकासितानि अम्भोरुहाणि येषां तानि तेषां उज्जृम्भाम्भोरुहाणां पयसां श्रियै शोभायै प्रभवति न उष्णतायै । दृश्यमाना दीप्तिः दृशां लोचनानां आलोकमात्रं पुष्णाति । विघातं दृष्टिनाशं न तु दिशति, पूर्वाद्रेरुदयाद्रेरेव । पूर्वं प्रथमं पावनी पवित्रीकरणं दिवमनुदिवमुद्दिश्य प्राक्तनी च । चकारः समुच्चये । वः युष्माकम् । एनांसि पापानि नुदतु अपसरतु[1] ॥ ३९

உஜ்ரும்பாம்போருஹாணாம்
ப்ரபவதி பயஸாம் யா ச்ருயை நோஷ்ணதாயை
புஷ்ணாத்யாலோகமாத்ரம்
ந து திசதி த்ருசாம் த்ருச்யமாநா விகாதம் ।
பூர்வாத்ரேரேவ பூர்வம்
திவமநு ச புந: பாவநீ திங்முகாநாம்
ஏநாம்ஸ்யைநீ விபாஸெள
நுதது நுதிபதைகாஸ்பதம் ப்ராக்தநீ வ: ॥ 39

---

1. अपूर्तिः

சூரியனின் முன்னொளி உலகுக்கு அழகு மட்டுமா கொடுக்கிறது? பவித்திரத்தையுமல்லவா கொடுக்கிறது!

சூரியனின்முன் ஒளியினால் தாமரைகள் மலர்கின்றன. இதனால், தாமரைகளைத் தாங்கி நிற்கும் தடாகங்கள் — பொய்கைகள் அழகு பெறுகின்றன. சூரியனின்முன் ஒளி தாமரையை மட்டும் மலரச் செய்கின்றதே தவிர, வெப்பமின்மையால் பொய்கைக்கு எந்தவிதமான பாதிப்பையும் (துன்பத்தையும்) ஏற்படுத்துவதில்லை. அதுபோல, சூரியனின் முன் ஒளி பொருளைப் பார்ப்பதற்கு வேண்டிய வெளிச்சத்தைத் தருகிறதே தவிர, கண் பார்வையைத் தடை செய்வதில்லை. உதயகிரியிலிருந்து உதிக்கும் சூரியன் தனது முன் ஒளியினால் முதலில் கீழ்த்திசை மலையையும், பிறகு விண்ணையும், எண் திசைகளையும் பவித்திரமாக— தூய்மையாகச் செய்கிறான். துதிப்பாடல்களுக்குரியவனான சூரியனின் முன் ஒளி உங்களது பாபங்களை நீக்கட்டும்.

वाचां वाचस्पतेरप्यचलभिदुचिताचार्यकाणां प्रपञ्चै-
वैरिञ्चानां तथोच्चारितरुचिमदृचां चाननानां चतुर्णाम् ।
उच्येतार्चासु वाच्यच्युतिशुचि चरितं यस्य नोच्चैर्विविच्य
प्राच्यं वर्चश्चकासच्चिरमुपचिनुतात्तस्य चण्डार्चिषो वः ॥ ४०

वाचामिति ॥ अच्यं निदानस्य । च्युतिः नाशः । तेन शुचि निर्मलं यस्य । चण्डार्चिषः सूर्यस्य, चरितं चेष्टितम् । अचलान् पर्वतान् भिनत्ति इति अचलभित् इन्द्रः तेन उचितं अभ्यस्तं आचार्यकं आचार्यत्वं यासां ताः तासामचलभिदुचिताचार्यकाणाम् । वाचस्पतेरपि वाचाम् । प्रपञ्चैः विस्तारैः । अर्चासु पूजासु । विविच्य पृथक्कृत्य । उच्येत । तथा । रुचिरासामस्तीति रुचिमत्यः रुचिमत्यश्च ताः, ऋचश्च । उच्चारिताः

रुचिमद्वचो याभिस्ताः तासां उच्चारितरुचिमद्वचाम् । विरिञ्चिः ब्रह्मा । "विरिञ्चिः कमलासनः" इत्यमरः । तस्येमानि वैरिञ्चानि तेषां वैरिञ्चानां चतुर्णां आननानां, प्रपञ्चैः विस्तारैः । विविच्य नोच्येत । चकासत् दीप्यमानम् । प्राचिभवं प्राच्यं तस्य । चण्डार्चिषः सूर्यस्य । उच्चैः वर्चः तेजः । वः युष्मान् । चिरं बहुकालम् । उपचिनुतात् वर्धयतु ॥ ४०

வாசாம் வாசஸ்பதேரப்யசலபிதுசித்-
ஆசார்யகாணாம் ப்ரபஞ்சை:
வைரிஞ்சாநாம் ததோச்சாரிதருசிமத்ருசாம்
சாநநானாம் சதுர்ணாம் ।
உச்யேதார்சாஸு வாச்யச்யுதிசுசி சரிதம்
யஸ்ய நோச்சைர்விவிச்ய
ப்ராச்யம் வர்சச்சகாஸத்
சிரமுபசிநுதாத்தஸ்ய சண்டார்ச்சிஷோ வ: ॥ 40

சூரியனின் புகழை யாரே கூறவல்லார்? சூரியனின் முன்னொளி மட்டுமே கூறவல்லது என்பதை இக்கவிதையால் விளக்குகிறார் கவி.

சூரியனின் சரித்திரத்தை யாரே வர்ணிக்கவல்லார்? தேவகுரு பிரஹஸ்பதி வர்ணிக்கலாம் என்றால், அவரோ மலைகளை உடைக்கின்ற முரட்டுப் புத்தியுள்ள இந்திரனுக்குத்தான் போதிக்க வல்லவர். நுண்ணிய கருத்துக்களைச் சொல்வாரோ? மாட்டாரோ? மேலும், பிரம்மதேவனுக்கு நான்கு வாய்கள் அவை ஒரே வேதத்தைச் நான்கு விதமாக உச்சரிக்கின்றன. அவற்றில் சூரியனுடைய சரித்திரத்தையோ சொற்பிழையின்றிக் கூறவேண்டும்! அவரால்கூட விளக்கமாக, சூரிய சரிதத்தைச் சொல்ல முடியாது. சூரியனுடைய "முன்காலை ஒளி" மட்டுமே அதை விளக்கமாகக் கூறமுடியும். அத்தகைய முன்காலை ஒளி உங்கள் அறிவைப் பெருக்கட்டும்.

मूर्धन्यद्रेर्धातुरागस्तरुषु किसलयो विद्रुमौघः समुद्रे
दिङ्मातङ्गोत्तमाङ्गेष्वभिनवनिहितः सान्द्रसिन्दूररेणुः ।
सीम्नि व्योम्नश्च हेम्नः सुरशिखरिभुवो जायते यः प्रकाशः
शोणिम्नासौ खरांशोरुषसि दिशतु वः शर्म शोभैकदेशः ॥ ४१

मूर्ध्नीति ॥ शोभायाः एकदेशो यस्य सः शोभैकदेशः, अत्यल्पदीप्तिरित्यर्थः । खरांशोः सूर्यस्य असौ यः प्रकाशः । उषसि प्रभाते, व्योम्नः आकाशस्य सीम्नि हेम्नः सुवर्णसम्बन्धिनः सुरशिखरी मेरुः तस्य, भुवः भूमिः, स्थलं तस्याः सुरशिखरिभुवः सुमेरुप्रदेशात् । शोणिम्ना लोहितत्वेन, अद्रेः पर्वतस्य, मूर्ध्नि शिरसि, धातोः रागः, तरुषु किसलयः, समुद्रेऽब्धौ "समुद्रोऽब्धिरकूपार" इत्यमरः । विद्रुमाणामोघः समूह इव मतङ्गाज्जाताः मातङ्गाः दिक्षु मातङ्गाः गजाः तेषां, उत्तमाङ्गेषु मूर्धसु, अभिनवं प्रत्यग्रं यथा भवति तथा, निहितः क्षिप्तः सान्द्रसिन्दूररेणुरिव, जायते । इवशब्दाभावाल्लुप्तोपमा । सः वः युष्माकं, शर्म शिवं, मङ्गलं, दिशतु ददातु ॥ ४१

மூர்த்நயத்ரே: தாதுராக: தருஷு கிஸலயோ
வித்ருமௌக: ஸமுத்ரே
திங்மாதங்க உத்தமாங்கேஷு
அபிநவநிஹித: ஸாந்த்ர ஸிந்தூரரேணு: ।
ஸீம்நி வ்யோம்நஶ்ச ஹேம்ந:
ஸுரசிகரிபுவோ ஜாயதே ய: ப்ரகாச:
சோநிம்னாஸௌ கராம்சோருஷஸி
திசது வ: சர்ம சோபைக தேச: ॥ 41

செவ்விய ஒளிக்கிரணங்களால் திசையெங்கும் சிவந்து காணப்படுகின்றது. தனக்குத் தெரிந்த சிவப்பு வண்ணப் பொருட்களுடன் இந்தச் சூரியனின் செம்மை வண்ணத்தை யும் ஒப்பிட்டுப் பார்க்கிறார் கவி. எந்தப் பொருட்களும் இதற்கு ஒப்புமையாகவில்லை என்று தெளிந்தார். அவர் ஒப்புமையாகச் சுட்டும் பொருட்களின் வரிசையை இந்தச் சுலோகத்தால் அறியலாகும்.

காலை இளஞ்சூரியன் தனது செவ்வொளியை எங்கும் பரப்பி, உலகையே அழகுறச் செய்கிறார். அவனது செவ்வொளியின் ஒருபகுதி மேலேபடுவதின் காரணமாக மேருமலையில் காணப்படும் நற்செங்கற்பொடியும், மரம், செடி, கொடிகளில் அரும்பும் இளந்தளிர்களும், கடலில் விளையும் பவழங்களும், திசை யானைகளின் மத்தகங்களில் அர்ச்சிக்கப்பட்ட சிந்தூரமும், மேருமலையின் முகட்டில் காணப்படும் தங்கப் பாளங்களும், தமது வண்ணங்களை ஒளிமயமாக்கிக் கொள்கின்றன. அத்தகைய சூரியனின் செவ்வொளியின் ஒருபகுதி அனைத்து மங்களங்களையும் நல்கட்டும்.

இங்கு சுட்டப்படும் நற்செங்கற்பொடி, இளந்தளிர், நற்பவழம், யானைகளின் மத்தகங்களில் தூவப்படும் சிந்தூர வண்ணப்பொடி ஆகியவை தனித்தனியே ஒவ்வொரு அழகைக் கொடுக்கும் செம்மை வண்ணத்தைக் கொண்டவை. எனினும், ஒவ்வொன்றின் காந்தியும் (ஒளியும்) சூரியனின் ஒளியினால்தான் பொலிவு பெறு கின்றன. இத்தகைய செம்மை வண்ணங்களின் சமஷ்டி யானது சூரியனின் அழகிய செவ்வொளி எனக் குறிப்பிடு கிறார் கவி.

अस्ताद्रीशात्चमाङ्के श्रितशशिनि तमःकालकूटे निपीते
याति व्यक्तिं पुरस्तादरुणकिसलये प्रत्युषः पारिजाते ।

उद्यन्त्यारक्तपीताम्बरविशदतरोद्वीक्षिता तीक्ष्णभानो-

लक्ष्मीर्लक्ष्मीरिवास्तु स्फुटकमलपुटोपाश्रया श्रेयसे वः ॥ ४२

சூரியன் தனது கிரணங்களால் இருளை அழித்து ஒளியை உலகினுக்குத் தருகிறான். இவனுக்குச் சமமாக உலகில் ஒருவருமில்லை. இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட சூரியன் அமர்வதால் அவனுடைய தேர் தனிச் சிறப்பைப் பெறுகிறது. இத்தகைய தேர் விண்ணில் பாய்ந்து செல்லும் போது அங்குள்ள காற்று மண்டலத்தை அழுத்திக்கொண்டு செல்கிறது. அந்தக் காற்று மண்டலத்தில் ஏழு வகைத் தன்மையுடைய சிறிய காற்று மண்டலங்கள் (ஸ்கந்தங்கள்) இருக்கின்றன. அவை முறையே (आवहः, प्रवहः, विवहः, परावहः, संवहः, उद्वहः, परिवहः) ஆவஹ:, ப்ரவஹ:, விவஹ:, பராவஹ:, ஸம்வஹ:, உத்வஹ: பரிவஹ: என அழைக்கப்படுகின்றன. சூரியனுடைய ரதம் இந்த ஸ்கந்தங்களில் மாறி மாறி மிதந்து செல்கிறது. ஸ்கந்தம் என்றால் தோளுக்கும் பெயர். சுமக்கமுடியாத பெரும் பாரமுடைய பொருளை 'பாரம் சுமப்பவர்கள்' ஒருவர்க்கொருவர் தமது தோள்களில் மாற்றி மாற்றிச் சுமந்து செல்வது போல இந்த ஏழு மருத்துக்களும் (காற்றும்) சூரியனுடைய ரதத்தைச் சுமந்து செல்வதாகக் கவி உலகியல் நிகழ்ச்சியை ஒப்புமைப்படுத்திக் காட்டுகிறார்.

योक्त्रीभूतान्युगस्य ग्रसितुमिव पुरो दन्दशूकान्दधानो
द्वेधा व्यस्ताम्बुवाहावलिविहितबृहत्पक्षविक्षेपशोभः ।
सावित्रिः स्यन्दनोऽसौ निरतिशयरयप्रीणितानूरुरेनः
क्षेपीयो वो गरुत्मानिव हरतु हरीच्छाविधेयप्रचारः ॥ ६४

आधानेन सूर्यरथस्य गरुडेन साम्यमुच्यते योक्त्रीभूतानिति ॥

युगस्य रथयुग्मस्य । योक्त्रीभूतान् बन्धनरश्मीभूतान्, दन्दशूकान् सर्पान्, ग्रसितुं अत्तुमिव । पुरतः अग्रे । दधानः । अन्यत्र, दन्दशूकान् ग्रसितुं पुरतः मुखे दधानः द्वेधा व्यस्ता द्विधा भविता अम्बूनि वहन्तीति अम्बुवाहाः मेघाः तेषां आवलिः पङ्क्तिः, द्वेधाव्यस्ता च सा अम्बुवाहावलिश्च तया । विहिता कृता, बृहतोः पक्षयोः विक्षेपः कम्पनः तस्य शोभा यस्य सः द्वेधाव्यस्ताम्बुवाहावलिविहितबृहत्पक्षविक्षेपशोभः । अन्यत्र बृहत्पक्षविक्षेपशोभः । निरतिशयेन अतिमहता रयेण वेगेन प्रीणितः अनूरुः येन सः, निरतिशयरयप्रीणितानूरुः । उभयत्र समानम् । हरीणां अश्वानां इच्छया विधेयः प्रचारः संसारो यस्य सः हरीच्छाविधेयप्रचारः ॥

अन्यत्र, विष्णोरिच्छाविधेयप्रचारः गरुत्मानिव स्थितः । असौ सवितुरयं सावित्रः । "तस्येदं इत्यण्" प्रत्ययः । तद्धितेष्वचामादेः इति वृद्धिः, इकोयणचि यणादेशः । रथः क्षेपीयः क्षिप्रतरं क्षिप्रशब्दात् द्विवचनेत्यादिना ईयसुन्प्रत्ययः । स्थूलहरेत्यादिना पूर्वस्य गुणः परस्य यणादेर्लोपः । युष्माकं एनः पापं हरतु ॥ ६४

யோக்த்ரீ-பூதாந்-யுகஸ்ய க்ரஸிதுமிவ
புரோ தந்தசூகாந்த தாநோ
த்வேதா வ்யஸ்தாம்பு-வாஹாவலி-
விஹித-ப்ருஹத்-பக்ஷ-விக்ஷேப-சோப: ।
ஸாவித்ரீ: ஸ்யந்தநோ(அ)ஸௌ
நிரதிசயரய-ப்ரீணி-தா்நூரு: ஏந: -
க்ஷேபீயோ வோ கருத்மாந்-இவ
ஹரது ஹரீச்சா-விதேய-ப்ரசார: ॥ 64

இந்த சுலோகத்தால் சூரியனின் ரதத்தையும், கருடனையும் ஒப்புமைப்படுத்திக் கவி கூறுகின்றார்.

தேரின் அமைப்பில் - நுகத்தடி நுனியை - படமெடுத்தாடும் நாகம்போல் அமைத்துக் கலையழகு கூட்டுவது வழக்கம். அது எதிர்ப்படும் காற்றை விழுங்குகிறது போலும். நாகங்கள் வாதாசனங்கள். அவற்றிற்கு வாயுவை விழுங்கும் தன்மையுண்டு. தேரின் நுகத்தடி தோல் கயிறால் கட்டியிருப்பது போல பாம்பால் கட்டப் பட்டிருப்பதும், வானில் தவழும் மேகக் கூட்டத்தைப் பிளந்துகொண்டு வேகமாகச் செல்வதால் அத்தேரின் இரு மருங்கிலும் இறக்கைகள் முளைத்திருக்கின்றன போலும். எல்லையற்ற வேகத்தைக் கொண்டிருப்பதால் அருணனை மகிழ்விக்கின்றன போலும், தேர்க் குதிரைகளின் விருப்பத் திற்கேற்ற போக்கையுடையதுமான சூரியனின் ரதம் உங்களின் பாபக் கூட்டத்தைப் போக்கட்டும்.

இந்தச் சுலோகம் ச்லேஷாலங்காரமாக இயற்றப் பட்டுள்ளது. கருடன் போல ரதம் செல்கிறது என்று கூறும் கவி ரதத்திற்குரிய அடைமொழிகளை கருடனுக்கும் பொருந்துமாறு அமைத்திருக்கிறார். கருடன் தன் அலகு நுனியில் ஒரு பாம்பைக் கவ்விக்கொண்டிருப்பான். ரதத்தினுடைய இரண்டு பக்கங்களிலும் எதிர்ப்படும் மேகக் கூட்டங்களை அசைகின்ற இறக்கைகளைப்போல உள்ளன. எல்லையற்ற வேகத்தையுடையதால் (தன் தமையனான) அருணனை திருப்தி செய்விக்கிறான் கருடன்,

(மஹாவிஷ்ணுவின் வாஹனமாக இருப்பதால்) விஷ்ணுவின் விருப்பத்திற்குத் தக்கபடி தனது போக்கையுடையவன் கருடன்.

एकाहेनैव दीर्घां त्रिभुवनपदवीं लङ्घयन् यो लघिष्ठः
पृष्ठे मेरोर्गरीयान् दलितमणिदृषत्त्विषि पिषन्शिरांसि ।
सर्वस्यैवोपरिष्टादथ च पुनरधस्तादिवास्ताद्रिमूर्ध्नि
ब्रध्नस्याव्यात्स एवं दुरधिगमपरिस्पन्दनः स्यन्दनो वः ॥ ६५

एकाहेनेति ॥ यः स्यन्दनः एकं च तत् अहश्च एकाहः, एकाहेनैव । "राजाहस्सखिभ्यष्टचिति टच् प्रत्ययः" । दीर्घां त्रिभुवनपदवीम् । लङ्घयन् अतिक्रमन् । अतिशयेन लघुः, लघिष्ठः अतिशायने तमबिष्ठनौ इति इष्ठन् प्रत्ययः । मेरोः पृष्ठे दलितमणिमयाश्च ताः दृषदश्च तासां त्विषः दलिताः चूर्णिताः मणिदृषत्त्विषो येषु तानि दलितमणिदृषत्त्विषि शिरांसि अश्वानामिति शेषः । पिषन् । गरीयान् गुरुतमः । यद्वा दलितानां-मणिदृषत्त्विषां येषु । सर्वस्य लोकस्यैव, उपरिष्टात् उपरि मेरोः, मूर्ध्नि अधश्च पुनः अस्ताद्रिमूर्ध्नि सर्वस्य लोकस्य अधस्तादिव स्थितः । दुरधिगमं दुर्विज्ञेयम् । परिस्पन्दनं चलनं यस्य सः दुरधिगमपरिस्पन्दनः । सः स्यन्दनः । वः युष्मान् । अव्यात् ॥ ६५

ஏகாஹேனைவ தீர்காம் த்ரிபுவந பதவீம்
லங்கயந் யோ லகிஷ்ட:
ப்ருஷ்டே மேரோர்கரீயாந்
தலிதமணி த்ருஷத்விஷி பிம்ஷந் சிராம்ஸி ।
ஸர்வஸ்யைவோபரிஷ்டாதத ச
புநரதஸ்தாதிவ - அஸ்தாத்ரிமூர்த்நி
ப்ரத்நஸ்ய-அவ்யாத்ஸ ஏவம்
துரதிகம பரிஸ்பந்தந: ஸ்யந்தநோ வ: ॥ 65

சூரியனின் தேர்வேகம், மற்றும் அதன் ஆற்றல் குறித்து வியந்து அதிசயிக்கிறார் கவி, இந்த சுலோகத்தால்:

சூரியனின் தேர் ஒரே நாளில் மூன்று உலகையும் சுற்றி வலம் வருகிறது. வெகுவேகமாக வலம் வருவதால் அந்தத் தேர் மிகவும் லேசாக இருக்கிறதோ? கனமற்றது என்று கருதினால் அந்த ரதம் மேருமலைச் சிகரங்களில் ரத்தினப் பாறைகளை (வைரமணிப் பாறைகளை) உடைத்துத் தூளாக்கி, வைரமணிகளைச் சிதறச் செய்கிறதே. வைரத்தையே தூளாக்குவதால் அந்த ரதம் கனமாகத்தானே இருக்க வேண்டும்? என்று கருதத் தோன்றுகிறது. மேலும், அகில உலகினுக்கும் மிக உயரமாக இருப்பது மேருமலை. அந்த மேருமலையின் சிகரங்களுக்கும் மேலே தாண்டுகிறதே. அஸ்தமன மலையோ தாழ்வானதாகை யால் அங்கு தாழ்ந்தும் செல்கிறதே! சூரியனின் தேர் மேலே உள்ளதா? அல்லது கீழே உள்ளதா? என்று புரியாமல் வியககவைக்கின்றது. இத்தகைய சிறப்புக்களை யுடைய சூரியனின் தேர் உங்களுடைய பாவங்களை நீக்கட்டும்.

धूर्ध्वस्ताग्र्यग्रहाणि ध्वजपटपवनान्दोलितेन्दूनि दूरं
राहौ ग्रासाभिलाषादनुसरति पुनर्दत्तचक्रव्यथानि ।
श्रान्ताश्वश्वासहेलाधुतत्रिबुधधुनीनिर्झराम्भांसि भद्रं
देयासुर्वो दवीयो दिवि दिवसपतेः स्यन्दनप्रस्थितानि ॥ ६६

धूर्ध्वस्ताग्र्यग्रहाणीति । धूर्नाम रथचक्रव्यवस्थितं अरम् । उक्तं च माघे "अक्षधूः स्यन्दनानामि"ति तया ध्वस्ताः प्रेरिताः । अग्र्याः श्रेष्ठा, ग्रहाः च यैस्तानि धूर्ध्वस्ताग्र्यग्रहाणि ग्रहगताः, सूर्यस्य सुखकारणस्य ध्वजस्य केतोः पवनो वायुः तेन आन्दोलितः प्रेरितः इन्दुर्यैस्तानि ध्वजपट-पवनान्दोलितेन्दूनि दूरं अत्यर्थं । राहौ स्वर्भानौ 'तमस्तु राहुः स्वर्भानुः'

इत्यमरः । ग्रासस्य अभिलाषात् अनुसरति अनुगच्छति सति, पुनर्दत्ता चक्रेण रथाङ्गेन व्यथा यैस्तानि दत्तचक्रव्यथानि, श्रान्ताश्च ते अश्वाश्च तेषां श्वासो निःश्वासः स एव हेला तया विधुतानि विबुधधुन्याः मन्दाकिन्याः निर्झराम्भांसि येषां ते श्रान्ताश्वश्वासहेलाधुत विबुधधुनीनिर्झराम्भसि । दवीयः दूरतरं दिवसपतेः सूर्यस्य दिवि स्यन्दनप्रस्थितानि रथगमनानि, वः युष्माकम् । भद्रं कल्याणम् । देयासुः ददतु ॥ ६६

தூர் - த்வஸ்தா - அக்ரய - கரஹாநி
த்வஜபட - பவந - ஆந்தோலித - இந்துநி தூராத்
ராஹௌ க்ராஸாபிலாஷாதநுஸரதி
புநர்தத்தசக்ரவ்யதாநி ।
ச்ராந்தாச்வ - ச்வாஸ - ஹேலா - துத - விபுத—
துநீ - நிர்ஜராம்பாம்ஸி பத்ரம்
தேயாஸுர்வோ தவீயோ திவி திவஸபதே:
ஸ்யந்தந ப்ரஸ்திதாநி ॥ 66

இந்த சுலோகத்தில் சூரியனின் ரதம் கிளம்புகின்ற விமரிசை வருணிக்கப்படுகிறது.

சூரியனின் தேர் ஆகாயமார்க்கமாக விரைந்து கிளம்புகிறது. அப்போது, தனது கொடிச் சேலைகளின் படபடப்பினால் ஆகாயத்தில் முன்னே செல்கின்ற புதன், செவ்வாய் முதலிய கிரஹங்களை உதறி, அகற்றி விலக்கிக்கொண்டு விரைந்து செல்கிறது. அப்போது அந்தக் கொடியிலிருந்து தோன்றும் காற்று சந்திரனையே ஊஞ்சலாட்டுவது போல மேலும் கீழும் தள்ளுகிறதாம். அது மட்டுமா? ராகு சூரியனை விழுங்கவருகிறான். அவனைத் தேரின் சக்கரங்கள் இழுத்து மசிக்கின்றன. சூரியனின் தேரில் பூட்டியுள்ள தேர்க்குதிரைகள் ஓடுகின்ற சிரமத்தினால் பெருமூச்சு விடுகின்றன. இந்த மூச்சுக்காற்று, மிகுந்த வேகம் கொண்ட ஆகாச கங்கையின் போக்கில் அலைமோதச் செய்கிறதாம்.

இத்தகைய சிறப்புடைய சூரியனின் தேரின் புறப்பாடு உங்களுக்கு அனைத்து மங்களங்களையும் அளிக்கட்டும்.

अक्षे रक्षां निबध्य प्रतिसरवलयैर्योजयन्त्यो युगाग्र
धूःस्तम्भे दत्तधूपाः प्रहितसुमनसो गोचरे कूबरस्य ।
चर्चाश्चक्रे चरन्त्यो मलयजपयसा सिद्धवध्वस्त्रिसन्ध्यं
वन्दन्ते यं द्युमार्गे स नुदतु दुरितान्यंशुमत्स्यन्दनो वः ॥ ६७

अक्ष इति ॥ यस्मिन्प्रोढचक्रं भ्राम्यति तदक्षं, रथावयवविशेषः, तस्मिन् अक्षे चिरभयसर्वापघ्नदूर्वाङ्कुरव्यतिषिक्तेन सूत्रेण रक्षां निबध्य, ऊर्णसूत्रमिश्रप्रतिसरवलयाः तैः प्रतिसरवलयैः । युगाग्रं योजयन्त्यः, धूस्तम्भे यस्मिन् प्रदेशे स्तम्भः स धूस्तम्भः उषापुगेबन्धनस्थानं तस्मिन् धूस्तम्भे दत्तः धूपो याभिः ताः, दत्तधूपाः । कूबरस्य रथमुखस्य गोचरे प्रहिताः विक्षिप्ताः, सुमनसः पुष्पाणि याभिः ताः प्रहितसुमनसः 'स्त्रियः सुमनसः पुष्प'मित्यमरः । मलयजेन पवनेन चण्डेन वारिणा चक्रे रथाङ्गे चर्चां पूजां दधत्यः सिद्धाः वध्वः सिद्धवध्वः, द्युमार्गे आकाशमार्गे, यं स्यन्दनं, त्रिसन्ध्यं सन्ध्यात्रये, वन्दन्ते स्तुतिं कुर्वन्ति । अंशुमत्स्यन्दनं सूर्यस्य रथः, वः युष्माकं, दुरितानि पापानि, नुदतु अपसरतु ॥ ६७

அக்ஷே ரக்ஷாம் நிபத்ய ப்ரதிஸரவலயை:
யோஜயந்த்யோ யுகாக்ர
தூ: ஸ்தம்பே தத்ததூபா: ப்ரஹிதஸுமநஸோ
கோசரே கூபரஸ்ய ।
சர்ச்சாச்சக்ரே சரந்த்யோ
மலயஜபயஸா ஸித்தவத்வ - ஸ்த்ரிஸந்த்யம்
வந்தந்தே யம் த்யுமார்கே ஸ நுதது
துரிதாநி அம்சுமத்-ஸ்யந்தநோ வ: ॥ 67

சூரியனின் தேரை, சித்த புருஷர்களின் மனைவியர் மூன்று காலங்களிலும் வழிபடுகின்றனர். அவர்கள் வழிபடும்போது தேரின் அச்சுகளில், மங்களங்களை நல்கும் ரக்ஷைக் கயற்றையும், அத்தேரின் நுகத்தடி நுணியில் 'ப்ரதிஸரம்' என்ற மங்கள சூத்திரத்தையும் கட்டுகிறார்கள். தேரின் துணையொத்திருக்கும் மரத்திலமைந்த சுமைக் காலில் சாம்பிராணி போட்டு தூபம் காட்டுகிறார்கள். அத்தேரின் நுகத்தடியில் மலர் சாத்துகிறார்கள் சந்தனக் குழம்பால் சக்கரத்தை அபிஷேகம் செய்கிறார்கள். இத்தகைய புனிதத் தன்மை வாய்ந்த சூரியனின் ரதம் உங்களுடைய பாவங்களை அழிக்கட்டும். धूःस्तम्भः என்றால் ரதத்தை பூட்டவிழ்த்து நிறுத்தி வைக்கும்போது முன்புறம் சாயாமல் இருப்பதற்காக நுகத்தடியின் கீழே வைக்கப் படும் சுமைக்கால் (முக்கணம்).

उत्कीर्णस्वर्णरेणुद्रुतखुरदलिता पार्श्वयोः शश्वदश्वै-
रश्रान्तभ्रान्तचक्रक्रमनिखिलमिलन्नेमिनिम्नाभरेण ।
मेरोर्मूर्धन्यधो वो विघटयतु रवेरेकवीथीरथस्य
स्वोष्मोदुक्ताम्बुरिक्तप्रकटितपुलिनोद्धूसरा स्वर्धुनीव ॥ ६८

अथ आकाशगङ्गायाः सूर्यरथवीथ्यासाम्यमुच्यते उत्कीर्णेति ॥

पार्श्वयोः उत्कीर्णः धूतः, स्वर्णरेणुः सुवर्णधूलिः यस्य सः उत्कीर्ण-स्वर्णरेणुः उभयत्र समानम् । शश्वत् प्रतिदिनम् । अश्वैः । कर्तृभिः द्रुताः वेगवन्तः ते च ते खुराश्च तैः करणैः । दलिता चूर्णिता उभयत्र समानम् । भरेण भारेण । आश्रान्तं अनवरतम् । भ्रान्तं घूर्णितं च तत् चक्रं च तस्य, क्रमं गतिं, तेन निखिलं सर्वं, मिलन्ती भूमौ निमज्जती सा च सा नेमिश्च तया निम्ना, आश्रान्तभ्रान्तचक्रक्रमनिखिलमिलन्नेमिनिम्ना । उभयत्र

समानम् । स्वस्य ऊष्मणा उद्गुक्तं उद्धूतं च तत् अम्बु तेन रिक्तं स्वोष्मोदुक्ताम्बुरिक्तं प्रकटितं पुलिनं यस्याः सा च सा उद्धूसरा पाण्डुरा स्वोष्मादुक्ताम्बुरिक्तप्रकटितपुलिनोद्धूसरा स्वर्धुनी आकाशगङ्गेव स्थिता । रवेः सूर्यस्य एका च सा वीथी च एकवीथी, मेरोः मूर्धनि शिरसि, वः युष्माकं, अघं पापं, विघटयतु विनाशयतु ॥ ६८

உத்கீர்ண – ஸ்வர்ணரேணு: – த்ருதகுரதலிதா
பார்ச்வயோ: சச்வதச்வை: -
அச்ராந்த - ப்ராந்தசக்ர - க்ரம-
நிகில-மிலந்நேமி-நிம்நா பரேண ।
மேரோர் – மூர்தன்யத்யம் வோ
விகடயது ரவே: – ஏகவீதீரதஸ்ய
ஸ்வோஷ்மோதுக்தாம்புரிக்த-
ப்ரகடித புலிநோத்தூஸரா ஸ்வர்துநீவ ॥ 68

பழங்காலத்துச் சாலைகளில் வண்டிகளின் சக்கரம் மண்ணில் ஆழப்பதிந்து, சுவடு போட்டிருக்கும். அதை மனதில்கொண்டு கவி இங்கே வர்ணிக்கிறார்.

சூரியனுடைய ரதத்திற்கு ஒரே சக்கரம்தான், அது மேரு பர்வதத்தின் முகட்டில் தினந்தோறும் செல்வதால் ஆழப் பதிந்து சுவடு போட்டிருக்கிறது அந்தச் சுவட்டின் முன்னே செல்லும் குதிரைகளின் குளம்படிகள் தங்கப் பாறைகளை உடைத்துத் தூளாக்க, அந்தத் தூள்கள் அச் சுவடுகளில் வீழ்கின்றன. ஓயாமல் ஓடிச் சுற்றுகின்ற கனமான தேர்ச்சக்கரத்தின் பதிவினால், பள்ளமாகிவிட்ட சுவடு எப்படி இருக்கின்றதென்றால், சூரிய வெப்பந்தாக்கி நீர்வற்றிப் போய் ஆழமான மணற் போக்குள்ள தேவ லோகத்துக் கங்கை போல் உள்ளது. அத்தகைய **रवेः रथस्य एकवीथी** ரதத்தின் ஒற்றைச் சுவடு உங்களுடைய பாபங்களை அகற்றட்டும்.

गन्तुं नाकालयानामनिशमनुयतां पद्धतिः पङ्क्तिरेव
क्षोदो नक्षत्रराशेः अकृशरथमिलच्चक्रपिष्टस्य धूलिः ।
हेषाह्लादो हरीणां सुरशिखरिदरीः पूरयन्नेमिनादो
यस्याव्यात्तीव्रभानोः स दिवि भुवि यथा व्यक्तचिह्नो रथो वः ॥

गन्तुमिति ॥ अनिशं सर्वदा । गन्तुं गमनागमनम् । अनुयतां प्राप्नुवताम् । नाकः आलयो येषां ते; तेषां नाकालयानां या पङ्क्तिः सैव, यस्य रथस्यपद्धतिः मार्गः । अकृशः प्रभूतः अकृशश्चासौरथश्च तेन मिलितं युक्तं च तत् चक्रं च तेन पिष्टं चूर्णितं तस्य अकृशरथमिलच्चक्रपिष्टस्य । नक्षत्रराशेः नक्षत्रसमूहस्य क्षोदः एव । जात्यामेकवचनम् । यस्य रथस्य धूलिः । सुरशिखरिणः मेरोः । दरीः पूरयन् । हरीणां अश्वानाम् । हेषैव ह्लादो नादो, यस्य रथस्य, नेमिः चक्रधारायाः सन्धिः "चक्रधारा प्रतिर्नेमिः" इत्यमरः । यथा दिवि व्यक्तं चिह्नं यस्य सः व्यक्तचिह्नः । तीव्रः भानुः यस्य, तस्य सूर्यस्य रथः । वः युष्मान् । अव्यात् पातु ॥ ६९

கந்தும் நாகாலயாநாம்—
அநிசமநுயதாம் பத்ததி: பங்க்திரேவ
க்ஷோதோ நக்ஷத்ரராசே:
அக்ருச ரதமிலச்சக்ரபிஷ்டஸ்ய தூலி. ।
ஹேஷா - ஹ்ராதோ ஹரீணாம்
ஸுரசிகரிதரீ: பூரயந்நேமிநாதோ
யஸ்யாவ்யாத்தீவ்ர - பாநோ: ஸ திவி புவி
யதா வ்யக்தசிந்நோ ரதோ வ: ॥ 69

மனிதர்கள் அடிக்கடி நடப்பதால் அவர்களது கால் பட்ட இடம் (புல்கூட முளைக்காமல் நடைபாதையாக) பூமியில் அடையாளமாக இருக்கும். தேவருலகில் வாழும்

தேவர்கள் சூரிய தேவனை எப்பொழுதும் வரிசையாக நின்று தொழுகின்றனர். அந்த தேவர்களின் வரிசையை வைத்தே 'இது சூரியனின் தேர்ப்பாதை' என்று அடையாளம் கண்டுவிடலாம். இது மட்டுமா? பூமியில் தேர் வேகமாக ஓடினால், அந்தத் தேருக்குப் பின் புழுதிப் படலம் வானில் காணுமல்லவா? இதைப்போலவே சூரியனின் தேர் சென்றபின் (மறைந்தபின்) தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டுப் பொடியான நக்ஷத்திரங்களே புழுதிப் படலமாகத் தெரிகிறது. சூரியனின் கனமான தேரை இழுத்துக்கொண்டு ஓடுகின்ற குதிரைகளின் கனைப்பும், இடியோசை போன்ற தேரொலியும் மேருமலையிலுள்ள குகைகளில் எதிரொலிக்குமாறு செய்யும் சூரியனின் ரதம் உங்களைக் காக்கட்டும்.

निःस्पन्दानां विमानावलिविततदिवां देववृन्दारकाणां
वृन्दैरानन्दसान्द्रोद्यममपि वहतां विन्दतां वन्दितुं नो ।
मन्दाकिन्याममन्दः पुलिनभृति मृदुर्मन्दरे मन्दिराभे
मन्दारैर्मण्डितारं दधदरि दिनकृत्स्यन्दनः स्तान्मुदे वः ॥ ७०

निष्पन्दानामिति ॥ यदि दिनकृत्स्यन्दनः सूर्यरथः, निष्पन्दानां निश्चलानां विमानानामावलयः ताभिः विततः आच्छादिता । द्यौः आकाशं यैः तेषां विमानानामावलिविततदिवाम् । आनन्देन हर्षेण सान्द्रः उद्यमः उद्योगो यस्मिन् कर्मणि तत् आनन्दसान्द्रोद्यमम् । वहतां प्राप्नुवतामपि, देववृन्दारकाणां देवश्रेष्ठानाम् । वृन्दैः वन्दितुं स्तोतुं विन्दतां न विजानतां रथमिति भावः । पुलिनं सैकतं बिभर्तीति पुलिनभृत् तस्यां पुलिनभृति मन्दाकिन्यां अमन्दः अतिजवः मन्दिराभे गृहोपमे मन्दरे मन्दरपर्वते, मृदुः मृदुगतिः, मन्दारैः मन्दारकुसुमैः, मण्डिताः विभूषिताः अराः शङ्कवो यस्य

तत् मण्डितारं अराः अस्य सन्तीति अरि, रथचक्रं दधत् सः दिनकरस्यन्दनः ।
वः युष्माकम् । मुदे स्तात् अस्तु ॥ ७०

நி: - ஸ்பந்தாநாம் விமாநாவலி-
விததிவாம் தேவவ்ருந்தாரகாணாம்
வ்ருந்தை: - ஆநந்த - ஸாந்த்ரோத்யமமபி
வஹதாம் விந்ததாம் வந்திதும் நோ ।
மந்தாகிந்யாம் - அமந்த: புலிநப்ருதி
ம்ருதுர்மந்தரே மந்திராபே
மந்தாரை: - மண்டிதாரம் தததரி
திநக்ருத் - ஸ்யந்தந: ஸ்தாந்முதே வ: ॥ 70

இந்த சுலோகத்தில் சூரிய ரதத்தின் வேகத்தைக் குறிப்பிடுகிறார்.

பெரிய மாடங்களைக் கொண்டு அதில் வாழும் தேவர்கள், மகிழ்ச்சி பொங்க சூரியனைக் கண்டு வணங்க விமானங்களில் செல்கின்றனர் ஆயினும். அவர்களால் வணங்க முடியாத எட்டத்தில் இருக்கிறான் சூரியன். காரணம், சூரியனின் ரதவேகமே. சூரிய ரதத்தைத் தொடர்ந்து தேவ விமானங்கள் செல்ல முடியாமல் அவை ஆங்காங்கே நின்றுவிடுகின்றன. இவ்வளவு வேகமுடன் செல்கின்ற ரதம் ஆகாச கங்கையான மந்தாகினி மணற்பரப்பில் கூட வேகம் குறையாமல் செல்லும்போதே நகரம் போலக் காணப்படும் மந்தர மலைக் குன்றின் முகடுகளிலும், குகைகளிலும் மெல்ல மெல்லச் செல்கின்றது. இத்தகைய சிறப்புடையதும் மந்தார மலர்களால் அலங்கரிக்கப்பட்டதுமான சூரியனின் ரதம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கட்டும்.

இங்கு விமானங்கள் போலவும், தெருக்கள் போலவுமிருப்பது மந்தர மலைக் குகைகளும், குன்றுகளும. பொதுவாக, ஒரு ரதம் நகரங்களில் செல்லும்போது, அங்கு காணப்படும் ஜன நெரிசலின் காரணமாகவும், குறுகிய

தெருக்களின் காரணமாகவும், மெல்ல மெல்லச் செல்லும். ஆயினும் அதே ரதம் ஜன சஞ்சாரமற்ற வெட்டவெளி களில் வேகமாகச் செல்லும். இதைக் கருத்தில் கொண்டு, ரத சஞ்சாரம், ஜன சஞ்சாரமற்ற மந்தாகினி மணற் பரப்பில், விரிந்துபடர்ந்தும்; மாடமாளிகை போலுள்ள மந்தர மலைக் குன்றுகளில் விரிந்து படர முடியாமலும் உள்ளது. இதனை மெல்ல மெல்லச் செல்லும் 'சூரிய ரதம்' என்று குறிப்பிடுகின்றார் கவி.

चक्री चक्रारपङ्क्तिर्हरिरपि च हरीन् धूर्जटिर्धूर्ध्वजान्ता-
नक्षं नक्षत्रनाथोऽरुणमपि वरुणः कूबराग्रं कुबेरः ।
रंह सङ्घः सुराणां जगदुपकृतये नित्ययुक्तस्य यस्य
स्तौति प्रीतिप्रसन्नोऽन्वहमहिमरुचेः सोऽवतात्स्यन्दनो वः ॥ ७१

चक्रीति ॥ जगतामुपकृतिः उपकारः तस्यै जगदुपकृतये । नित्ययुक्तस्य नित्योद्युक्तस्य स्यन्दनस्य । चक्रं अस्यास्तीति चक्री विष्णुः । चक्रे रथाङ्गे । अराणां पङ्क्तिः, स्तौति, हरिरपि इन्द्रोऽपि, हरिनश्वान् स्तौति । धूर्जटिः शिवः धूश्च ध्वजाश्च तेषां अन्ताः धूर्ध्वजान्तान् स्तौति । नक्षत्राणां नाथः यः स चन्द्रः, वरुणोऽपि अपि शब्दः समुच्चये । अरुणं स्तौति । कुबेरः कूबराग्रं उषा दण्डाग्रं स्तौति । सुराणां सङ्घः समूहः । रंहः वेगम् । स्तौति । प्रीत्या प्रसन्नः अहिमरुचेः सूर्यस्य स्यन्दनः, अन्वहं प्रतिदिनम् । वः युष्मान् । अवतात् रक्षतु ॥ ७१

சக்ரீ சக்ரார - பங்திঃ - ஹரிரபி ச
ஹரீந் தூர்ஜடிঃ - தூர்த்வஜாந்தாத்
அக்ஷம் நக்ஷத்ரநாதோ - அருணமபி
வருணঃ கூபராக்ரம் குபேரঃ ।

ரம்ஹ: ஸங்க: ஸுராணாம்

ஜகதுபக்ருதயே நித்யயுக்தஸ்ய யஸ்ய

ஸ்தௌதி ப்ரீதிப்ரஸந்ந: - அன்வஹம் -

அஹிமருசே: ஸோ(அ)வதாத் ஸ்யந்தநோ வ || 71

இந்த சுலோகமும் ரதவர்ணனையே. சொல்லலங்காரமாக இந்த சுலோகத்தின் பதங்கள் அமைக்கப்பெற்றுள்ளது தனிச்சிறப்பு.

தினந்தோறும், அனைத்துலகங்களுக்கும் நன்மையைச் செய்வதில் முழுமையாக ஈடுபட்டுள்ளது சூரியனின் ரதம். இத்தகைய சிறப்பு மிக்க சூரியனின் ரதத்தையும், அதன் உறுப்புக்களையும் தேவர்கள் துதித்து வழிபடுகின்றனர். குறிப்பாக, தேர்ச்சக்கரத்தை - விஷ்ணுவும்; இந்திரன் - குதிரைகளையும்; சிவபெருமான் - தேரின் நுகத்தடியில் பொருத்தப்பட்ட கொடிகளின் நுனியையும்; சந்திரன் - இருசுக்கட்டையை (அச்சு)யும்: வருணன் (சூரிய சாரதியான) அருணனையும்; குபேரன் ஏர்க்காலின் நுனியையும்; தேவர்கள் - தேரின் வேகத்தையும், துதித்து வணங்குகின்றனர். இத்தகைய சிறப்புமிக்க சூரியனின் தேர் உங்களைக் காக்கட்டும்.

இந்த சுலோகத்திலுள்ள பதங்கள் (சொற்கள்) யமகவணி என்ற சொல்லலங்காரத்தில் அமைந்துள்ளவை. இதில் கூறப்பட்டுள்ள தேவதைகளின் பெயர்களுக்கும், ரதத்தின் உறுப்புக்களுக்கும் உள்ள சொற்பொருத்தத்தை எடுத்துக் காட்டி, அவரவர்கள் அவ்வவற்றை வழிபடுவதாக அமைத்துள்ளார் கவி. உதாரணமாக 'ஹரி' என்ற சொல், இந்திரனையும், தேரில் பூட்டியுள்ள குதிரையையும், 'சக்ரீ' என்னும் சொல் விஷ்ணுவையும், தேர்ச்சக்கரத்தையும், குறிக்கும். இவ்விதமாகவே இந்த சுலோகம் முழுதும் வர்ணிக்கப்பட்டுள்ளது படித்து இன்புறுதற்குரிய சுலோகமாகும்.

नेत्राहीनेन मूले विहितपरिकरः सिद्धसाध्यैर्मरुद्भिः
पादोपान्ते स्तुतोऽलं बलिहरिरभसाकर्षणाबद्धवेगः ।
भ्राम्यन् व्योमाम्बुराशावशिशिरकिरणस्यन्दनः सन्ततं वो
दिश्याल्लक्ष्मीमपारामतुलितमहिमेवापरो मन्दराद्रिः ॥ ७२

नेत्राहीनेति । न हीनः अहीनः तेन अहीनेन अधिकेन नेत्रा अरुणेन, अनूरुणा, मूले रथमूले, विहितः कृतः परिकरो युगाश्व बन्धनादिव्यापारो यस्य सः कृतः परिकरः । अन्यत्र नेत्रा रक्षकेन अहीनां सर्पाणां इनः स्वामीति शेषः, तेन अनेन मूले मन्दरपर्वतस्य अधोभागे, विहितपरिकरः करचालनप्रयत्नो यस्य सः, सिद्धाः साध्याः तैः सिद्धसमूहादिदेवैः, पादानां, रथचरणानां, अन्यत्र प्रत्यन्तपर्वतानामुपान्ते समूहे, अलं अत्यर्थं, स्तुतः । बलमेषामस्तीति बलिनः ते च ते हरयः अश्वाश्च तेषां, रभसा वेगेन आकर्षणे आरोहणे, सति बद्धो वेगो यस्य सः बद्धवेगः, अन्यत्र बलं अस्याऽस्तीति बली सचासौ हरिः विष्णुश्च तस्य रभसा वेगेन, अन्यत्सर्वं समानम् । व्योम अम्बुराशिरेव तस्मिन् व्योमाम्बुराशौ । "उपमितं व्याघ्रादीनां" इति उपमितसमासः व्योमपथाम्बुराशौ इत्यर्थः । भ्राम्यन् भ्रमं कुर्वन् उभयत्र समानमेतत् । अतुलितः असदृशः । महिमा महत्वं यस्य सः अतुलितमहिमा । उभयत्र समानम् । अपरो मन्दराद्रिरिव स्थितः । अशिशिराः किरणा यस्य सः तस्य अशिशिरकिरणस्य सूर्यस्य स्यन्दनः रथः सन्ततम् । वः युष्माकम् । अतुल्यां अधिकाम् । लक्ष्मीं दिश्यात् ददातु ॥ ७२

॥ रथवर्णनं सम्पूर्णम् ॥

நேத்ராஹீநேந மூலே விஹிதபரிகர:
ஸித்தஸாத்யை: மருத்பி:
பாதோபாந்தே ஸ்துதோ(அ)லம்
பலி-ஹரி-ரபஸா-கர்ஷணாபத்தவேக: ।
ப்ராம்யந் வ்யோமாம்புராசாவசிசிரகிரண-
ஸ்யந்தந: ஸந்ததம் வோ
திச்யால்லக்ஷ்மீம் அபாராம் அதுலித-
மஹிமா இவ அபரோ மந்தராத்ரி: ॥ 72

இந்த சுலோகத்தால் சூரிய ரதத்திற்கும் - மந்தர மலைக்கும் ஒப்புமைப்படுத்தியுள்ளார் கவி.

இந்த சூரிய ரதம் மற்றொரு மந்தர மலை போலும், அவயவக் குறைவுள்ள (கால்களற்ற) அருணன் கீழே, தேரோட்டியாகப் பணி செய்கிறான் **हीनेन नेत्रा.** மந்தர மலையிலோ **अहीनेन** நாகங்களின் தலைவனான வாசுகி என்ற தலைவனை **नेत्रा** முன்னிட்டு பணி ஆற்றப்பெறுகிறது. சூரிய ரதமோ **सिद्धसाध्यैः** வாழ்வில் எதை சாதிக்க வேண்டுமோ அதைச் சாதித்துவிட்ட மருத்துக்களால் காலடியில் வணங்கப் பெறுகிறது. மந்தர மலையோ ஸித்தர்களாலும், ஸாத்யர்களாலும் (இவர்கள் இரு வகையான தேவர் பிரிவினர்) கொண்டாடப்படுகிறது. சூர்ய ரதமோ **बलिनां हरिणां रभसाकर्षणं** வலிமை மிக்க குதிரைகளின் வேகத்தால் இழுக்கப்பட்ட வேகத்தையுடையது. மந்தரமலையோ மஹாபலி என்ற **बलेर्हरैश्चरभसाकर्षणं** அசுரன் ஒரு பக்கம் தலைவனாகவும், மஹாவிஷ்ணு ஒரு பக்கம் தலைவனாகவுமிருந்து இழுக்கப்படுகிறது. சூர்ய ரதம் ஆகாயக் கடலைக் கடைகிறது. மந்தர மலை பாற்கடலைக் கடைகிறது. அந்த மந்தர மலை மஹாலக்ஷ்மியைப் பெற்றுத் தந்தது. சூரியரதம் உங்களுக்கு எல்லையற்ற செல்வம் என்ற லக்ஷ்மியை அருளட்டும்.

॥ अथ सूर्यमण्डलवर्णनम् ॥

यज्ज्यायो बीजमह्नामपहृततिमिरं चक्षुषामञ्जनं यद्-
द्वारं यन्मुक्तिभाजां यदखिलभुवनज्योतिषामेकमोकः ।
यद्वृष्ट्याम्भोनिदानं धरणिरससुधापानपात्रं महद्य-
द्दिश्यादीशस्य भासां तदविकलमलं मङ्गलं मण्डलं वः ॥ ७३

यदिति ॥ भासामीशस्य सूर्यस्य मण्डलं अह्नां दिवसानां ज्यायः श्रेष्ठं बिम्बं यन्मण्डलं अपहृततिमिरं चक्षुषामञ्जनं, यन्मण्डलं मुक्तिभाजां, पुरुषाणां योगिनां, द्वारं द्वाररूपम् । उक्तं च "द्वाविमौ पुरुषौ लोके सूर्यमण्डल भेदिना" विति । यन्मण्डलं, अखिलानां सकलानां, भुवनानां लोकानां, ज्योतिषां तेजसां, एकं मुख्यं, ओकः स्थानं, यन्मण्डलं वृष्टिः वर्षः तदम्भसां, निदानं मूलकारणं तत् भासां ईशस्य, अविकलं सम्पूर्ण-मण्डलं, अलं अत्यर्थं, मण्डलं दिश्यात् ददातु ॥ ७३

யஜ்ஜ்யாயோ பீஜமஹ்நாம்
அபக்ருத - திமிரம் சக்ஷுஷாமஞ்ஜநம் யத்-
த்வாரம் யந்முக்திபாஜாம் யதகில புவந
ஜ்யோதிஷாம் - ஏக - மோக: ।
யத்வ்ருஷ்ட்யா - அம்போநிதாநம்
தரணி - ரஸ - ஸுதாபாநபாத்ரம் மஹத்யத்-
திச்யாதீசஸ்ய பாஸாம் ததவிகலமலம்
மங்கலம் மண்டலம் வ: ॥ 73

ஸூரிய மண்டல வர்ணனை

இந்த சுலோகம் முதல் 80 ஆம் ஸ்லோகம் வரை ஸூரிய மண்டலத்தை வருணிக்கிறார்.

நாள் அல்லது தினம் என்று குறிப்பிடக் காரணமாக அமைவது சூரிய மண்டலமே கண்களில் தோன்றும் அந்தகத் தன்மையை (திமிரம் என்னும் நோயை) நீக்குவதற்குரிய மருந்து போல (கண்மை போல) இருப்பதும் இந்தச் சூரிய மண்டலமே மோக்ஷத்தை அடைய விரும்பி யோகம் செய்யும் யோகிகளுக்கு மோக்ஷத்திற்குச் செல்லும் வாயிலாக இருப்பதும் இந்தச் சூரிய மண்டலமே அண்ட கோளங்கள் அனைத்திற்கும் ஒளி கொடுப்பதும், இந்தச் சூரிய மண்டலமே அமிர்தமயமான மழை நீரைத் தாங்கியுள்ள பாத்திரம் போலுள்ள சூரிய மண்டலம் பூமியின் ஸாரமான அமுதத்தை உறிஞ்சி வைத்திருக்கும் கிண்டி - பேழை - போல் உள்ளது. இத்தகைய சிறப்பு வாய்ந்த சூரிய மண்டலம் உங்களுக்கு அனைத்து நன்மைகளையும் அளிக்கட்டும்.

யோகிகள் சூரிய மண்டலம் வழியாக, ஹிரண்ய கர்ப லோகத்தை அடைவார்கள் என்பது உபநிஷத்துக்களில் காணும் தத்துவம். இக்கருத்தை மயூர கவியும் பின்பற்றி 'த்வாரம் யன்முக்தி பாஜாம்' என்ற சொல்லாட்சியால் குறிப்பிடுகிறார்,

वेलावर्धिष्णु सिन्धोः पय इव सवित्राधोद्गताग्रयग्रहोड्ड

स्तोकोद्भिन्नस्वचिह्नप्रसवमिव मधोरास्यमस्यन्मनांसि ।

प्रातः पूष्णोऽशुभानि प्रशमयतु शिरश्शेखरीभूतमद्रेः

पौरस्त्यस्यादुगभस्तिस्तिमिततमःखण्डनं मण्डलं वः ॥ ७४

वेलेति ॥ सिन्धोः समुद्रस्य पय इव वेलया कालेन वर्धिष्णु वर्धशीलम् । यथा सिन्धुपयः वेलावर्धिष्णु तथा रविमण्डलमपि वेलावर्धिष्णु इत्यर्थः । चन्द्रोदये समुद्रजलवर्द्धनं पुराणप्रसिद्धम् । अग्रयाणि श्रेष्ठानि महान्ति च उड्डूनि च अग्रयाणि च तानि महोड्डूनि च । अर्धमुद्गतानि

अग्रच्यग्रहोड्डूनि यस्य तत् अर्धोद्गताग्रचग्रहोड्डु । स्तोकोद्भिन्नः ईषद्व्यक्तः स्वस्य रविमण्डलस्य चिह्नानां रश्मीनां प्रसवः उत्पत्तिर्यस्य तत् । प्रेरयेत् आदित्योदये सर्वे जनाः स्वकरसुव्यापारं कुर्वन्तीत्यर्थः । अन्यत्र मनांसि मुक्तानामिति शेषः । अस्यत् उत्सुकान्नयत् मधोः चैत्रमासस्य, आस्यं मुखमिव स्थितम् । प्रातः पुरस्ताद्भवः पौरस्त्यः तस्य पौरस्त्यस्य पूर्वदिशि भवस्येत्यर्थः । अद्रेः उदयपर्वतस्य शिरसि शेखरीभूतं चूडामणीभूतं, उद्गताः गभस्तयः रश्मयोः यस्य तत्, उद्गभस्ति अत एव स्तिमितं सान्द्रं अतिशयेन स्तिमितं स्तिमिततमं तच्च, तत् तमश्च, खण्डयति छिनत्ति खण्डितस्तिमिततमसः खण्डनं, पूष्णः सूर्यस्य मण्डलम् । वः युष्माकम् । अशुभानि प्रशमयतु ॥ ७४

வேலாவர்திஷ்ணு ஸிந்தோ: பய இவ
ஸ - திவார்தோத்கத - அக்ரயக்ரஹோடு
ஸ்தோகோத்பிந்ந - ஸ்வசிஹ்ந - ப்ரஸவமிவம்-
அதோ: - ஆஸ்ய - மஸ்யந் - மநாம்ஸி ।
ப்ராதஃ பூஷ்ணோ(அ)சுபாநி ப்ரஸமயது
சிரச்சேகரீபூதமத்ரே:
பௌரஸ்த்யஸ்யோத்கபஸ்தி -
ஸ்திமிததம - கண்டநம் மண்டலம் வ: ॥ 74

சூரிய மண்டல உதயத்தினால் எத்தகைய இயற்கைக் காட்சிகள் நடைபெறுகின்றன என்பதை இக் கவிதையில் கவி தெரிவிக்கிறார்.

கீழ்த்திசையில் தோன்றும் சூரிய மண்டலம், உதய கிரியின் முடிச்சிகரங்களை அணி செய்யும் அலங்காரம் போன்று காணப்படுகிறது. மிகக் கனவிருளை, இந்த சூரிய மண்டலம் வானில் தோன்றி (இருளை) அழிக்கின்றது;

கடற்கரையை அகல வைக்கின்ற கடல் நீர் போல், தினத்தின் காலத்தைப் பெருகச் செய்கின்றது. (கலா, காஷ்டா, முகூர்த்தம் போல - நிமிஷம், மணிகளைப் போல - காலத்தைப் பெருகச் செய்கிறது) சூரிய மண்டலம் தோன்றி ஒளியை எங்கும் பரப்புகின்ற காரணத்தால் க்ரஹங்களையும், நக்ஷத்திரங்களையும் ஒளியிழக்குமாறு செய்கிறது. வஸந்த காலத்தின் ப்ரவேசம் போல சூரிய மண்டல உதயத்தால் மலர்கள் மொட்டவிழ்க்கின்றன. இதனால் மக்கள் மனத்தை மோஹிக்குமாறுச் செய்கின்ற சூரிய மண்டலம் உங்களது பாவங்களை அழிக்கட்டும்.

சூரிய மண்டலம் உதய பர்வதத்தின் உச்சிக்கு அணியாக வெளிப்படும்போது கிரணங்களின் தாக்குதலால் நிகைத்து நிற்கின்ற இருட்டை அகற்றுகின்றது. கடற்கரையை அகற்றி வளர்க்கின்றவாறே கடலின் நீர் பெருக்கம் போல, முன்னால் உதித்துவிட்ட சுக்ரன் முதலான கிரகங்கள் நக்ஷத்திரங்களை ஒதுக்கி, வஸந்த காலம் தொடங்கும்போதே மனித உள்ளங்களை மகிழ்விப்பது போலக் கிளம்புகின்ற சூரிய மண்டலம் காலையில் உங்கள் தீவினைகளை அகற்றட்டும்.

प्रत्युप्तस्तप्तहेमोज्ज्वलरुचिरचलः पद्मरागेण येन

ज्यायः किञ्जल्कपुञ्जो यदलिकुलशितेरम्बरेन्दीवरस्य ।

कालव्यालस्य चिह्नं महिततममहामूर्ध्नि रत्नं महद्य-

द्दीप्तांशोः प्रातरव्यात्तदखिलजगन्मण्डनं मण्डलं वः ॥ ७५

प्रत्युप्तमिति ॥ पद्मानां रागः इव रागो यस्य तत् तेन पद्मरागेण । दीप्तांशोः सूर्यस्य येन मण्डलेन । प्रातः तप्तं च तत हेम सुवर्णं च तस्य उज्ज्वला कान्तिः यस्य सः तप्तहेमोज्ज्वलरुचिः, अचलः उदयपर्वतः, प्रत्युप्तः खचितः, यन्मण्डलं अलीनां भ्रमराणां, कुलं समूहः, तद्वत् शितेः नीलस्य

अम्बरमेव, इन्दीवरं नीलोत्पलं तस्य अम्बरेन्दीवरस्य । ज्यायः श्रेष्ठं, किञ्जल्कानां रजसाम् । पुञ्जः समूहः । काल एव, व्यालः सर्पः, तस्य कालव्यालस्य । अतिशयेन, महितः महिततमः सचासौ महामूर्धा च तस्मिन् महिततममहामूर्धनि, चिह्नं यन्मण्डलं महद्रत्नं दीप्तांशोः सूर्यस्य, अविकलानां सकलानां, जगतां, मण्डनं भूषणं मण्डलं, वः युष्मान्, अव्यात् रक्षतु ॥ ७५

ப்ரத்யுப்த: - தப்தஹேமோஜ்வலருசிரசல;
பத்மராகேந யேந
ஜ்யாய: கிஞ்ஜல்கபுஞ்ஜோ
யதலிகுலசிதே: - அம்பர: - இந்தீவரஸ்ய ।
காலவ்யாலஸ்ய சிந்நம் மஹிததம - மஹா-
மூர்த்நி ரத்நம் மஹத்யத்-
தீப்தாம்சோ ப்ராதரவ்யாத
தத்தவிகலஜகந் - மண்டநம் மண்டலம் வ: ॥ 75

சூரிய மண்டலம் முதலில் உதயமாகிறது. அதன் அழகைக் கண்டு ரசிக்கிறார் கவி.

பத்மராகக் கற்கள் பதித்த உருக்கிய தங்கம் போல் அல்லவா உதயகிரி பிரகாசிக்கிறது ! வண்டுகளின் கூட்டத்தைப் போல் கருமை நிறமுடைய ஆகாசத்தில் தோன்றும் சூரிய மண்டலம் (நீலோத்பல மலர்) கருநெய்தல் மலரின் நடுவேயுள்ள (கேசரங்களுடன் கூடிய) சூலகம் போலல்லவா க்காட்சியளிக்கிறது ! காலமாகிய பெருநாகத்திற்கு அடையாளமான நாகமணியா ! உச்சி வேளையில், இந்தச் சூரிய மண்டலம் சிரோரத்னம் போலவுமல்லவா காட்சியளிக்கிறது ! அண்ட கோளங்களிலேயே மிகப் பெரியதும், உலகினுக்குப் பூர்ணமான அலங்காரப் பொருளாகவும் காட்சி நல்கும் இந்தச் சூரிய மண்டலம் உங்களைக் காக்கட்டும்.

कालव्यालस्य चिह्नं காலம் என்ற பெருநாகத்திற்கு அடையாளம். சூரியன் உதிக்கும்போது அனைத்துயிர்களின் பிராணன்களை எடுத்துக்கொண்டே உதிக்கின்றான் அஸ்தமனத்தின்போதும் அந்தப் பிராணன்களை எடுத்துக்கொண்டே மறைகிறான். स सर्वेषां भूतानां प्राणानादायोदेति, स सर्वेषां भूतानां प्राणानादायास्तमेति என்ற வேதப் பகுதியின் கருத்து. काल व्याल என்ற சொல்லாட்சியால் கூறப்படுகிறது.

कस्त्राता तारकाणां पतति तनुरवश्यायबिन्दुर्यथेन्दु-
विंद्राणा दृक्स्मरारेरुरसि मुररिपोः कौस्तुभो नोद्गभस्तिः ।
वह्नेः सापह्नवेव द्युतिरुदयगते यत्र तन्मण्डलं वो
मार्तण्डीयं पुनीताद्दिवि भुवि च तमांसि मुष्णन्महांसि ॥ ७६

कस्त्रातेति ॥ यत्र यस्मिन्मण्डले उदयगते उदयपर्वतं गते सति. अवश्यायस्य हिमस्य, बिन्दुः हिमकण इत्यर्थः । इन्दुः चन्द्रः तनुः क्षीणः सन् यदा यस्मिन्काले सापह्नवेव द्युतिः दीप्तिर्भवतीत्यर्थः । तारकाणां नक्षत्राणां. "कः स्त्राता कः रक्षकः" इति वचनस्य अवकाशो यथा न भवति तथा इन्दुः पततीत्यर्थः । स्मरारेः ईश्वरस्य, दृक् ललाटलोचनं, विद्राणा विगतत्राणा तेन अभिभूतेत्यर्थः । मुररिपोः कृष्णस्य. उरसि कौस्तुभः "कौस्तुभाख्यो मणिः", उद्गता गभस्तिः दीप्तिः यस्य सः उद्दीप्तिः न भवति । वह्नेरपि द्युतिः सापह्नवेव अपह्नवसहितेव दिविभुवि च तमांसीव, महांसि तेजांसि मुष्णन् । मार्तण्डस्य सूर्यस्य, इदं मार्तण्डीयम् । मार्तण्ड शब्दस्य वृद्धिर्यस्येत्यादिना वृद्ध संज्ञा वृद्धाच्छः इति छ प्रत्ययः । मण्डलं, वः युष्मान् पुनीतात् ॥ ७६

கஸ்த்ராதா தாரகாணாம் பததி
தநுரவஸ்யாயபிந்துர்யதேந்து:
வித்ராணா த்ருக்ஸ்மராரே: - உரஸி
முரரிபோ: கௌஸ்துபோ நோத்கபஸ்தி: ।
வஹ்நே: ஸாபஹ்நவைவ த்யுதி: -
உதயகதே யத்ர தந் - மண்டலம் வோ
மார்த்தண்டீயம் புநீதாத்-
திவிபுவி ச தமாப்ஸி முஷ்ணந் - மஹாம்ஸி ॥ 76

சூரிய மண்டலம் உதயகிரியை அடைகிறது. அதன் தோற்றத்தைக் கண்ட கவியின் உள்ளத்தில் கற்பனையும் உதயமாகிறது.

சூரிய மண்டலம் உதயமாவதால் இருள் மட்டும்தான் விலகுகின்றதா ? இல்லை ... இல்லை ... ஒளியுள்ள அனைத்துமே ஒளியிழந்து விடுகிறது. காரணம் சூரிய மண்டலத்தின் பேரொளிக்கு முன் எத்தகைய ஒளியுமே பிரகாசிப்பதில்லை. சூரியன் உதயமானதும் அக்னி (தீ) ஒளியிழந்து விடுகிறது. லௌகீகமான அக்னிமட்டுமல்ல. சிவபெருமானின் முக்கண்களிலொன்றான நெற்றிக்கண் (நெற்றிக்கண் தீயின் வடிவம் என்பது புராணக் கருத்து) ணும் அல்லவா ஒளியிழந்து விடுகிறது ! சூரிய மண்டல உதயத்தால் பனித்திவலை மெல்ல மெல்லக் கரைந்து மறைவதைப் போல இருளில் ஒளியுடன் பிரகாசித்த சந்திரனும் மெல்ல மெல்ல மறைந்து விடுகிறான். நட்சத்திரங்களின் தலைவனான சந்திரனுக்கே இக்கதி யெனில் நட்சத்திரங்களை எவர்தான் காப்பாற்ற முடியும் ? அவையும், ஒளியிழந்து மறைந்து விடுகிறது. திருமாலின் மார்பிலுள்ள 'கௌஸ்துப மணி'யை பிரகாசத்திற்கு உதாரணமாகக் கூறுவர். அந்த மணியும் ஒளியிழந்து விடுகிறதென்றால் சூரிய மண்டலத்தின் ஒளி எத்தகைய ஆற்றல் வாய்ந்தது ? ஆதலால் ஆகாசத்தின் இருளை அழிக்கும் சூரிய மண்டலம் ஒளியுள்ள பிற பொருட்களின்

ஒளிகளையும் மங்கச் செய்வதில் பெருமை வாய்ந்தது. இத்தகைய ஆற்றல் பெற்ற ஸூர்ய மண்டலம் உங்களைப் புனிதமடையச் செய்யட்டும்.

यत्प्राच्यां प्राक्चकास्ति प्रभवति च यतः प्राच्यसावुज्जिहाना-
दिद्धं मध्ये यदह्नो भवति ततरुचा येन चोत्पाद्यतेऽह्नः ।
यत्पर्यायेण लोकानवति च जगतां जीवितं यच्च तद्वो
विश्वानुग्राहि विश्वं सृजदपि च रवेर्मण्डलं मुक्तयेऽस्तु ॥ ७७

यदिति ॥ यन्मण्डलं प्राच्यां दिशि प्राग्भवं चकास्ति द्योतत् । उज्जिहानात् उज्जिहतः यस्मान्मण्डलात् असौ, प्राची पूर्वदिक्, भवति उत्पद्यते, यन्मण्डलं अह्नः दिवसस्य मध्ये, इद्धं दीप्तम् । तदा विस्तृत । रुक् दीप्तिर्यस्य तत्, तेन तत रुचा, येन मण्डलेन अह्नः उत्पाद्यते यन्मण्डल पर्यायेण क्रमेण तु लोकान् अवति रक्षति यन्मण्डलं, जगतां जीवितं जनहेतुत्वाज्जीवनमित्युच्यते । कार्येण कारणोपचारः । उक्तं च "आदित्याज्जायते वृष्टिः तुष्टाभवन्ति च प्रजाः" इति । अनेन मण्डलेन जीवितहेतुत्वमुक्तम् । यदपि मण्डलं विश्वमनुगृहीतं शीलं यस्य तत् विश्वानुग्राहि अत एव विश्वसृजत् । अपि च समुच्चये तत्, रवेर्मण्डलं वः युष्माकं मुक्तये अस्तु । अनेन मण्डलस्य सृष्टिरक्षणादिकमुच्यते ॥ ७७

யத்ப்ராச்யாம் ப்ராக்சகாஸ்தி
ப்ரபவதி ச யதః ப்ராச்யஸாவுஜ்ஜிஹாநா-
தித்தம் மத்யே யதஹ்நோ பவதி
ததருசா யேந சோத்பாத்யதே(அ)ஹ்ந: ।

யத்பர்யாயேந லோகாந் - அவதி ச
ஜகதாம் ஜீவிதம் யச்ச தத்தோ
விச்வாநுக்ராஹி விச்வம் ஸ்ருஜதபி ச
ரவே: - மண்டலம் முக்தயே(அ)ஸ்து ॥ 77

சூரிய மண்டலம் எங்கே உதிக்கிறதோ அந்த ஆகாயப் பகுதி கிழக்குத் திசையாகிறது. கிழக்கே சூரியன் உதிக்கிறான் என்று கூறுகிறோம். சூரியன் வளர்வதால் பகல் பகலாகிறது. பகலில்தான் சூரியன் விளங்குகிறான் என்று கூறுகிறோம். அவன் உலகங்களைக் காக்கின்றான். எப்படி? உலகினருக்கு வேண்டிய அவசியப் பொருள்களைப் படைத்துக் காக்கிறான். அவனே பிரபஞ்சத்திற்கு உயிராக இருக்கிறான். பிரபஞ்சத்தைக் காத்து - தன் இருக்கையையும் அவசியமாக்கிவிடுகிறான். உயிராக இருந்து, உலகைப் படைத்துக் காக்கும், அருளுடைய சூரிய மண்டலம் உங்களை பிரபஞ்சத்திலிருந்து விடுவிக்கட்டும். ஒரே குழப்பமான பிரபஞ்சத்தின் காரண - காரிய சர்ச்சையிலிருந்து உங்களை விடுவிக்கட்டும்.

शुष्यन्त्यूढानुकारा मकरवसतयो मारवीणां स्थलीनां
येनोत्तप्ताः स्फुटन्तस्तडिति तिलतुलां यान्त्यगेन्द्रा युगान्ते ।
तच्चण्डांशोरकाण्डत्रिभुवनदहनाशङ्कया धाम कृच्छ्रात्
संहृत्यालोकमात्रं प्रलघु विदधतः स्तान्मुदे मण्डलं वः ॥ ७८

शुष्यन्तीति ॥ येन मण्डलेन युगान्ते प्रलयकाले उत्तप्ताः सन्तप्ताः, मकरवसतयः समुद्राः, शुष्यन्ति शुष्कतां गच्छन्ति । मेरोः इमाः मारव्यः तासां मारवीणां । "तस्येदमित्यण्" प्रत्ययः । ओर्गुण इति गुणः अवादेशः । जानपदेत्यादिना ङीप् स्थलीनाम् । ऊढः धृतः अनुकारः सादृश्यं येषां ते ऊढानुकाराः । युगान्ते येन मण्डलेन, उत्तप्ताः सन्तप्ताः ।

अग्रेन्द्राः पर्वतश्रेष्ठाः तडित्युत्सरन्तः सन्तः तडित्यनुकारिशब्दः । तिल-तुलानां तिलप्रमाणतां यान्ति । अकाण्डे अकाले, त्रिभुवनानां त्रिजगतां, दहनाशङ्कया दहनभीत्या कृत्स्नं सकलं धाम तेजः संहृत्य संयम्य, प्रलघु अत्यल्पं, आलोकमात्रं तेजोमात्रं, दधतः, चण्डांशोः सूर्यस्य तन्मण्डलं वः युष्माकं, मुदे सन्तोषायस्तात् ॥ ७८

சுஷ்யந்த்யூடாநுகாரா மகரவஸதயோ
மாரவீணாம் ஸ்தலீநாம்
யேநோத்தப்தா; ஸ்ப்புடந்த; - தடிதி தில துலாம்
யாந்த்யசேந்த்ரா யுகாந்தே ।
தச்சண்டாம்சோ: - அகாண்ட - த்ரிபுவந-
தஹநாசங்கயா தாம க்ருச்ராத்
ஸம்ஹ்ருத்யா லோகமாத்ரம் ப்ரலகு
விததத: ஸ்தாந்முதே மண்டலம் வ: ॥ 78

முன் சுலோகத்தில் சூரிய மண்டலம் படைத்துக் காக்கின்றது, என்று கூறிய கவிஞர், பரம்பொருளின் விருப்பத்திற்கிணங்க ஒரு காலத்தில் பிரபஞ்சத்தை அழிக்கவும் திறன் பெற்றது என்றும் கூறுகிறார். அத்திறன் பெற்றதாயினும். பிரபஞ்சத்தைக் காக்கும் நேரத்தில் அழிக்கும் திறனை வெளிப்படுத்தாமல் அடக்கிக்கொண்டு வெளிச்சத்தை மட்டும் தருகிறது என்று இந்த சுலோகத்தில் கூறுகிறார் கவி.

யுகத்தின் முடிவில் சூரிய மண்டலம் தனது முழுமையான வெப்பத்தால், மிகப் பெரிய நீர் நிலையான சமுத்திரத்தையே வற்றச் செய்து பாலைவனமாக்குகின்றது. இது மட்டுமா? மிகவுயர்ந்தும், விரிந்தும், புனிதத் தன்மைகளைக் கொண்ட மலைகளைத் தனது வெப்பத்தால் 'தடதட' வென்று வெடித்து எள்ளு போல் பொடி செய்கின்றது. ஆனால், இதே சூரிய மண்டலம் மூவுலகையும்

அழிக்கும் ஆற்றல் பெற்றிருந்தும், அந்த ஆற்றலை வெளிப் படுத்தாமல். 'காலமற்ற காலத்தில் இவ்வுலகு அழிந்து விடுமோ ?' என்று அஞ்சி தனது கருணையால் வெளிச்சத் திற்கு மட்டும் தேவையான மிகக் குறைந்த ஒளியையே வெளிப்படுத்துகின்றது அத்தகைய சூரிய மண்டலம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கட்டும்.

उद्यद्युद्यानवाप्यां बहुलतमतमःपङ्कपूरं विदार्य
प्रोद्भिन्नं पत्रपार्श्वेष्वविरलमरुणच्छायया विस्फुरन्त्या ।
कल्याणानि क्रियाद्वः कमलमिव महन्मण्डलं चण्डभानो-
रन्वीतं तृप्तिहेतोरसकृदलिकुलाकारिणा राहुणा यत् ॥ ७९

तथानेन रविमण्डलस्य कमलेन साम्यमुच्यते – उद्यदिति ॥ उद्यानवाप्यां अतिशयेन बहुलं बहुलतमं अतिसान्द्रं तच्च तत् तमश्च तदेव पङ्कपूरं पङ्कपङ्क्तिं विदार्य विभिद्य, स्फुरन्त्या दीप्यमानया अरुणस्य सूर्यस्य, "मिहिरारुणपूषणः" इत्यमरः । छाया कान्तिः तया अरुणच्छायया । तत्र रक्तवर्णया पत्राणां वाहनानां पार्श्वेषु "पत्रं वाहन पक्षयोः" इत्यमरः । अन्यत्र पक्षाणां कमलच्छदानां पार्श्वेषु, अविरलं अतिसान्द्रं यथा भवति तथा प्रोद्भिन्नं, अलीनां भ्रमराणां, कुलं समूहं अनुकरोतीति अलिकुलानु- कारिणा नीलवर्णेनेत्यर्थः । राहुणा असकृत् बहुशः तृप्ति हेतोः तृप्त्यर्थम् । षष्ठीहेतु प्रयोगेपीति षष्ठी । अन्वीतं अनुगतं चण्डभानोः सूर्यस्य, महत् यन्मण्डलं वः युष्माकम् । कल्याणानि क्रियात् ॥ ७९

உத்யத்யுத்யாநவாப்யாம் பஹுலதமதம: -
பங்கபூரம் விதார்ய
ப்ரோத்பிந்நம் பத்ர பார்ஸ்வேஷ்வ -
அவிரலம் - அருணச் சாயயா விஸ்ப்புரந்த்யா ।

கல்யாணாநி க்ரியாத்வ: கமலமிவ
மஹந்மண்டலம் சண்டபாநோ: -
அந்வீதம் த்ருப்திஹேதோ: அஸக்ருத் -
அலிகுலாகாரிணா ராஹுணா யத் ॥ 79

கீழ்வானில் சிவந்து தோன்றும் சூரிய மண்டலத்தைக் காணும் கவிஞர் தாமரைப் பொய்கையோ'! என்று ஐயமுறுகிறார்.

தாமரைத் தடாகத்தின் சேற்றிலிருந்து தோன்றிய தாமரை, இலைகளுக்கிடையே மலர்ந்து தனது செம்மை வண்ணத்தை எங்கும் பரப்பி அழகிய காட்சியை நல்கும். அப்போது தாமரை மலரிலுள்ள தேனைப் பருக கருத்த வண்டுகள் மொய்த்துத் தேனைப் பருகும். இது அன்றாடம் தாமரைத் தடாகத்தில் நடைபெறும் காட்சி. இக்காட்சியை சூரிய மண்டலத்திற்கு உவமைப்படுத்திக் கூறுகிறார் மயூரகவி.

சூரிய மண்டலம் (முன் சுலோகத்தில் கூறியபடி) அவ்வளவு கொடியதோ - என்று பயப்படவேண்டாம். மென்மையானதும் கூட. ஆகாயமென்ற நந்தவனம். அதன் நடுவே குளிர்ந்த பொய்கை அதிலே இருள் என்னும் சேற்றுக் குழம்பை விலக்கிக்கொண்டு மலர்கிறது சூரிய மண்டலம் என்ற தாமரை. தாமரையா அது? என்று சந்தேகிக்க வேண்டாம். மென்மையுள்ள தாமரைதான். இல்லாவிடில் (சாயா க்ரஹமான) கிரஹத்தின் நிழல் போன்ற ராகு, சூரியனை உரிஞ்சுவதற்காக அடிக்கடிச் சுற்றி வருமா? தாமரையின் தண்மையில்லாவிட்டால் வண்டுதான் மொய்க்க வருமா? சூரிய மண்டலத்தின் கருணை அத்தகையது. அது உங்களுக்கு மேன்மைகளை அளிக்கட்டும்.

चक्षुर्दक्षाद्द्विषो यस्य तु दहति परं पूरयत्येव कामं
नास्तं जुष्टं मरुद्भिर्यदिह नियमिनां यानपात्रं भवाब्धौ ।

यद्वीतश्रान्ति शश्वद्भ्रमदपि जगतां भ्रान्तिमभ्रान्ति हन्ति
ब्रध्नस्याव्याद्विरुद्धक्रियमपि च हिताधायि तन्मण्डलं वः ॥ ८०

चक्षुरिति ॥ दक्षस्य दक्षप्रजापतेः द्विषः शत्रोः ईश्वरस्य चक्षुर्यन्मण्डलं चन्द्रार्कवह्निलोचनस्य, कामं मनोरथं न दहति । किन्तु, परं उत्कृष्टं यथा भवति यथा पूरयत्येव यत्, दक्षद्विषः ईश्वरस्य चक्षुः ललाटलोचनं कामं मारं दहत्येव न तु पूरयति । यन्मण्डलं नियमिनां, संसारसमुद्रे यानपात्रमपि । मरुद्भिः देवैः अस्तं निरस्तं भवति, किन्तु जुष्टं सेवितं, यानपात्रं तु समुद्रे मरुद्भिः वायुभिः अस्तं प्रेरितं । न विद्यते भ्रान्तिः यस्य तत् अभ्रान्ति हित यन्मण्डलं, शश्वत् सर्वदा भ्रमदपि वीता श्रान्तिः यस्य तत् वीतश्रान्ति सत् जगतां भ्रान्ति अज्ञानं हन्ति नाशयति लोके तावत् यः कश्चन सर्वदा भ्रमन्, जगतां भ्रान्ति नाशयितुं अलम् । विरुद्धा क्रिया यस्य तत् विरुद्धक्रियमपि हितमभीष्टमाधातुं शीलं यस्य तत् । ब्रध्नस्य सूर्यस्य मण्डलम् । वः युष्मान् । अव्यात् रक्षतु ॥ ८०

॥ इति सूर्यमण्डलवर्णनं समाप्तम् ॥

சதுர் தக்ஷாத்விஷோ யந்ந து
தஹதி பரம் பூரயத்யேவ காமம்
நாஸ்தம் ஜுஷ்டம் மருத்பி:
யதிஹ நியமிநாம் யாநபாத்ரம் பவாப்தௌ ।
யத்வீத ஸ்ராந்தி சஸ்வத்ப்ரமதபி ஜகதாம்
ப்ராந்திமப்ராந்தி ஹந்தி
ப்ரத்நஸ்ய - அவ்யாத் - விருத்த - க்ரியமபி ச
ஹிதாதாயி தன் மண்டலம் வ: ॥ 80

சூரிய மண்டலத்தின் கருணைப் பாங்கு மேலும் விளக்கப் பெறுகின்றது, இந்த சுலோகத்தில். அதன் தன்மையையும். காரியத்தையும் எண்ணினால் பயமாக இருக்கிறது. அதனால் விளையும் பயனைக் கவனித்தால் 'கருணை' தெரிகிறது என்கிறார் கவி.

தக்ஷனைச் சுட்டெரித்த சிவபெருமானின் மூன்றாவது கண்ணல்லவா சூரிய மண்டலம்? அந்தக் கண் காமனை எரித்ததாயிற்றே! என்று நினைத்தால் பயமாக இருக்கிறது. ஆனால், அந்தக் காலையில் வணங்கி என்ன வேண்டும் என்று வேண்டினாலும், அருளுவது அதன் இயல்பு. 63வது சுலோகத்தில் நினைவுக்கு வந்த ஏழு மண்டலங்கள் கொண்ட மருத்துக்கள் மிகவும் வேகம் கொண்டவை. ஆயினும், அவற்றை சூரிய மண்டலம் அழித்துவிடவில்லை. அந்த வாயு மண்டலத்தைக் காட்டிலும் வேகம் கொண்டது மனித மனம். அதை அடக்கிய யோகிகளை உலகியல் கடலில் கவலையற்று சஞ்சரிக்க வைக்கும் ஓடமாகவும் உள்ளது சூரிய மண்டலம், இது ஓயாமல் உலகைச் சுற்றிக்கொண்டே இருக்கிறது. அந்தச் சுற்றில் அகப்பட்டுக் கொண்ட பிரபஞ்சத்தில் விழுகின்ற ஜீவர்களின் தலைச்சுற்றலை – அக்ஞானத்தை விலக்கித் தருகிறது. இப்படி தன் செயல் விரோதமாக இருக்க **विरुद्धं क्रियम्** ஆனால், அதன் பயன் உலகத்துக்கு நன்மை பயப்பதாகவே (**हितावधि**) உள்ளது

இதுவரை சூரிய மண்டல வர்ணனை

॥ अथ सूर्यवर्णनम् ॥

सिद्धैः सिद्धान्तमिश्रं श्रितविधि विबुधैश्चारणैश्चाटुगर्भं
गीत्या गन्धर्वमुख्यैर्मुहुरहिपतिभिर्यातुधानैर्यतात्मा ।
सार्धं साध्यैर्मुनीन्द्रैर्मुदिततममनोमोक्षिभिः पक्षपातात्
प्रातः प्रारभ्यमाणस्तुतिरवतु रविर्विश्ववन्द्योदयो वः ॥ ८१

"वन्दनं क्रियते सिद्धै" रिति सिद्धान्तेन उपनिषद्वाक्यरहस्येन मिश्रं युक्तं यथा भवति तथा । श्रितः विधिः शास्त्रप्रतिपादितानुष्ठानं येषाम् । ते च ते विबुधा देवाश्च तैः श्रितविधि विबुधैः । चारणैः । चाटूनि प्रियवाक्यानि गर्भे यस्मिन् कर्मणि तत् । साध्यैं साध्यैः, अतिशयेन, मुदितं मुदिततमं, मनो येषां ते च मुदिततममनसः ते च मोक्षिणश्च तैः मुदिततम मनो मोक्षिभिः । प्रातः प्रारभ्यमाणा उपक्रममाणा स्तुतिर्यस्य सः । यतात्मा यतः नियतः आत्मा यस्य सः । विश्वैः सकलजनैः, वन्द्यः स्तुत्यः उदयो यस्य । रविः । वः युष्मान् । अवतु रक्षतु ॥ ८१

ஸித்தை: ஸித்தாந்தமிச்ரம்
 ச்ரிதவிதிவிபுதை: - சாரணைச்சாடு கர்பம்
கீத்யா கந்தர்வமுக்யை; - முஹுரஹிபதிபி -
 யாதுதானை: யதாத்மா ।
ஸார்தம் ஸாத்யைமுநீந்த்ரை: முதிததமமநோ
 மோக்ஷிபி: பக்ஷபாதாத்
ப்ராத: ப்ராரப்யமாண ஸ்துதிரவது
 ரவி: விச்வவந்த்யோதயோ வ: ॥ 81

சூரிய பகவானின் வர்ணனை

உதிக்கின்ற சூரியனைக் கண்டு மக்கள் துதிக்கின்றனர். இவர்கள் மட்டுமா துதி செய்கிறார்கள்? தேவர்களும், முனிவர்களும், யோகிகளும் துதிக்கின்றார்கள். அவர்கள் எப்படியெல்லாம் துதிக்கின்றார்கள் என்பதை இந்த சுலோகத்தின் வாயிலாகக் கூறுகிறார் கவி.

சித்த புருஷர்கள் உபநிஷத்தின் தத்துவங்கள் பொதிந்த துதிகளாலும், தேவர்கள் வேத - சாஸ்திரங் களில் கூறப்பட்ட யாகாதிகாரியங்களுடன் சேர்ந்த துதி களாலும் தேவர்களின் ஒரு பிரிவினரான சாரணர்கள்

சிறந்ததும், கவி - நயம் மிக்கதுமான துதிகளாலும், கந்தர்வர்கள் இனிய கானத்தினாலும், வாஸுகி, அதிதி, உஷன் முதலிய நாகராஜர்கள் தன்னடக்கத்தோடும்: ராக்ஷஸர்கள் பூஜைக்குரிய வஸ்த்துக்களாலும், ஸாத்யர்கள், முனிவர்கள், மிகுந்த மனமகிழ்ச்சியுடனும், யோகிகள் சூரியனிடம் ஒன்றிவிட்ட நிலையிலும், துதி செய்கின்றனர். இவ்விதம் அவரவர் தகுதிக்கும், ஆற்றலுக்கும் தக்கவாறு உதிக்கும்போதே உலகினர் அனைவராலும் பூஜிக்கப் படுகின்ற சூரியன் உங்களைக் காக்கட்டும்.

भासामासन्नभावादधिकतरपटोश्चक्रवालस्य तापा-
च्छेदादच्छिन्नगच्छत्तुरगखुरपुटन्यासनिःशङ्कटङ्कैः ।
निःसङ्गस्यन्दनाङ्गभ्रमणनिकषणात्पातु वस्त्रिप्रकारं
तप्तांशुस्तत्परीक्षापर इव परितः पर्यटन्हाटकाद्रिम् ॥ ८२

भासां आसन्नभावात् तापलिप्सत्वात् अतिशयेन अधिकः अधिकतरः, पटुर्यस्य तत् तस्य अधिकतरपटोः स्त्रियाः पुंवदित्यादिना पुंवद्भावः भासां तेजसां चक्रवालस्य समूहस्य तापात् अच्छिन्नं अनवरतं गच्छन्तः तुरं गच्छन्तीति तुरगाः, अश्वा (अच्छिन्नगच्छन्तः) ते च ते तुरगाश्च, तेषां खुरपुटानि तेषां न्यासाः अप्रतिहताः निःशङ्काः ते च ते टङ्काश्च अच्छिन्न-गच्छत्तुरगखुरपुटटङ्काः तैः छेदात् । निर्गतः सर्व सङ्गो यस्य तत्, तस्य स्यन्दनस्य, अङ्गं चक्रं निःसङ्गं च तत् स्यन्दनाङ्गं च । तस्य भ्रमणं तदेव निकषणं तस्मात् निःसङ्गस्यन्दनाङ्ग भ्रमणनिकषणात् लोकेषु सुवर्णपरीक्षाकारस्तु तापच्छेदननिघर्षणेभ्यः सुवर्णं परीक्षते तद्वत् तत्परीक्षापरः इव परीक्षा नाम शुद्धिपरिज्ञानं, हाटकाद्रिं मेरुं परितः पर्यटन् तप्तांशुरादित्यः वः पातु कनकमयौ तापात्, टङ्कैः छेदात्, निकषणपाषाणे निकषणात् च परितः

परीक्षन्ते तद्वदिति । सुवर्णगिरिं परितः पर्यटन्निति, "अभितः परितः समया निकषा हा प्रतियोगेऽपि" इति च दृश्यत इति द्वितीया ॥ ८२

பாஸாம் - ஆஸந்ந பாவாத் -
அதிகதரபடோ: - சக்ரவாலஸ்ய தாபாத் -
சேதாதச்சிந்ந - கச்சத்துரக -
குரபுடந்யாஸநி: சங்கடங்கை: ।
நி: ஸங்கஸ்யந்தநாங்க -
ப்ரமண - நிகஷணாத்பாது வஸ்த்ரிப்ரகாரம்
தப்தாம்சு: - தத்பரீக்ஷா - அபர இவ பரித:
பர்யடந்ஹாடகாத்ரிம் ॥ 82

சூரியன் நாள்தோறும் மேருபர்வதத்தைச் சுற்றிச் சுற்றி வருகிறானே! எதற்காக? என்று சிந்திக்கிறார் மயூரகவி. அதற்கான காரணத்தையும் கற்பிக்கின்றார் இந்த சுலோகத்தில்.

சூரியன் நாள் தோறும் மேரு பர்வதத்தைச் சுற்றி வருகிறான், ஏன் தெரியுமோ? மேருமலை தங்கமய மானது. அந்தத் தங்கம் சுத்தமான தங்கந்தானா? என்று தெரிந்துகொள்ளவே அதனை தினமும் தேருடன் சுற்றி வருகிறான். சுற்றிச் சுற்றி வருவதால் மட்டும் தங்கத்தைப் பரீக்ஷை செய்துவிடமுடியுமா? தங்கத்தைப் பரீக்ஷை செய்ய மூன்றுவிதமான செயல்களை மேற்கொள்ள வேண்டும். 1. நெருப்பில் காய்ச்சிய பின்னரே சுத்தமான தங்கத்தை அறிய முடியும். அல்லது 2. உரைசிப் பார்த்து அறிய வேண்டும். அல்லது 3. வெட்டிப் பார்த்து அறிய வேண்டும் இந்த மூன்று விதச் செயல்களால்தான் தங்கத்தின் 'தரம்' அறியப்படுகிறது. இதே போலவே சூரியனும் மேருமலையின் தங்கத்தின் தரம் பார்க்கிறான் என்கிறார் கவி. எப்படியெனில், மேரு மலையை மிக அருகில் சுற்றி வருவதால், தனது வெப்பத்தால் தீயிலிடுவ தைப் போலக் காய்ச்சியும், சூரியனின் குதிரைகள் குளம்பு

பதித்த கால்கள் தாக்கி அடிப்பதாலும், சூரியனின் தேர்ச் சக்கரங்கள் வேகமாக உரசுவதாலும் இவ்விதம் மூன்று விதமாக மேரு பர்வதத்தின் முகடுத் தங்கத்தின் திறத்தைப் பரிசோதிப்பதற்காகத் தங்க மலையில் சுற்றிவருகிற சூரியன் உங்களைக் காக்கட்டும்.

नो शुष्कं नाकनद्या विकसितकनकाम्भोरुहं भ्राजितं तु
प्लुष्टा नैवोपभोग्या भवति भृशतरं नन्दनोद्यानलक्ष्मीः ।
नो शृङ्गाणि द्रुतानि द्रुतममरगिरेः कालधौतानि धौता-
नीद्धं धाम द्युमार्गे म्रदयति दयया यत्र सोऽर्कोऽवताद्वः[1] ॥ ८३

यत्र सूर्येऽस्मिन् द्युमार्गे इद्धं दीप्तं अत्युग्रं स्वधाम तेजः, दयया म्रदयति मर्दनं कुर्वति सति, नाकनद्याः, विकसितकनकाम्भोरुहं नो शुष्कं, प्रत्युत भ्राजितं तु ईषदातपोन्मेषतत्वाद्विराजितमेव । सदा नन्दनोद्यानलक्ष्मीः नन्दनस्य, इन्द्रस्य नन्दनाख्यस्य उद्यानस्य, शोभा न प्लुष्टा व दग्धा प्रत्युत भृशतरं उपभोग्येव भवति । मन्दमयूख विकसितकुसुमपल्लवाङ्कुरत्वादत्यन्तं त्रिदशानामनुभवयोग्येव भवति । तथा अमरगिरेः मेरोः कालधौतानि सौवर्णानि शृङ्गाणि नो द्रुतानि न विलीनानि । प्रत्युत द्रुतं शीघ्रं धौतानि ज्वलितानि । प्रत्यग्रधामोपसंहारस्य कथित तद्दोषनिराकरणमेव न केवलं सञ्जातं, महान् गुण एवाभूदित्यर्थः । सः अर्कः वः अवतात् ॥ ८३

நோ சுஷ்கம் நாகநத்யா
விகஸிதகநக(அ)ம்போருஹம் ப்ராஜிதம் து
ப்லுஷ்டா நைவோபபோக்யா
பவதி ப்ருசதரம் நந்தநோத்யாநலக்ஷ்மீ: ।

---

1. स इनोऽव्याद्वः ॥

நோ ச்ருங்காணி த்ருதாநி
த்ருத மமரகிரே: காலதௌதாநி தௌதா-
நீத்தம் தாம த்யுமார்கே ம்ரதயதி
தயயா யத்ர ஸோ(s)ர்கோ-அவதாத்-வ: ॥ 83

சூரியன் அதிகமான வெப்பத்தையா நமக்கு அளிக்கிறான்? சூரியனின் வெப்பத்தால் நமக்கு நன்மையா? தீமையா? என்பது குறித்து இந்த சுலோகத்தில் விளக்குகிறார் கவி.

சூரியன் தனது மிகக் கடுமையான வெப்பத்தை வெளிப்படுத்துகிறானே தவிர, அந்த வெப்பத்தினால் யாவருக்கும் நன்மையே தவிர தீமை இல்லை. இதன் பயனாக உலகிலுள்ள மாசை அகற்றித் தூய்மை செய்கிறான். உதாரணமாக, சூரியனின் மிகக் கடுமையான வெப்பம் தாக்குமானால் ஆகாச கங்கை வற்றிப் போயிருக்குமே! அதற்குப் பதிலாக அதில் மலர்ந்துள்ள தாமரைகளால் ஆகாசகங்கை அழகாகவல்லவா காட்சி தருகிறது! ... இது மட்டுமா? இந்திரனுடைய நந்தவனத்திலுள்ள மரஞ்செடிகள் சூரிய வெப்பத்தால் காய்ந்திருக்க வேண்டுமே! மாறாக அந்த நந்தவனம் காயவில்லையே! செழுஞ்சுடர் விட்டுக் கிளர்ந்து கொண்டிருக்கும் தளிர்களுடன் மலர்களும் அல்லவா பூத்துக் குலுங்குகின்றன. இது மட்டுமா? ... சூரியனின் வெப்பம் மிகக் கடுமையாக இருப்பின் தேவர்களின் பர்வதமான மேருசிகரம் உருகிப் போயிருக்குமே! மாறாக அது தங்கமயமாக மின்னுகிறதே! ஆகவே, சூரியன் தனது கடுமையான வெப்பத்தை ஆகாய வீதியிலேயே பரப்பும்போது, மிகவும் கருணையோடு மென்மையாக்கி மாசுகளை அகற்றி நன்மைகளையே செய்கிறான். இத்தகு ஆற்றல் பொருந்திய சூரியன் உங்களுக்கு அருள் புரிவானாக.

ध्वान्तस्यैवान्तहेतुर्नभवति मलिनैरात्मनः पाप्मनोऽपि

प्राक्पादोपान्तभाजां जनयति न परं पङ्कजानां प्रबोधम् ।

कर्ता निःश्रेयसानामपि न तु खलु यः केवलं वासराणां

सोऽव्यादेकोद्यमेच्छाविहितबहुबृहद्विश्वकार्योऽर्यमा वः ॥ ८४

ध्वान्तस्यैव मलिनः मलीमसः यः आस्तां सः, एक एव आत्मस्वरूपं यस्य तस्य ध्वान्तस्यैव योजन परं न केवलं अन्तर्हेतुर्भवति नाशकारणं भवति, किन्तु प्राक् ततः पूर्वमेव, मलिनैरात्मनः पाप्मनोऽपि पापस्याप्यन्तहेतुर्भवति तथोपजातामेवपरं, केवलं प्रबोधं निजभावं न जनयति किन्तु ततः प्रागेव पादोपान्तभाजामपि स्वचरणपर्यन्तगतानां भक्तानामपि, प्रबोधं तत्वज्ञानं जनयति, तथा वासराणां अह्नां एव न केवलं कर्ता, अपि तु ततः प्रागेव निःश्रेयसानामपि आश्रित जनस्य मोक्षप्रदत्वात् । शब्दः खलु शब्दश्च । वाक्यालङ्कारार्थः । एवं एकोद्यमेच्छाविहितबहुबृहद्विश्वकार्यः एकोद्यमेच्छा उदयाख्यस्यैकोद्यस्येच्छा, विहितानि अनुष्ठितानि, बहूनि अनेकानि बृहन्ति गुरूणि, विश्वस्य कार्याणि ध्वान्तध्वंसादीनि येन सः तथोक्तः अर्यमा वः अव्यात् ॥ ८४

த்வாந்தஸ்யைவ - அந்தஹேதுர் ந பவதி

மலிநை: - ஆத்மந: பாப்மநோ(அ)பி

ப்ராக்பாதோபாந்தபாஜாம்

ஜநயதி ந பரம் பங்கஜாநாம் ப்ரபோதம் ।

கர்தா நி:ச்ரேயஸாநாம் - அபி - ந து

கலு ய: கேவலம் வாஸராணாம்

ஸோ(அ)வ்யாத் - ஏகோத்யமேச்சா-

விஹிதபஹுப்ருஹத் - விச்வகார்யோ(அ)ர்யமா வ: ॥

சூரியனின் செயல் தனித் தன்மையானது என்று கூறுகிறார் மயூரகவி.

மிகக் கடுமையான இருளை மட்டும் அவன் நீக்கவில்லை. பக்தர்களின் பாவங்களையும் நீக்குகின்றான். கீழ்த்திசையில் தாமரைகளை மட்டும் மலரச் செய்யவில்லை. விடியுமுன்னே தன் திருவடி தொழுது காத்து நின்றவர்களின் உள்ளங்களையும் மலர்விக்கின்றான். 'நாள்' என்னும் தினத்தை மட்டும் அவன் தோற்றுவிப்பதில்லை. தனது அடியார்களுக்கு நிகரில்லா மேன்மைகளையும் அருளுகிறான். அவன் செய்வதென்னவோ ஒரு முயற்சி தான் 'உதயமாவது' என்பது. அதன் விளைவுகள் எல்லாம் உலகுக்கு நன்மையாகவே நிறைகின்றன. அத்தகைய சூரியதேவன் உங்களைக் காக்கட்டும்

लोटँल्लोष्टाविचेष्टः श्रितशयनतलो निःसहीभूतदेहः

सन्देही प्राणितव्ये सपदि दश दिशः प्रेक्षमाणोऽन्धकारम् ।

निःश्वासायासनिघ्नः[1] परमपरवशो जायते जीवलोकः

शोकेनेवान्यलोकाभ्युदयकृति[2] गते यत्र सोऽर्कोऽवताद्वः ॥ ८५

